# ஜகன்மோகினி



ஜனவரி '42
மார்கழி
அ 2 ண

வை.மு.கோதைநாயகி அம்மாள்

சாந்தா ஆப்தே ◆
M.S. சுப்புலக்ஷ்மி நடிக்கும்





# சாவித்திரி

## பிரபாத் டாக்கீஸில்

**2-1-'42** வெள்ளி முதல் ● **12**-வது வாரம் ✱ தினசரி **3** காட்சிகள்

### கீழ்க்கண்ட இடங்களிலும் ஓடுகிறது :

| | | | | |
|---|---|---|---|---|
| மதுரை | ... | சிந்தாமணி டாக்கீஸ் | 18-வது | வாரம் |
| நாகர்கோயில் | .... | பயனீர் பிக்சர் பாலஸ் | 5-வது | ,, |
| பெங்களூர் | ... | ஸாகர் டாக்கீஸ் | 4-வது | ,, |
| ராமனாதபுரம் | ... | ராமனாதன் டாக்கீஸ் | 4-வது | ,, |
| புதுச்சேரி | ... | கமர்ஷியல் டாக்கீஸ் | 3-வது | ,, |
| ஸ்ரீரங்கம் | ... | ஸ்ரீரங்கராஜா டாக்கீஸ் | 3-வது | ,, |
| கொச்சி | ... | ஸெலக்ட் டாக்கீஸ் | 3-வது | ,, |
| பம்பாய் | .... | பிராட்வே டாக்கீஸ் | 3-வது | ,, |
| ஈரோட் | ... | நியூ தியேட்டர்ஸ் | 3-வது | ,, |
| தொடுப்புழா | ... | பங்கஜம் டாக்கீஸ் | 2-வது | ,, |
| சித்தூர் ஸி. எஸ். | ... | சீதாராம் டாக்கீஸ் | 2-வது | ,, |
| பொள்ளாச்சி | ... | செல்லம் டாக்கீஸ் | 28-12-41 | முதல் |
| சிவகங்கை | ... | கோகிலா டாக்கீஸ் | 29-12-41 | ,, |
| கரூர் | ... | ராயல் டாக்கீஸ் | 29-12-41 | ,, |
| சிதம்பரம் | ... | ராமலிங்கா டாக்கீஸ் | 29-12-41 | ,, |

சாந்தா ஆப்டே, எம். எஸ். சுப்புலக்ஷ்மி "சாவித்திரி" பாடல்களை

H. M. V. ரிகார்டுகளில் கேளுங்கள்

## TO ADVERTISERS

We and our Advertising agents, THE MADRAS PUBLICITY have great pleasure in sending you our *hearty greetings for a happy and prosperous new year.* We have pleasure in announcing that this year we are reserving a good bulk of our columns for the use of the advertising clientele for our mutual advantage. "Jaganmohini" commands the record circulation among Tamil monthlies, and your advertising message will reach tens of thousands of our regular readers. Such wide publicity costs you very little. For full particulars apply to: *Messrs. Madras Publicity, Triplicane. P.O.*

*Manager.*


# 19-வது ஆண்டுப் பரிசுகள் விபரம்

1941-ம் வருஷம் டிஸம்பர் 26-ந்தேதிக்குள் சந்தா அனுப்பியவர்களில் கீழ்க் கண்டவர்களுக்குப் பரிசுகள் விழுந்திருக்கின்றன. அவரவர் பெயருக்கெதிரே குறிப்பிட்டுள்ள தொகையை தபாற்செலவுக்காக மணியார்டர் செய்து, தங்களுக்கு வேண்டிய நமது நாவல்களைத் தெரிவித்தால் அனுப்புகிறோம்.

| ந. | ரூ. | சந்தா ந. | | விலாசம். | போஸ்டேஜ். ரூ. அ. |
|---|---|---|---|---|---|
| 1. | 20 | G. 267 | Sri. | G. Gangadhar, c/o WIMCO Ltd., Clutterbuck Ganj, Bareilly, U. P. | 2 11 |
| 2. | 15 | P. 540 | ,, | V. PM. Periasami Achari, Goldsmith, Anbu Nilayam 26 B. Road, Mandalay. | 2 1 |
| 3. | 10 | R.1056 | ,, | S. T. Rajavelu Mudaliar, 31, Karpaga Vinayakar Koil, St., Alandur. | 1 7 |
| 4. | 5 | A. 645 | Mr. | K. Abdul Hameed, 11 Chulia St,, Singapore. | 1 2 |
| 5. | 5 | R. 630 | Sri. | K. Ramasawmi Iyengar, 31—b, VenkatarangamPillai St., Triplicane. | (Local) |
| 6. | 5 | M. 292 | ,, | L. R. Meenakshi, 30-3, Lucias Lane, Kotahena, Colombo. | 0 13 |

# பிப்ரவரி 26-ந் தேதிக்குள்

சேரும் சந்தாநேயர்களுடைய நம்பர்களைக் குலுக்கிப்போட்டு, 6 சீட்டுகளெடுத்து அவற்றிற்கு மேற்கண்ட தொகையுள்ள புத்தகங்கள் பரிசாக கொடுக்கப்படும்.

இதற்கடுத்த இதழ் உங்களுக்குக் கிடைக்காவிடில் உடனே வருஷ சந்தா ரூபா 1-8 அனுப்பி, பத்திரிகையைத் தொடர்ச்சியாகப் பெற்றுக் கொள்ளுங்கள்.

ஸ்ரீராமஜெயம்.

# ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. —திருவள்ளுவர்.

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து. —ஸ்ரீ வீரராகவ கவி.


| மலர் 19 | விஷு வருஷ மார்கழிமீ ஜனவரி 1942 | இதழ் 1 |
|---|---|---|


ராகம்: மங்களநாயகி. தாளம்: த்ரிபுடை.

பல்லவி

மங்கள ரூபனே மஹிமை ப்ரதாபனே!
பங்கயமலர் தாளா பக்தா நுகூல! (ம)

அநுபல்லவி

சங்கு சக்ராயுதா சாரங்க ஹஸ்தனே
சங்கடம் தவிர்த்தின்பம் பொங்கிடச் செய்திடும் (ம)

சரணம்

அலைகடல் துரும்பென அலைந்திடும் நெஞ்சுக்கோர்
நிலையிடம் காட்டிட நிமலனே அரிதோ
மலர்க்குழலாள் கோதா மன்னவனே உந்தன்
மலரடி தந்தென்தன் மனக்குறை தீர்த்தருள். (ம)

## அட்டவணை

பக்கம்.


| | | |
|---|---|---|
| க்ஷேமலாபங்கள்— | ஆசிரியை. | 3 |
| மார்கழி நோன்பு— | "பி. ஸ்ரீ." | 5 |
| அன்னை கஸ்தூரி பா— | எஸ். அம்புஜம்மாள். | 9 |
| பெண்களும், காந்தியடிகளும்— | "குமுதினி" | 14 |
| அநுபவநீதிசாரம்— | வை. மு. கோ. | 17 |
| எனது லில்லி—(போடோக்களுடன்)— | ஸ்ரீ. ஜானம்மாள். | 18 |
| விகட வெடிகள்— | "விருச்சிகம்" | 21 |
| சித்திர ரகளை— | "கார்த்திகை" | 22 |
| திருப்பதி யாத்திரை—4-வது பகுதி— | வை. மு. ஸ்ரீ. | 23 |
| வாணியின் பிரஸாதம்—ஸ்வரப்படுத்தியவர்— | ஏ. பார்த்தஸாரதி. | 25 |
| வனிதாமண்டலம்— | வை. மு. கோ. | 28 |
| ரேடியோ டயரி— | "நித்யானந்தர்" | 29 |
| ஸ்ரீ கிருஷ்ணாமிர்தம்—(கீதாஸாரம்) | "கற்றுக்குட்டி" | 31 |
| திருவையாறு—படங்கள்— | "ஸ்ரீவத்ஸன்" | |
| ஞானதீபம்—புதிய தொடர் நாவல் | வை. மு. கோ. | 1–32 |




பொங்கலோ! பொங்கல். சக்கரைப் பொங்கல், பால் பொங்கல். எங்குங் கண்ட திருமேனியாய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ பார்த்தஸாரதியின் பரம கிருபையால் நம்மெல்லோருடைய வீட்டிலும் பால் பொங்கி மங்களமும் ஆனந்தமும் பொங்கச் செய்யவேண்டுமாய் எம்பெருமானின் திருவடி பணிந்து வேண்டுகிறேன். அவரது கடாக்ஷத்தினுலும், உங்களது பேராதரவினுலும் மோகினிக்கு 19-வதாண்டு பிறந்துவிட்ட சந்தோஷத்தை உங்களுடன் நானும் கொண்டாடிக் களிக்கின்றேன்.

உலகத்தில் பல பாகங்களில் யுத்த முழக்கங்களும், அக்ரமமான அழிவும் பயங்கரமும் ஒன்று கூடி பாதிப்பதைக் காண மிகவும் வருத்தமாகவிருக்கிறது. இத்தகைய நெருக்கடியான சமயத்தில் மகத்தான ஆபத்தை ஒரு நொடிப்பொழுதில் களைந்து நமக்கு க்ஷேமத்தையும் ஜெயத்தையுங்கொடுத்து ரக்ஷிக்கவேண்டுமாய், ஸ்ரீபரந்தாமனை—விஜயனுக்கு ஸாரத்யம் செய்து, மக்கள் உய்யும்பொருட்டு நிகரிலாத கீதையை உபதேசம் செய்து, பாரத யுத்தத்தில் ஜெயக்கொடியை நாட்டி சங்கநாதம்செய்த ஸ்ரீ கீதாசார்யனை—ப்ரார்த்திப்போமாக.

இத்தகைய யுத்த புசல்காற்றினுல் பலவிதமான கஷ்டங்களும் பயமும் இருக்கும்போதுங்கூட அன்பர்கள் இத்தனை வருஷங்களைவிட இவ்வருஷம் தமது இணையிலாதபெருதவியைஅபாரமாயளித்து உத்ஸாகத்தைக் கொடுத்ததற்காக அன்பர்கள் எல்லோருக்கும் எனது நன்றிவிச்வாசத்துடன்கூடிய வந்தனத்தை மனப்பூர்வமாகச் செலுத்துகிறேன். நமது மோகினியின் ஏஜண்டுகளில் பலர் தமது ஊக்கத்தைக் காட்டி ஆர்டர்களை அதிகரிக்கச் செய்திருப்பதற்காக அவர்களுக்கும் நான் எனது மனப்பூர்வமான நன்றியையும் வந்தனத்தையும் செலுத்துகிறேன். மற்றையோரும் உதவியளிக்க வேண்டுகிறேன்.

நிற்க, நம் "கலாநிலயம்" என்கிற புதிய நாவலை ஆரம்பித்தகாலத்திலிருந்த நிலைமையும், சில தினங்களுக்குள்ளாகவே கொடிய யுத்தத்தின் காரணமாக மாறியுள்ள நிலைமையும் நேயர்களறிந்ததேயாகும். மேற்கண்ட காரணத்தால் அதற்கான செலவும் அபாரமாக மிஞ்சிவிட்டதெனினும் நாம் முன்பு சொல்லியதைத் தவருமல் டிஸம்பர் கடைசீவரையில் பணமனுப்பிய நேயர்களுக்கு, 12 அணுவுக்கே கொடுக்கிரும். ஜனவரிமாதம் கடைசீ வரையில் ஒரு ருபாயிக்கு தபால்செலவு இனமாகக் கொடுக்கப்படும். பக்கங்களும், படங்களும் எதிர்பார்த்ததைவிட அதிகரித்துவிட்டதால் புத்தகம் வெளிவரத் தாமதமாகிறதற்கு அன்பர்களிடம் மன்னிப்பு கோருகிறேன். 7-ந் தேதி புத்தகம் தயாராகி அன்றுமுதல் அவ்வாரத்துக்குள் எல்லோருக்கும் (Under certificate of posting) அனுப்பப்படும் "இதை கவனமாகப் படித்து அன்பர்கள் இப்பஞ்சகாலத்தில் தாமதத்தைப்பற்றி கடிதம் எழுதாதிருக்கும்படி வேண்டுகிறேன்.



ஜகன்மோகனனின் கிருபையால் இந்த ஆண்டில் நம் 'ஜகன்மோகினி' புதிய உருவத்தில் புதிய மணங்கமழ, பல புதிய அம்சங்களுடன், அன்னை கஸ்தூரிபாவின், உருவப் படத்துடன் உங்களை மகிழ்விக்கவருகிறாள். புதிய நாவல் 'ஞானதீபம்' ஆரம்பமாகிறது.

பிரபல எழுத்தாளர்களின் கட்டுரைகள் நம் மோகினியை அழகுபட அலங்கரித்திருக்கின்ற பெருமையைச் சந்தோஷத்துடன் எடுத்துக் கூறுகிறேன். ஸ்ரீமான் பி. ஸ்ரீ. ஆசார்யா, ஸ்ரீமதிகள். அம்புஜம்மாள், குமுதினி, ஜானம்மாள். முதலியோரின் வெகு பொருத்தமான கட்டுரைகளை நீங்கள் படித்து உள்ளம் மகிழ்வீர்கள். அவர்களெல்லோருக்கும் எனது மனப்பூர்வமான வந்தனத்தைச் செலுத்துகிறேன்.

இனி பிரதி மாதமும் நம் மோகினியில் சிறந்த எழுத்தாளர்களின் அதிமாதுர்யமான சிறு கதைகள், கட்டுரைகள் முதலியன காணலாம்.

'ஸ்ரீகிருஷ்ணாம்ருதம்' என்ற தொடரில் ஸ்ரீமான் கற்றுக்குட்டியவர்கள் ஸ்ரீபகவத்கீதா ஸாரத்தை எழுத ஆரம்பித்திருக்கிறார். அது உங்களெல்லோருக்கும் பிடித்தமாயும் ஸ்வாரஸ்யமாயுமிருக்குமென்று நம்புகிறேன்.

நிற்க, பல நண்பர்கள் மோகினிக்குத் தமது இதயபூர்வமான வாழ்த்துக்களை எழுதியிருக்கிறார்கள். பின்னும் சிலர் தம்தம் நண்பர்களைச் சந்தா சேர்த்து உதவியிருக்கிறார்கள். அவர்கள் எல்லோருக்கும் எனது மனப்பூர்வமான வந்தனங்களைச் செலுத்துகிறேன்.

வாணியின் பிரஸாதம் சென்ற சில மாதங்கள் எதிர்பாராத தடங்கல்களினால் நின்றிருந்ததைப்பற்றி, பலபேர் கடிதம் எழுதியிருக்கிறார்கள். இனி மேல் மாதாமாதம் சரியாகவருமென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றேன்.

இன்னொரு சந்தோஷச் செய்தி. சுடர்விளக்கு வெளியான 3 மாதங்களுக்குள் முற்றும் செலவழிந்து இரண்டாம் பதிப்பு தயாராகிவிட்டது.

நிற்க, நமது மோகினியின்பால் அன்புகொண்டுள்ள பல்லாயிரக்கணக்கான நண்பர்களில் மலாயாவிலும் மற்ற கிழக்கு ப்ரதேசங்களிலும் ஏராளமானவர்கள்—ஏஜண்டுகள் உட்பட—பேராதரவளித்து வருகிறார்கள். அந்த ப்ரதேசத்தில் 7-ந் தேதி யுத்தம் தொடங்கும் வரையில் புது வருஷத்திய சந்தாவையும் புதிய நாவலின் கிரயத்தையும் நூற்றுக்கணக்கானவர்கள் அனுப்பியிருப்பது டிஸம்பர் கடைசியில்தான் வந்து சேர்ந்தன. அங்கு தற்கால யுத்தக் கொடுமையின் பயங்கரத்தில் யார் யார் எங்கிருக்கிறார்களோ ! என்னவானார்களோ ! என்கிற கவலை அதிகமாயிருக்கிறது. இக் கொடிய காலத்தின் தாண்டவம் நீங்கி எல்லோருக்கும் ஒருவிதமான ஆபத்துமின்றிக் காக்கவேண்டுமாய் எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகிறேன். கால நிலையை உத்தேசித்து சஞ்சிகை அவர்களுக்குஇப்போதுஅனுப்பமுடியாதிருக்கிறது. சீக்கிரத்திலேயே அவர்களுக்கு சந்தோஷமுண்டாகவும், மோகினி அவர்களைத் தாவிச்சென்று மகிழ்விக்கவும் இறைவன் அருள்பாலிப்பாராக.

ஏற்கனவே அறிவித்தபடி, இந்த முதல் இதழ் சந்தா செலுத்தியவர்களுக்குமட்டுந்தான் அனுப்பப்பட்டிருக்கிறது. வை. மு. கோ.

## ஸ்ரீமான் பி. ஸ்ரீ. ஆசார்யா.

ஸ்ரீமான் பி. ஸ்ரீ. ஆசார்யார் அவர்களை தமிழ்நாட்டிற்கு நாம் புதிதாக அறிமுகம் செய்யவேண்டுவதில்லை. கனிரஸம் போன்ற அவருடைய பல கட்டுரைகளையும், கம்பராமாயணச் சித்திரத்தையும் படித்து இன்புற்றிருக்கிறீர்கள். அத்தகைய சிறந்த எழுத்தாளர் நமது மோகினியின் பாலன்பு கொண்டு எழுதுவது இதுவே முதல் தடவையாகும். இம் மார்கழிமாதத்திற்குகந்த 'மார்கழி நோன்பு' என்ற கட்டுரையை காலத்திற்குப் பொருத்தமாகவும், சைவ வைஷ்ணவ ஐக்யத்தை விளக்கிக் காட்டியும் வெகு அருமையாய் எழுதியிருக்கிறார். இது எல்லோருக்கும் பெரும்விருந்தாக இருக்கும் என்பதில் ஐயமேது? —வை. மு. கோ.

# • மார்கழி நோன்பு •

"மாதங்கள் அனைத்திலும் மார்கழிமாதம் ஆகிறேன் நான்" என்று பகவத்கீதையில் பகவான் கூறியுள்ளார். 'சிறந்த பொருள்களிலெல்லாம் சிறந்த பொருள் பரம்பொருளாகிய நானே' என்று கூறி வரும்போதே மாதங்களில் தாம் மார்கழியென்பதால், இது ஒரு காலத்தில் முதன்மையான மாதமென்று மதிக்கப்பட்டதாக ஊகித்துக்கொள்ளலாம்.

இம்மாதத்திற்குரிய சிறப்புக்களில் மார்கழி நோன்பு என்பதும் ஒன்று. ஒருகாலத்தில் இந்த நோன்பு மார்கழிமாதத்தின் முக்கிய அம்சமாயிருந்ததென்றும் ஊகம் செய்துகொள்ளலாம்.

மார்கழி நோன்பு கன்னிப் பெண்களால் நோற்கப்பட்டது. அவர்கள் நல்ல புருஷரை அடையவும், நாடு செழிக்கவும் இந்த நோன்பை நடத்தினர்களென்று தெரிகிறது. இந்த நோன்பைப் பாவை நோன்பு என்று சொல்வதுமுண்டு. பாவை என்றால் பெண்; இங்கே கன்னிப்பெண்.

### திருப்பாவை

இப்பெண்கள் அதிகாலையில் துயிலுணர்ந்தெழுந்து பகவந்நாம சங்கீர்த்தனம் செய்துகொண்டும், பகவானுடைய அருளைப் பாடிக்கொண்டும் நீராடப் புறப்படுவார்கள். போகும் வழியிலே, 'வாருங்கள்! வாருங்கள்!' என்று பரபரப்பாகத் தோழிமாரையும் எழுப்பி அழைத்துக்கொண்டு போவார்கள்.

"மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்:
நீராடப் போதுவீர்! போதுமினோ நேரிழையீர்!"

என்று தொடங்கும் பாடல்களைக் கேட்டிருக்கிறீர்களல்லவா? இவை நமது நாட்டில் விஷ்ணுபக்தர்களுக்கிடையே பிரசித்தமாக வழங்கும் திவ்யப் பிரபந்தப்பாடல்கள். மார்கழிநோன்பு என்ற பாவை நோன்பை வருணிக்கும் இப்பாடல்களுக்குத் திருப்பாவையென்றுபெயர். பன்னிரண்டு ஆழ்வார்களில் ஒருவராக மதிக்கப்படும் ஆண்டாள் இயற்றிய அழகான பாடல்கள் இவை.

இந்தப் பாடல்களில், பெண்கள் ஒருவரையொருவர் உறவு கொண்டாடி அழைப்பதும், ஒருவரோடொருவர் சம்பாஷிப்பதும், இவர்களுக்கிடையே பரிகாசமான வார்த்தைகள் சிறகு கட்டிய அம்புகள்போலப் பறப்பதும் அழகாய் அமைந்திருக்கின்றன.

### பக்திக்காதலும் நாட்டுக்காதலும்

இந்த நோன்பினால் நாடு செழிக்கும் என்ற நம்பிக்கைதான் எவ்வளவு குதூகலமாக வெளியிடப்படுகிறது:

"ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள்நம் பாவைக்குச் சாற்றிநீ ராடினல்,
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள்மும் மாரிபெய்(து)
ஓங்கு பெருஞ்செந்நெ லூடு கயல்உகள,
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்ப,
..........................................................
வாங்கக் குடம்நிறைக்கும் வள்ளற் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோர் எம்பாவாய்"

நாட்டிலே நோய், பஞ்சம் ஒழிந்து மாதம் மும்மாரி பெய்யுமாம்—அதாவது: ஒன்பது நாள் வெயிலும் ஒருநாள் மழையுமாயிருக்குமாம். ஓங்கி வளர்ந்த செந்நெற் பயிர்களினூடே கயல் மீன்கள் துள்ளிக்கொண்டிருக்குமாம். இதனல் செந்நெலும் பக்கத்திலுள்ள நீல மலரும் ஒருங்கே அசைய, அந்த மலர்களிலே மது உண்ட வண்டுகள் மயங்கிக் கிடக்குமாம், தூங்கு மஞ்சத்திலே கண்வளரும் இராஜ குமாரர்களைப் போலே. பசுக்களோ, சளைக்காது கொடுக்கும் வள்ளல்களைப்போல் வாங்க வாங்கக் குடங் குடமாக நிறைத்துக்கொண்டேயிருக்குமாம். இப்படிப்பட்ட பசுக்களை,

"ஏற்ற கலங்கள் எதிர்போங்கி மீதளிப்ப,
மாற்றதே பால்சொரியும் வள்ளற் பெரும்பசுக்கள்"

என்றெல்லாம் போற்றுகிறார்கள் கோகுல வாசிகளான கோபிகா ரமணிகள்.

மழைபெய்து ஊரும் நாடும் வாழவேண்டுமென்று மார்கழி நோன்பு நோற்கிறவர்கள், தாங்களும் ஜகன்மோகன கோபாலனுடைய காதலைப் பெற்று வாழவேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். அப்பெருமானுடைய அருள், மழைபோல் இறங்கி வரவேண்டுமென்று பிரார்த்திக்கிறவர்கள், அவனுடைய அருள்போல் மழை பெய்து நாடெல்லாம் செழிக்க வேண்டுமென்றும் பிரார்த்திக்கிறார்கள். கிருஷ்ண விரகத்தால் தவிக்கும் இருதயங்களும் மழையில்லாமல் தவிக்கும் நிலம்புலங்கள் போன்றவைதானே!

## பக்தர் கண்ட தமிழ்நாடு

'சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமிகள்' என்று சொல்லப்படும் கோபிகா ரமணிகளின் இத்தகைய காதலில், ஆண்டாளின் பக்திக் காதலையும் பார்க்கிறோம். மனோபாவம் அல்லது பாவனு சக்தி முதிர முதிர, ஆண்டாளின் பக்தியுள்ளம் கால வெள்ளத்தை எதிர்த்து நீந்திப்போய், ஆய்ப்பாடி அல்லது கோகுலத்திலே குடியேறிவிட்டது. பாவனு சக்தியின் முதிர்ச்சியால், இவர் கண்ட தமிழ்நாடே இவருக்கு ஆய்ப்பாடி யாகிவிட்டது. இந்த நிலையிலேதான் பாவை நோன்பைக் குறிக்கும் திருப்பாவையென்னும் இசைத் தமிழ் பிறந்தது.

சிவபக்தியுள்ள பெண்மணிகளும், மார்கழி மாதம் திருவாதிரைக்கு முன் பத்துத் தினங்களில் இப்பாவை நோன்பை அனுஷ்டித்து, மனைகள் தோறும் அழைத்து விடியற்காலத்தில் ஒன்றுகூடி நீராடுவதுண்டு. இந்த இயல்பு கண்ட சிவநேசச் செல்வரான மாணிக்கவாசக சுவாமிகள், அத்தகைய பெண்மணிகளின் காதலோடு தம்முடைய பக்திக் காதலையும் கலந்து சில அழகான பாடல்கள் பாடியிருக்கிறார். இப் பாடல்களைத் திருவெம்பாவை யென்று சொல்லுகிறார்கள்.

திருப்பாவையின் தொடக்கத்திலே குறிக்கப்படும் 'மார்கழி நீராடல்' திருவெம்பாவையில் இறுதிப்பாட்டின் இறுதியடியிலே,

"போற்றியாம் மார்கழிநீ ராடேலோர் எம்பாவாய்"

என்று பிரஸ்தாபிக்கப்படுகிறது. இங்கும் உறக்கத்திலிருந்து எழுந்த பெண்கள் சிவபெருமானைப் பாடிக்கொண்டு நீராடப்போகும் வழியிலே உறங்கிக்கொண்டிருக்கும் தோழிமாரை எழுப்புவதைப் பார்க்கிறோம். பெண்கள் ஒருவரோடொருவர் சம்பாஷிப்பதையும், ஒருவரையொருவர் பரிகசிப்பதையும் பார்க்கிறோம். இந்த நோன்பினுல் நாடு செழிக்க மழை பெய்யும் என்ற குறிப்பும் திருவெம்பாவையில் காணப்படுகிறது. இதில் உத்தமர்களான சிவனடியார்களே தங்களுக்குக் கணவராக வேண்டுமென்ற பிரார்த்தனையும் காணப்படுகிறது.

திருவெம்பாவைக்கும் திருப்பாவைக்குமுள்ள ஒற்றுமை அதிகம். உதாரணமாகத் திருவெம்பாவையிலுள்ள மழைப்பாட்டைத் திருப்பாவையிலுள்ள மழைப்பாட்டோடு ஒப்பிட்டுப்பார்க்கலாம்.

### திருவெம்பாவையிலுள்ள மழைப்பாட்டு

"முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்(து), உடையாள்
என்னத் திகழ்ந்(து),எம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்(து),எம் பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி, நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள் நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்"

### திருப்பாவையிலுள்ள மழைப்பாட்டு

"ஆழி மழைக்கண்ணா! ஒன்றும்நீ கைகரவேல்!
ஆழியுள் புக்கு முகந்துகொ(டு) ஆர்த்தேறி
ஊழி முதல்வன் உருவம்போல் மெய்கறுத்து,
பாழியந் தோளுடைப் பற்பநா பன்கையில்
ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து,
தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழைபோல்,
வாழ உலகினில், பெய்திடாய்! நாங்களும்
மார்கழிநீ ராட மகிழ்ந்தேலோர் எம்பாவாய்"

திருப்பாவையும் திருவெம்பாவையும் தமிழ் இலக்கியப் பூங்காவனத்தை அழகு செய்யும் வாடாத கவிதைப் பூங்கொத்துகள். இப்பாடல்களில் நகைச் சுவையோடு ஒருவிதமான நாடகத்திறமையும் ஓசையின்பமும் தக்க முறையில் கலந்திருக்கின்றன. இந்த அமைப்புமுறை இப்பாடல்களை ரஸிகர்களுக்கு நல்விருந்தாக்குகிறது.

இப் பாடல்களில் ஆண்டாளும் மாணிக்கவாசக சுவாமிகளும் கண்ட தமிழ்நாடு எவ்வளவு செழிப்போடும் செல்வச் சிறப்போடும் பிரதிபலிக்கிறது!

### உறக்கமும் விழிப்பும்

"..........பண்டொரு நாள்
கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்ப கருணனும்
தோற்றும் உனக்கே பெருந்துயில்தான் தந்தானே?"

என்று திருப்பாவையிலே பரிகசிக்கப்படும் தோழியின் உறக்கம் நமது நாட்டின் க்ஷீணகதியான உறக்கத்திற்கும் அறிகுறியென்று கருதலாம்.

கும்பகர்ணன் 'உயில்' எழுதிவைத்துப் போனனும், பண்டைப் பழங் காலத்திலே—அன்று எமன் வாயில் விழுவதற்கு முன்னமே. அவன் தன்னுடைய ராட்சஸ பலம், கொடுமையான வீரம், ஜாதிகர்வம்; சகோதர வாஞ்சை முதலியவற்றை யார் யாருக்குக் கொடுத்தானே? "ஆனல் அந்த நாளிலே அந்தப் பெருந்தூக்கத்தை மட்டும், தோழீ! உனக்குத்தான் எழுதித் தந்து விட்டானே?" என்று பரிகசிக்கிறார்கள், வீட்டு வாசலில் நிற்கும் பெண்மணிகள் உள்ளேயிருப்பவளை நோக்கி. இதே தோரணையில் அன்னிய நாடுகளும் நம்மைப் பரிகசித்த வண்ணமாயிருந்தன அல்லவா?

ஆனல் கும்பகர்ணனுடைய ராட்சஸ சுபாவம் முதலியவை தற்கால யந்திர ராட்சஸர்கள் மூலமாக ஆவேசித்து உலகத்தை என்ன பாடு படுத்தி வருகின்றன! நம்முடைய கும்பகர்ண உபாசஸனையும் ஒருவருக்கும் நன்மை தருவதில்லையே!

இந்தியா தன் பேருறக்கத்தை உதறித் தள்ளிவிட்டு,

"மாரி மலைமுழைஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும்
சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீவிழித்து
வேரி மயிர்பொங்க எப்பாடும் பேர்ந்(து) உதறி,
மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப்
போதருமா போலே"

கம்பீரமாகப் புறப்பட்டுத் தனக்குரிய பக்திப் பிரசாரத்தையும் தர்மப் பிரசாரத்தையும் செய்ய முற்படவேண்டும்.

## ஸ்திரீகளின் விசேஷ தர்மம்

தற்கால உலக நோய்களுக்கெல்லாம் ஓர் அருமருந்தான அஹிம்ஸா தர்மப் பிரசாரத்தில் இந்திய ஸ்திரீகள் விசேஷமாய்ப் பங்கெடுத்துக் கொள்ளவேண்டும். ஸ்திரீகளுக்குப் பக்தியும் ஆத்ம சக்தியும் அதிகம். சக்தியின் அம்சமாகிய பெண்மணிகளை 'அபலை' களென்று குறிப்பிடுவது சரியன்று. எத்தகைய கொடுமையோடு கூடிய ராட்சஸ பலத்தையும் ஜயிக்கக்கூடிய சக்தி, ஸ்திரீகளின் பக்திமயமான அஹிம்ஸா தர்ம சக்தியே யாகும். அஹிம்ஸா தர்மத்தைப் பொதுவாக இந்தியாவின் ஸ்வதர்மமென்றும், சிறப்பாக இந்தியப் பெண்மணிகளின் விசேஷ தர்மமென்றும் சொல்லலாம்.

மார்கழி மாதம் கிருஷ்ண பட்சத்துக் காலைச் சந்திரிகையில் ஒருவரை ஒருவர் முகம் கண்டு, விஷ்ணு பக்தர்களும் சிவநேசர்களுமான பெண் மணிகள் பகவானுடைய அருளைப் பாடிக்கொண்டு நீராடி நிர்மலராய்க் காரியசித்தி பெறவும், நாடு செழிக்கவும் மார்கழி நோன்பு நோற்றார்கள். இக்காலத்துத் தமிழ்ப் பெண்மணிகளும் நாடும் உலகமும் முன்னேற்றமடையும்படி காந்தியடிகளின் அஹிம்ஸா தர்ம நோன்பிலே மனமுவந்து கலந்து கொள்வார்களென்று நம்புகிறோம்.

ஸ்ரீமதி. எஸ். அம்புஜம்மாள்.

தேச சேவையிலும், இலக்கியத்திலும் மிகவும் சிறந்து விளங்கும் ஸ்ரீமதி. S. அம்புஜம்மாளைப்பற்றி தமிழ்நாட்டில் அறியாதவர் உண்டா? அன்னாரின் கட்டுரைகள், 'சேவாசதனம்' "துளஸீராமாயணம்" மொழி பெயர்ப்புகளை நீங்கள் படித்துப் பேரானந்தமடைந்திருப்பீர்கள். "பாரதநாட்டின்திலகங்கள்" என்கிற தலைப்பின்கீழ்பாரதநாட்டுத் திலகங்களில் தலை சிறந்து விளங்கும் ஸ்ரீமதி. கஸ்தூரிபாய் காந்தி அவர்களைப்பற்றி நம் மோகினிக்கு முதல் கட்டுரையாக எழுதியிருப்பது மிகவும் பொருத்தமானதாகும். அந்தம்மையாரிடம் பல முறை நேரில்பழகி அனுபவித்துள்ள ஸ்ரீமதி அம்புஜம்மாளே அக்கட்டுரை வரைய யோக்யதையுடையவர் என்று கூறவும் வேண்டுமா? —வை. மு. கோ.




# அன்னை கஸ்தூரிபா

## (நான் பார்த்ததும் படித்ததும்)

### முதல் தரிசனம்

தென் ஆப்பிரிக்காவில் திறமையுடன் சத்தியாக்கிரகப் போரை நடத்தி வெற்றிமாலையுடன் தாயகம் திரும்பினார் ஸ்ரீமான் காந்தீ. அந்நாளிலும் தேசமெங்கும் குதூகல வரவேற்பு. சென்னைக்கும் அவரை வரவேற்கும் பாக்கியம் கிடைத்தது.

மாலைவேளை. அன்று 'அம்ஜத்பாகி'ல் ஒரு தோட்டக் கச்சேரி. பல வெள்ளித் தாலங்களில் பருப்பு, பழ வகைகளுடன் தேங்காய் வழுக்கலும் மணிலாக் கொட்டையும் வைத்திருந்தன. கூஜாக்களில் இனிப்பான இளநீர். (அக்காலங்களில் காந்திஜி அவைகளையே மிகவும் விரும்பி உண்டு வந்ததாகக் கேள்வி.)

காந்தி- தம்பதிகள் பலத்த கரகோஷத்திற்கிடையே வீட்டு வாசலில் வந்து இறங்கினார்கள். உடனே வட்ட மேஜைக்கு அழைத்துச் செல்லப் பட்டார்கள். ஆனால் அந்தத் தாலங்களைக் காலிசெய்தவர்கள் அவர்களில்லையாம். ஏகாதசி நிர்ஜல உபவாசத்தை அன்று அங்கே அந்தப் புண்ணிய தம்பதிகள் இருவருந்தான் அனுஷ்டித்ததாகப் பின்பு தெரியவந்தது.

நாங்கள்—ஸ்திரீகள்—உட்புற ஹாலில் இருந்தோம். என் உடம்பெல்லாம் ஒரே வைரமயம். உடுத்தியிருந்ததோ பனாரிஸ் பட்டு.

நாங்கள் இருந்த ஹாலுக்குள் நுழைந்தார் ஒரு மெலிந்த ஸ்திரீ, துல்லிய வெள்ளைப் பாவாடையும், மேல்தாவணியும், நீண்ட ஷர்ட்டுக் கை வைத்த வெள்ளை அங்கியுமாக. "இவர்தான் மிஸிஸ் காந்தி" என்று கூடவந்த ஒருவர் அறிமுகம் செய்தபிறகுதான் எங்களுக்கு நம்பிக்கை பிறந்தது.

ஒரு குன்றிமணியிடை பொன்னோ, வெள்ளியோ அவர் உடம்பில் காணவேணுமே? என்ன இனிமையான தோற்றம்! என்ன சுத்தமான உடை! என்ன சரளமான சுபாவம்! சற்றும் கர்வமின்றி எங்களுடன் சகஜமாய்ப் பேசினர் அப்பெண்ணரசி. அவர் முகத்திலே தாயன்பு சொட்டிற்று. அவரைப் பார்க்கப்பார்க்க, என் நகைகள் எனக்கொரு பெருஞ் சுமைபோலத் தோன்றலாயின. என் அந்தஸ்தில் எனக்கிருந்த அபார கர்வமும் அவர்முன் பெட்டிப் பாம்புபோல் அடங்கிவிட்டது. நான் தயார்செய்து வைத்த மணிலாக்கொட்டையையும், தேங்காய் வழுக்கலையும் ஏகாதசிவிரதத்தின் காரணமாக அவர் ருசி பார்க்கவுமில்லையென்று அறிய, என் நெஞ்சம் துடித்தது.

மறுதினம் வி. பி. ஹாலில் ஒரு மாபெருங்கூட்டம். கூட்டத்திற்கு முன் ரஸ்தாவில் 'ஸெண்ட்ரல்' வரை ஒரே ஜன சமுத்திரம்.

ஸ்ரீமதி கஸ்தூரிபாய் காந்தியை வி. பி. ஹாலுக்கு அழைத்துச் சென்ற நாங்கள் அந்தப் பெருங்கூட்டத்தைக் கண்டு பயந்துவிட்டோம். காரை விட்டு இறங்கக் கால் எழவில்லை. ஒரு வாலிபர் கஸ்தூரிபாயை உள்ளே அழைத்துச் செல்வதாகச் சொன்னர். உடனே அவர் சற்றும் தயங்காமல் காரை விட்டு இறங்கி அந்த வாலிபர் பின்னே அப்பெருங்கூட்டத்திடையே மறைந்துவிட்டார். அந்தக் காட்சி இன்னும் என் கண்முன் நிலவுகிறது.

'அந்தச் சிறிய மெலிந்த உருவத்தை அந்தப் பெரிய கூட்டம் என்ன செய்துவிடுமோ?' என்று எண்ணி நடுங்கிப் போனேன். 'என்ன மனுஷ்யன் இந்த காந்தி! தம் மனைவியை இப்பெருங் கூட்டத்தின் மத்தியில் ஒண்டியாக வரும்படி விட்டுச் சென்றாரே! இவருக்குத்தான் என்ன வன்னெஞ்சமோ?' என்று மனசுக்குள் காந்திமஹான்மீது கோபம் மூண்டது. "இந்தியப் பெண்களும் அச்சமின்றி வெளியில் செல்லக்கூடும்; தம்மைக் காத்துக் கொள்ளக்கூடும்; உலகிலே தைரியமாக நடமாடக்கூடும்; தேசத்திற்காகப் பல துறைகளிலும் சேவை செய்யவும், சிறை செல்லவும் கூடும்" என்ற படிப்பினை எம்மைப்போன்ற கோழைகளுக்கும்புகட்டவே, இத்தகைய பயிற்சியைத் தம் மனைவிக்கு மஹாத்மா அளித்து வந்தார் என்பது பின்னடி உணர்ந்துகொண்ட விஷயங்களல்லவா?

## மகாத்மாவின் மனைவி

இவ்விதமான பயிற்சிகளாலும் அனுபவங்களாலும் உருவாக்கப் பெற்ற குணாதிசயத்தையுடைய ஸ்ரீ கஸ்தூரிபாய் காந்தியை அறிந்துகொள்ளவேண்டிய அளவிற்கு உலகம் இன்னும் தெரிந்துகொள்ளவில்லை. ஆனல் காந்தியையோ மகாத்மாவாக—ஓர் அவதாரமூர்த்தி யென்றுகூட—நாம் கொண்டாடத் தொடங்கிவிட்டோம்.

'பழையன கழிதலும் புதியன புகுதலும்' என்றபடி தேச சரித்திரத்திலே அப்போதைக்கப்போது சில மாறுதல்கள் தோன்றுவது சகஜம். சமூக வாழ்க்கையைச் சீர்திருத்தவும், மனுஷ்யனுக்குச் சுபாவமாகவுள்ள துர்வாசனைகளைக் களைந்து ஆத்ம சுத்தி ஏற்படச் செய்யவும் அவசியமாகிறது. அக்காலங்களில் மகான்களின் அவதாரம் ஏற்படுகிறது என்னலாம். அந்த அந்த மகான்கள் அல்லது அவதார புருஷர்களின் பெயரை

வைத்து அந்த அந்த யுகத்தை அழைப்பது மரபு. ஏசுநாதரிலிருந்து கிறிஸ்து சகாப்தம் தொடங்கிற்று மேல் நாட்டிலே. இந்தியாவின் விக்கிரமாதித்திய சகாப்தமும் எதிர்காலத்தில் காந்தி சகாப்தமாக மாறக்கூடும். இத்தகைய மகான்களின் வாழ்க்கைத் துணைவியாக வாய்க்கப் பெறுவது பெரும் பாக்கியமே.

ஆனால் அந்த ஸ்தானத்தின் பொறுப்பை வகிப்பது எளிதான காரியமா? சாதாரணமான ஒருவனுக்கு மனைவி யென்ற நிலையிலேயே எவ்வளவோ புத்திசாலித்தனமாக நடந்து கொள்ளவேண்டியிருக்கிறது; தன் மனப்போக்கை விட்டுக் கொடுக்கவேண்டியிருக்கிறது; ஆசைகளைத் தூரக் கட்டி வைக்க வேண்டியிருக்கிறது; தணிந்து போக வேண்டியிருக்கிறது. காந்திஜி போன்ற மகான்களோ தம் லட்சியத்தை உலகத்திலே நிலைநாட்டப் பிறந்தவர்கள். அதற்காகத் தம்முடையன மட்டுமின்றி, தம் மனைவி மக்களுடையவும் உடல், பொருள், ஆவி, மூன்றையும் தியாகம் செய்யச் சித்தமாயிருப்பவர்கள். 'பிடிவாத' குணம் படைத்தவர்கள். உலக ரீதியை எதிர்த்து முன்வைத்த காலைப் பின்வாங்காது அஞ்சாநெஞ்சுடன் போராடி நிற்பவர்.

"वज्रादपि कठोराणि मृदूनि कुसुमादपि
लोकोत्तराणाम् चेतांसि कोनु विज्ञातुमर्हति ?"

—பர்த்ருஹரி.

என்றபடி மகான்களின் சித்தம் தம்முடையவும் தம் மனைவி மக்களுடையவும் விஷயத்தில் வைரத்தைவிட வன்மையுள்ளதாகவும், உலகத்தார் விஷயத்தில் புஷ்பத்தைவிட மென்மையானதாகவும் இருப்பது இயல்பு. அத்தகைய பெரியார் ஒருவரின் இல்லறம் யாதொரு இடையூறுமின்றி நல்லறமாக நடைபெறுவதென்றால், 'ஒளி வீசும் சுடர்விளக்கென' உள்ளே வீற்றிருந்து அவர் வாழ்க்கையை அமைதி பெறச் செய்யும் இல்லாள் எப்படியிருக்க வேண்டும்? பதிபக்தி, பணிவு, அடக்கம், சகிப்புத் தன்மை, எல்லோரையும் தம் மக்கள் எனப் பாவிக்கும் தாயுள்ளம், தியாகபுத்தி இவைபோன்ற அரும்பெருங் குணங்களைப் படைத்த இயல்புடையவளாக இருப்பது அவசியமன்றோ?

மேற்சொன்ன நற்குணங்கள் அன்னை கஸ்தூரிபாயிடம் மலிந்திரா விட்டால், 'மகாத்மா' உண்மையில், ஒரு மகாத்மாவாகி யிருக்கமுடியாது. மகாத்மா காந்தி ஒரு சிறந்த யோகியாகவோ, துறவியாகவோ மட்டும் இருந்திருக்க முடியுமேயன்றி, அடிமை-இந்தியாவுக்கு வழி காட்டும் ஒரு தீர்க்கதரிசியாக—ஒரு லட்சிய புருஷனாக,—இந்தியாவின் ராஜீய, சமூதாய, பொருளாதாரத் துறைகளில் இறங்கித் தீவிரமாய்ச் சேவை செய்யும் ஓர் இணையற்ற கர்ம வீரனாகப் பரிணமித்திருக்கமுடியாது. இனி 'இத் தம்பதிகளின் குணாதிசயங்கள் ஒன்றையொன்று எப்படி உருவாக்கின?'—என்று பார்ப்போம்.

## தியாகவித்து

"தோட்டி வேலை மிக இழிவானது; அதைச் செய்பவர் இழிந்த ஜாதியினராக இருப்பவர்!" என்ற தப்பான கொள்கையை மகாத்மா காந்தி மிகவும் வெறுத்துவந்தார். தாம் வசிக்கும் வீட்டையும் ஊரையும் சுத்தமாக வைத்துக்கொள்வது நம் எல்லோருடைய கடமையாகையால், உயர்குலத்தோரும் அப்பணியை மேற்கொள்ளவேண்டியது என்பது மகாத்மாவின் கொள்கை,

தென் ஆப்பிரிக்காவில் அவருடைய இல்லத்தில் அவருடன் கூட ஒரு கிறிஸ்துவ ஏஜெண்டும் வசித்துவந்தார். (அந்தப் பக்கத்து வீடுகளில் பம்பாய்க் கக்கூஸ் கிடையாது.) இரவில் படுக்கையறைகளில் 'மூத்திரச் சட்டி' (Chamber Pot) வைப்பது வழக்கம். இவைகளை வீட்டு வேலைக்காரர்கள் சுத்தி செய்வார்கள். காந்திஜி இல்லத்தில் வேலைக்காரர் ஏது? மகாத்மா அல்லது அவர் தர்மபத்தினி கஸ்தூரிபா தான் அச் சட்டிகளைச் சுத்தம் செய்வது வழக்கம்.

கஸ்தூரி பாவுக்குத் தன் கணவன், குழந்தைகளின் சட்டிகளைச் சுத்தம் செய்வதுபோல, ஏஜெண்டின் சட்டியையும் மனமுவந்து சுத்தி செய்யக் கூடாமற் போய்விட்டது. ஒரு சமயம் கண்கள் சிவந்து, முத்து முத்தாகக் கன்னங்களில் நீர் பெருகியோடச் சட்டியும் கையுமாக அவ்வேலையில் ஈடுபட்டிருந்த கஸ்தூரிபாவை மகாத்மா கண்டுவிட்டாராம். அது அவருக்குப் பொறுக்காமற் போய்விட்டது. "இம்மாதிரி முரண்டுகளுக்கு என் வீட்டில் இடமில்லை. உனக்கு இவ்வேலைகள் பிடிக்காவிட்டால், இந்த வீட்டை விட்டு வெளியே போய்விடு" என்று கடுமையாகக் கூறினாராம். "எனக்கு இங்கே தாய் தந்தையர் இல்லை. உங்கள் வீட்டைவிட்டுத் துரத்தினால், நான் வேறு எங்கே போவது?" என்று அழுதுகொண்டே கேட்டாராம் கஸ்தூரிபா. அவருடைய அந்தப் பணிவான சொல் காந்திஜியின் மனசில் சுறுக்கெனத் தைத்தது. தன் தவறுதலை அவர் உணர்ந்துகொண்டார். அதுமுதல் காந்திஜி கஸ்தூரிபாவை அம்மாதிரியான பணிகளைச் செய்யும்படி தூண்டுகிறதில்லை. ஆனாலும் கஸ்தூரிபா தாமே மனமுவந்து முன்வந்து அவ்வேலைகளைச் செய்வது சகஜமாகிவிட்டது.

## ஸஹதர்மிணி

எக்காரணத்தினாலும் மாமிச உணவு, மதுபானம் இவை யிரண்டும் செய்வது கூடாது என்பது மகாத்மாவின் மற்றொரு கொள்கை. வெகு சிரமப்பட்டு அதை விடாமல் இங்கிலாந்திலும் கைக்கொண்டு வந்தார். ஒரு சமயம் கஸ்தூரிபா மிக்க நோய்வாய்ப்பட்டிருந்த சமயம், முட்டையும் ஒயினும் கொடுத்தாலன்றி அவர் பிழைக்கமாட்டாரென்று வைத்தியர் கூறிவிட்டாராம். காந்திஜிக்கு அது இஷ்டமில்லை. கஸ்தூரிபாவுக்கு விஷயம் தெரிந்தது. அந்தத் துர்ப்பல நிலைமையிலும் அவர், "இந்த மனுஷ்ய சரீரம் கிடைப்பது அரிது. மாமிசம், மதுபானம் இவைகளை உட்கொண்டு இதை அழுக்குறச் செய்ய நான் விரும்பவில்லை. இறந்தாலும் சரி; இவ்விரண்டையும் நான் உட்கொள்ளமாட்டேன்!" என்று கூறிவிட்டாராம். மகாத்மாஜிக்கு எவ்வளவு உண்மையான ஸஹதர்மிணி அன்னை கஸ்தூரிபா?

## பதிபக்தி

காந்திஜிக்குச் சுய சிகித்ஸையில் அபார நம்பிக்கை. பல சமயங்களில் பேர்போன டாக்டர்களின் வைத்தியத்தையும் தோல்வியுறச் செய்திருக்கிறார், தம் களிமண் சிகித்ஸையினாலே. ஒரு சமயம் கஸ்தூரிபாவுக்கு இரத்தப் போக்கு அதிகம் உண்டாயிற்றும். அதை நிறுத்த உப்பில்லாப் பத்தியம்தான் சரியான சிகித்ஸை என்று காந்திஜி தீர்மானித்தார். அதை பாவிடம் மெள்ளப் பிரஸ்தாபிக்க, 'என்னால் உப்பில்லாப் பத்தியம் இருக்கமுடியாது' என்று கண்டிப்பாய்க் கூறிவிட்டார் அந்த அம்மையார். ஆனால் அந்தக் கணவரா விடுபவர்? "ஏன் இருக்கமுடியாது? இதோ பார். இன்று முதல் நான் உப்பை விட்டுவிடுகிறேன்!" என்று சபதம் கூறினார். "ஐயோ!

எனக்காக நீங்கள் உப்பை விட்டு உடம்பைக் கெடுத்துக் கொள்ளவேண்டாம். நான் உப்பில்லாமலே சாப்பிடுகிறேன்'' என்று ஒப்புக்கொண்டாராம் கஸ்தூரிபா. இம்மாதிரி மகாத்மாவின் பேர்போன சத்தியாக்கிரக இயக்கத்தின் ஆரம்பம் முதல் முதல் வீட்டிலேதான் நடந்தது; அதற்குக்கிடைத்த வெற்றியும் 'பா' ஜியின் பதிபக்தியினுல்தான்—என்று மகாத்மாவே பல இடங்களில் கூறியுள்ளார்.

இவைகளைப் படிக்கும் நேயர்கள் அன்னை கஸ்தூரிபாவை 'வாயில்லாப் பூச்சி'—'பசு'—எல்லாம் சகித்துப் போகும் சாது சுபாவம் படைத்த ஒரு சாதாரண இந்து ஸ்திரீ என்று எண்ணக்கூடும். அது முற்றிலும் தவறாகும். மகாத்மா தன் சுயசரிதையில் தம் மனைவியைப்பற்றி எழுதும் போது, 'என் உத்தரவின்றி எங்கும் வெளியே செல்லக்கூடாது' என்று ஒரு ஹிந்து கணவனுக்கு இருந்த சகஜமான சலுகையோடு நான் என் அதிகாரத்தை என் மனைவிமீது செலுத்த விரும்பினேன். ஆனால் அவள் நான் ஆட்டிவைக்கும் வெறும் மரப்பாவையாக இருக்கவில்லை. தனக்குரிய சுதந்திரத்தை இழக்க விரும்பினளில்லை என் உத்தரவின்றியே கோவில் குளங்களுக்குச் சென்று வந்தாள். இதன் காரணமாக எங்களுக்குள் சிற்சிலபோது மனஸ்தாபங்கள்கூட ஏற்பட்டதுண்டு. சுத்தமான நடத்தையும், குற்றமற்ற மனப்பான்மையுமுடைய சிறுமி ஒருத்தி சுயேச்சையாக வெளியில் உலாவி வருவது தவறாகாது என்று பின்னல் உணர்ந்து கொண்ட நான், அவளை அங்ஙனம் கட்டுப்படுத்த முயன்றதற்காக வருந்தினேன்'' என்று கூறுகிறார்.

## தாயன்பு

பதிபக்தியைப்போல், அன்னை கஸ்தூரிபாவின் தாயன்பும் விசேஷமாய்க் குறிப்பிடத்தக்கது. அவரது மூத்த புதல்வர் ஹீராலால் மகமதிய மதத்தைத் தழுவின போது, அன்னை கஸ்தூரிபா விடுத்த அறிக்கை ஹீராலாலின் இருதயத்தை அப்படியே உருக்கி வசீகரித்துவிட்டது. அந்த அறிக்கையின் பயனாக அவர் ஹிந்து சமயத்திற்குத் திரும்பியது நாடறிந்த செய்தி. அத்தகைய அற்புதம் நிகழ்த்திய தாயன்பு அந்நாளில் பொதுமக்கள் உள்ளத்தையும் பெரிதும் கவர்ந்தது.

## வழிகாட்டி

அன்னை கஸ்தூரிபா படித்தவரில்லை. ஆனாலும் அவர் தமக்கு இருக்கும் அனுபவ ஞானத்தைக் கொண்டு, பெரிய மேதாவிகள் முன்னிலையிலும் சமயோசிதமாக நடந்துகொள்ளும் சாமர்த்தியம் வாய்ந்தவர். அவர் தம்முடைய இந்தத் தள்ளாத வயதிலும், தம் வேலைகளைத் தாமே செய்துகொள்ளுகிறார். சேவாகிராம ஆச்ரமத்துக்கு வரும் விருந்தினரை உபசரிப்பது, பேரன் பேத்திமார்களைப் பராமரிப்பது, இன்று அவரது முக்கியமான கடமைகள். தூய கதராடை உடுத்திச் சற்றும் சோம்பலில்லாமல் அவர் பகற்போது ராட்டுக்குமுன் வீற்றிருந்து நூல் நூற்கும் காட்சி, இந்தியப் பெண்மணிகளில் ஒவ்வொருவரும் காணத் தகுந்தது.

பதிபக்திக்கும், தாயன்புக்கும், சோம்பலின்மைக்கும், கிரககிருத்தியங்களைச் செய்யும் 'நருவிசு'க்கும், அடக்கமான சரள சுபாவத்திற்கும் 'ஸ்ரீமதி கஸ்தூரிபா' நமக்கெல்லாம் ஒரு சிறந்த வழிகாட்டியாகிறார். அவரை நாம் போற்றிப் பின்பற்றுவோமாக.

அன்னை நீடூழி வாழ்க!

ஸ்ரீமதி. குமுதினி.

'ஸ்ரீமதி. குமுதினி' என்கிற பெயரைப் பார்த்தவுடனே, அன்னாரின் கட்டுரைகளையும், கதைகளையும் படித்திருக்கும் சந்தோஷம் உங்கள் உள்ளத்தில் பொங்கி எழும் அன்னார் நம் 'மோகினி'யின்பால் அன்புகொண்டு 'பெண்களும், காந்தியடிகளும்' என்ற மிகவும் ரஸமான விஷயத்தைப் பற்றி எழுதியிருக்கிறார். ஸ்ரீமதி அம்புஜம்மாளைப்போல் இவரும் மகாத்மாவைப் பலமுறை நேரில் தரிசித்து விஷயமறிந்த பாக்யசாலியாகும். இக்கட்டுரை உங்களை ஆனந்தத்தில் மூழ்கச்செய்யும் என்பதை நான் தெரிவிக்கவேண்டுமா ?

—வை. மு. கோ.

# பெண்களும் காந்தியடிகளும்



"பெண்களுடைய உரிமைகளின் விஷயத்தில் நான் சிறிதும் விட்டுக்கொடுக்க இயலாது. என்னுடைய அபிப்பிராயத்தில் புருஷர்களின் உரிமையைப் பாதிக்காதசட்டம் எதுவும் பெண்களின் உரிமைகளை மாத்திரம் பாதிக்கக்கூடாது. பிள்ளைகளையும் பெண்களையும் நான் சமமாகவே நடத்துவேன்" என்று காந்தியடிகள் ஓரிடத்தில் கூறியுள்ளார்.

இவ்விதம் சமத்வம் காண்பிப்பது சட்டங்களைப்பொருத்தினமட்டிலும் மாத்திரமே என்பதல்ல, அவருடைய தினசரி வாழ்க்கையில் அனுசரித்து வரும் கொள்கையே. ஆச்ரமத்திலிருக்கும் பெண்கள் தங்கள் தங்கள் வேலையைச் செய்து தத்தமக்குரிய மரியாதையை எல்லாரிடமும் பெற்று வருவதைக் காணலாம்.

ஆனால் இதிலிருந்து பெண்களிடம் காந்தியடிகள் அதிக பக்ஷபாதமுள்ளவர் என்று எண்ணிவிடக்கூடாது. பெண்களுக்கென்று அவர் விதித்திருக்கும் வழி ஓர் முட்பாதையே. பெண்கள் தமது கடமைகளைச் சரிவரச் செய்யவேண்டும். ஒவ்வொரு விவாகமான பெண்மணியும் ஒரு சீதையாகவும் சாவித்திரியாகவும் இருக்க முயலவேண்டுமென்பதே அவளுடையகொள்கை. அவ்விதம் தமது கடமையைச் சரிவரச்செய்யாமல், தமது உரிமையைமாத்திரம் கேட்கும் பெண்கள் காந்தியடிகளிடம் அனுதாபம் பெறமுடியாது. துக்கிக்கும் எந்தப் பெண்மணிக்கும், அவள் எவ்வளவு தாழ்ந்தவளாக இருப்பினும், காந்தியடிகள் தேறுதல் சொல்லி ஆறுதலளிப்பார். ஆனால் அவள், "எனக்கு விமோசனத்திற்கு வழி எது ?" என்று கேட்பாளாகில், "உனது தர்மத்தைப் பின்பற்றி உனது கடமைகளைச்செய். அவைகளைச் சரிவரச் செய்யாமல், கஷ்டமாக இருக்கிறது என்று பின் வாங்கி, சுகவழியில் போக விரும்பாதே" என்றே சொல்லுவார். ஆகையாலேயே அனேகம் பெண்கள் இவரிடம் புத்திமதி கேட்கப்போவது மிகவும் ஆபத்தாகமுடிகிறது என்று எண்ணுகிறார்கள். "முட்பாதையில் சென்று முடிவில் விமோசனம் பெறு

வதைவிட நமக்கு இஷ்டமான சுகவழியில் போகலாமே, பிற்பாடு என்ன நேர்ந்தால் நமக்கென்ன?" என்று அவர்களுக்குத் தோன்றுகிறது.

ஆச்ரமத்தில் தினமும் மாலையில் பிரார்த்தனை நடக்கும் சமயம், "स्थितप्रज्ञस्य का भाषा" (ஸ்திரபுத்தியுடையவர் எவ்வண்ணமிருப்பார், எவ்விதம்பேசுவார், என்ன செய்வார், கேசவ!') என்று அர்ஜுனன் கேட்பதும், அதற்கு பகவான் விடையளிப்பதுமான கீதையின் அம்சம் வாசிக்கப்படுகிறது. ஸ்ரீ பகவத்கீதையில் இருக்கும் வாக்யங்களெல்லாவற்றிலும் இவையே அவருக்கு மிகவும் பிடித்தவை. இதை யாவரும் ஊன்றி அத்யயனம் செய்ய வேண்டுமென்பது அவருடைய எண்ணம்.

"பெண்களின் மனது மிகவும் எளிதில் இளகிவிடுகிறதே. அவர்களால் புருஷர்களைப்போல் கண்டிப்பாக இருக்கமுடிவதில்லையே. தாங்கள் விட்டுக் கொடுப்பது தவறு என்று தெரிந்தபோதிலும் பெண்கள் தங்களுடைய மனதில் தோன்றும் அனுதாபம், இரக்கம், அன்பு, முதலிய உணர்ச்சிகளின் வேகத்தினால் தவறான சமயங்களிலும் விட்டுக்கொடுத்து விடுகிறார்களே, அவர்களுடைய மனதின் உணர்ச்சிகளினால் பீடிக்கப்பட்டு அசட்டுக் காரியங்களையும் செய்து விடுகிறார்களே, என்ன செய்வது?" என்று நான் ஒரு சமயம் காந்தியடிகளைக் கேட்டேன்.

"ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி, உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தியே யாகவேண்டும். உணர்ச்சிகளின் வசப்பட்டு நடந்தோமென்றால் அழிவே ஏற்படும். உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தாதவர்கள் உருப்படமாட்டார்கள்" என்றார். இவ்விதம் கட்டுப்படுத்தக் கற்கவே கீதையின் வாக்கியங்கள்.

ஆண்களும் பெண்களும் சமமாகக் கருதப்படவேண்டுமென்று அவர் சொல்வதிலிருந்து ஆண்களைப்போல் பெண்களும் உத்யோகம் செய்யலாம் என்று அவர் சொல்வதாக எண்ணிவிடக்கூடாது. அதை விளக்கி மற்றொரு சமயம் கூறியுள்ளார்:—

"எனது அபிப்ராயத்தில் ஆண்களும் பெண்களும் ஒன்றே. அவர்களுடைய ஆத்மா ஒன்றே. அவர்களுடைய ஆத்மீகக் கஷ்டங்கள் ஒன்றே. அவர்கள் பின்பற்றவேண்டிய வாழ்க்கை ஒழுங்குகளும் ஒன்றே. ஒருவர் மற்றொருவருக்குத் துணை. ஒருவரின் உதவி இல்லாமல் மற்றொருவர் ஜீவிக்க இயலாது.

"ஆனால் பல்லாயிரம் வருஷங்களாய் புருஷர் பெண்களை அடக்கிவந்து கொண்டிருக்கிறார்கள். ஆகையால் தாங்கள் தாழ்ந்தவர்கள் என்ற எண்ணம் பெண்களின் மனதில் ஓர் குறையாக ஊன்றிவிட்டிருக்கிறது. புருஷர்கள் தங்களுடைய சுய நன்மைக்காகப் பெண்களைத் தாழ்ந்தவர்கள் என்று சொல்வதை, அவர்கள் நம்பிவிடுகிறார்கள். ஆனால் புருஷர்களில் ஞானியாக இருப்பவர் ஆண்பெண் இருவரும் சமம் என்பதை உணர்ந்திருக்கிறார்கள்.

"இருந்தும் ஆண்பெண் இருவருக்கும் சமத்வம் அடிப்படையாக இருப்பினும், இவர்களுடைய வாழ்க்கை பிரிந்து வெவ்வேறு வழியாகச் செல்லுகிறது. இருவரும் ஆத்மாவில் ஒன்றாக இருப்பினும், உருவத்தில் வேறுபடுவது போலவும், அவரவர்களின் செய்கைகளிலும் வேறுபடுகிறார்கள். குழந்தைகளைப் பெறும் கடமை பெண்களுக்குரியது. அதற்கு வேண்டிய குணங்கள் புருஷர்களுக்குத் தேவையில்லை. பெண்களே வீட்டிற்கு எஜ

மானிகள். புருஷர்கள் ஆகாரத்தை சம்பாதித்துக் கொடுப்பவர், பெண்கள் அதைப் பகிர்ந்து கொடுப்பவர். கிருகலக்ஷ்மி, பாதுகாப்பவள் என்ற பெயர் பெண்களுக்கே ஏற்றது. குழந்தைகளை வளர்ப்பது அவர்களுக்கே ஏற்றது. அவர்களுடைய பாதுகாப்பு இல்லாவிடில் சமூகமே அழிந்துவிடும்.

"எனது அபிப்பிராயத்தில் ஆண்களின் வேலையைப் பெண்கள் செய்ய வேண்டி நேரிடுவது ஆண் பெண் இருவருக்கும் தாழ்வே. புருஷர் சவாரி செய்யும் குதிரைமேல் தான் சவாரி செய்து, அவர்களுடைய துப்பாக்கியைத் தனது கையில் எடுத்து வீட்டின் சம்ரக்ஷணைக்கென்று புறப்படும் பெண்மணி தன்னையும் புருஷனையும் தாழ்வுபடுத்திக்கொள்கிறாள். இவ்விதம் அவள் செய்ய இடம்கொடுத்தால் அந்தப்பாவம் புருஷனைச் சேரும். வீட்டை சம்ரக்ஷிப்பதில் எவ்வளவு பெருமை இருக்கிறதோ அவ்வளவு வீட்டை ஒழுங்காக வைத்துக்கொள்வதிலும் இருக்கிறது" என்று கூறியுள்ளார்.

ஆனால் புருஷர்களுடைய சம்பாத்யம் வீட்டிற்குப் போதாததற்கு பெண்கள் தமது ஓய்வு நேரத்தில் ஏதாகிலும் தொழில் செய்து சம்பாதிப்பதில் ஆக்ஷேபனை எதுவும் இல்லை. உண்மையில் பெண்கள் தமது வீட்டு வேலையிலேயே நாள் முழுவதும் செலவழிக்கக்கூடாதென்றும், ஓய்வுநேரம் ஏற்படுத்திக்கொண்டு ஏதாகிலும் தொழில் செய்யவேண்டும் என்றும் காந்தியடிகள் வற்புறுத்துகிறார். அவ்விதத் தொழில் அவர்களுக்கு சாதகம் செய்வதாக இருப்பதுடன் தேசத்திற்கும் நலம் பயப்பதாக இருக்கவேண்டுமென்பது அவருடைய கருத்து. அதனாலேயே நூல் நூற்பதை பெண்களுக்கு முக்கியமாக வற்புறுத்துகிறார்.

ஆச்ரமத்திலிருக்கும் பெண்கள் நாள் முழுவதும் தத்தமக்குரிய வேலையைச் செய்கிறார்கள். இருந்தும் பத்து அல்லது பதினைந்து நிமிஷம் ஓய்வு ஏற்பட்டால் அதை வீணாக்காமல் நூற்கிறார்கள். இவ்விதம் நூற்பதுதவிர தினமும் ஒழுங்காக ஒரு குறிப்பிட்ட காலத்தை நூற்பதற்கென்று ஒதுக்கி வைக்கிறார்கள். இவ்விதம் தான் நூற்பதிலிருந்தே ஒவ்வொரு பெண்மணியும் தனக்கு வேண்டிய புடவை, ரவிக்கைக்குத்துணி, போர்வை, துப்பட்டி, தலை துவட்டி ஆகிய யாவும் நூற்றுக்கொண்டுவிடுகிறாள்.

ஓர் புது பெண் ஆச்ரமத்திற்கு வந்தால் அவளைப்பற்றின விவரங்களை அறியவேண்டுமென்ற குதூகலம் அங்கிருக்கும் பெண்களுக்கு இல்லாமலில்லை. ஆனால் அதைக்கேட்டு விசாரிக்கும் காலத்தை அவர்கள் வீணாக்க விரும்புவதில்லை. நான் அங்கே சென்ற சமயம் என்னைப்பற்றி விசாரிக்க விருப்பம்கொண்ட ஓர் பெண்மணி எனது அறைக்கு வந்தாள்.

"வாருங்கள், உட்கார்ந்துகொள்ளுங்கள்" என்று நான் அழைத்தேன்.

"இல்லை, நீங்கள் என்னுடைய அறைக்கு வாருங்கள், நான் அங்கே நூற்கவேண்டும்" என்று சொல்லி என்னைத் தனது அறைக்கு அழைத்துச் சென்று ராட்டையில் நூற்றுக் கொண்டே என்னைக் கேள்விகள் கேட்கலானாள். இது எனக்குச் சிரிப்புண்டாக்கியபோதிலும், அவளுக்கு வேலையிலிருக்கும் கருத்தை என்னால் பாராட்டாமல்இருக்க முடியவில்லை.

பெண்களின் விமோசனத்திற்கும் விடுதலைக்கும் காந்தியடிகள் கூறும் மார்க்கம் இதுவே:—

> தன்னை அடக்கிக் கொள்ளுதல், தன் மதிப்பை இழக்காமல் இருத்தல், தனது கடமைகளைச் சரியாகச் செய்தல், பொழுதைச் சிறிதும் வீணாக்காமல் தன் வீட்டிற்கும் தன் தேசத்திற்கும் சாதகமாக உழைத்தல்.

இவ்வித வழியில் செல்ல முயன்றவர்களே அது எவ்வளவு கஷ்டமானதென்பதை உணர்வார்கள். ஆனால் அடிகள் கூறுவதுபோல், "ஹிமாலய பர்வதத்தில் ஏறிச் சிகரங்களை அடைய விரும்புபவர்களுக்கு ஓர் சிகரத்தை அடைந்ததும் அவ்வெற்றியினால் சந்தோஷமும் பெருமையும் சிறிது காலத்திற்கு உண்டாகலாம். ஆனால், ஆத்மாவை கட்டுப்படுத்தி வெல்லுபவர்களுடைய ஆனந்தம் அதற்தும் மேற்பட்டது. குன்றாதது. மேன்மேலும் வளருவது"




1. சில மனிதர்களுடைய அசட்டுத்தனத்தை அவர்களின் முகத்திலிருந்தே அறிந்துகொள்ளலாம். அசட்டிலும் சிறிது கெட்டிக்காரர்களாக விருப்பவர்களின் அசட்டுத்தனத்தை அவர்களின் காரியத்தில் தெரிந்து கொள்ளலாம். அசட்டுத்தனத்தை மட்டும் மறைக்கவேமுடியாது.

2. சரக்குகள் ஏராளமாய் விற்கும்போது வாங்கிச் சேமிப்பதற்கு மனம் வருவதில்லை. சரக்கு விலை அதிகமாய் பெருகியபோதுதான் மனமும் தாராளமாகப் பெருகி பல புதிய வழிகளைச் செய்யச் சரக்குகள் வாங்க முற்படுகிறது. யுத்த காலத்தில் இது பிரத்யக்ஷ அநுபவம்.

3. மக்களின்மனோபாவத்தின் வேடிக்கையே ஓர் அலாதியானது. எந்த விஷயத்தையும் கொஞ்சம் என்பதற்குள் ஒரு கோட்டை கட்டி அதற்குக் கண்ணு மூக்கு வைத்துப் புரளி செய்வதில் சளைப்பதே இல்லை.

4. கோயில், குளம், காலக்ஷேபம் முதலிய எந்த இடத்திற்குப் போனாலும் தற்காலம் ஜனங்களின் பேச்சு ஒரே 'காபுரா'பேச்சாகவே இருக்கிறது. யுத்த குழப்பத்தின் பயத்தால் எங்கே மூளை கலங்கிவிடுமோ என்றுகூட சிலரைப் பார்த்தால் பயமாயிருக்கிறது. எந்த ஊருக்குப் போகலாம். என்ன செய்யலாம்? இந்த பேச்சில் ஸ்வாமி தரிசனம் கண்ணில் படுமா! காலக்ஷேபந்தான் காதில் விழுமா! வீண் பயம் எதற்கு? இந்த கீதாசாரியனின் முன்பு எந்த எதிரிதான் நம் தேசத்தில் தலை காட்டமுடியும்? பாரத யுத்தத்தைஜெயித்த பரமாத்மா இருக்கையில் பயமென்ன என்ற நம்பிக்கை வரக்கூடாதா! எதிரியை நம் நாட்டில் வராது தடுத்துக் காப்பாற்று என்று பகவானை வேண்டக்கூடாதா!

5. பயத்திற்கு இடங்கொடுக்காது தைரியமாய் நீந்தி யடித்து ஜெயிக்கும் சக்தியை முதலில் பெற்றால்தான் பெரிய காரியங்களில் தலையிட்டு வெற்றி பெற முடியும். வெற்றி வேண்டுமாயின் பயத்தை யொழிக்க வேண்டும்.

6. மாமியாருக்குத் தெரியாமல் மருமகள் தருமம் செய்ய ஆசைப்படுகிறாள். மருமகளுக்குத் தெரியாமல் மாமியார் தருமம் செய்யவிரும்புகிறாள். இந்த உளவறிந்த தந்திரப் பேர்வழிகள் இருவரிடமும் தருமம் பெற்று மகிழ்கிறார்கள்.

—வை. மு. கோ.

**ஸ்ரீமதி. ஜானம்மாள்.**

கற்பனைகள் வரைவதைக்காட்டிலும் உண்மைச் சித்திரங்களை—கண்டது, கேட்டது, நேரில் அனுபவத்தில் நடப்பது—இவைகளை எழுதுவதில் ஒரு தனி ருசியுண்டு என்பது என் அனுபவமாகும். அப்படியே படிப்பதிலும் உண்டு என்பதைக் கூறவேண்டாம். ஸ்ரீமதி. ஜானம்மாளின் கட்டுரைகளை நீங்கள் படித்திருக்கலாம். தன் சொந்த அனுபவத்தை அழகாய் அப்படியே உண்மைச் சித்திரமாக வரைந்திருப்பதை (புகைப்படங்களுடன்) படிக்கும்போது உங்கள் மனதும் உங்கள் பக்கலில் கட்டாயம் ஒரு 'லில்லி' இருக்கவேண்டும் என்று விரும்புமல்லவா? படங்கள் "ஸ்ரீவத்ஸன்" எடுத்தவை. —வை. மு. கோ.

---

# * எனது லில்லி *



அயலாரின் குழந்தைகளை எடுத்து வளர்ப்பதில் ஆசைகொள்வதைவிட வாயில்லா ப்ராணியை வாங்கி போஷித்தால் மனத்திற்கு இன்பத்தைத்தரும். பிராணிகளுக்குள் நாயிக்கு இருக்கும் நன்றியும் எஜமான விச்வாசமும் மனிதர்களிடத்தில் காண்பதரிது. "வளர்த்த கடா மார்பில் பாயும்" என்றபடி, வளர்க்கும் குழந்தை தக்கவயதை அடைந்ததும் எப்படி பாயுமோ எவர் கண்டது அதை? அக்குழந்தை வளரவேண்டியதுதான் தாமதம், உடனே அக்குழந்தையின் சுற்றத்தினர்களும் பந்துக்களும் உங்களின் வீட்டில் தட தடவென்று டேரா போடுவதற்கு எத்தனம்செய்வார். அப்புறம் சச்சரவு, தொல்லைகள்எல்லாம் உங்களை வாட்டுவதற்கு தலைப்படும்! நான் கேழ்கிறேன் 'வீணில் காசைக்கொடுத்து ஏன் தேளை கொட்டிக்கொள்ளவேணும்' என்று? பேசாமல் ஒரு சிறந்த ஜாதி நாய்க்குட்டியை வளருங்கள். நீங்களும் கண்டிப்பாய் ஆனந்தத்தை அடைய முடியும். குழந்தைக்கு மேலாகவே உங்களிடத்தில் கொஞ்சி விளையாடி, பலவித சேஷ்டைகளை செய்யும், மேலும் அது பிடிவாதம் பிடிப்பதைபோல குழந்தைகளுக்குகூட முடியாது என்பதையும் அறிந்துகொள்ளலாம். என் செல்வ லில்லியின் வாழ்க்கை குறிப்புகளை நீங்கள் கேட்பீராகில் நிச்சியம் ஆச்சர்யம்கொண்டு அதை பார்ப்பதற்கு விருப்பம் கொள்வீர்கள் என்று எனக்குத்தெரியும், அதனுல்தான் அதன்புகைப் படம் வெளியிடப்பட்டுள்ளது.



எனது லில்லி, ஒரு அழகிய செல்வநாய். மூன்றுமாத குட்டியில் என்னிடம்வந்து இப்போது எறக்குறைய அதற்கு இரண்டு வயது பூர்த்தியாகிவிட்டது. அது குழந்தையாக



இருக்கையில் அதாவது 6 மாதம் வரையில் "காக்கா வா பூனையே வா வா" என்று பூச்சிக்காட்டி பாலைக் குடிக்கும்படிச் செய்ய வேணும். இல்லையேல் தட்டில் இருக்கும் பால் ஒருநாள் ஆனாலும் அப்படியேதான் யிருக்கும்.

அந்த பூனையின் ஆயுள் முடிந்துவிட்டது. பிறகு என்பாடு மிகவும் சங்கடத்தில் வந்து முடிந்தது. பாலை எடுத்துக்கொண்டு அதன் பின்னால் எந்நேரம் சுற்றமுடியும்? பாலைக் கண்டால் ஓட்டம்! சுற்றிச் சுற்றிக் கடைசியில் என் அருகில் தொப்பென்று விழுந்து படுத்துக்கொள்ளும். பிறகு வாயைத் திறந்து நாக்கை நீட்டிக் காண்பிக்கும். பாலைப்போட்டி விடவேணும். ரொட்டி, பிஸ்கட், பக்ஷணங்களை ஒன்றும் திரும்பிக்கூடப் பார்க்காது. இந்த விதமான ஒருநாயை நீங்கள் பார்த்தேயிருக்கமாட்டீர்கள்என்றுநம்புகிறேன்.

அதை சங்கிலியினால் கட்டிவைத்தாலோ யாராக யிருப்பினும் சரி, நின்றுகொண்டு தன் முன்னம் கால்களினால் 'வா வா' என்று ஆட்டி அவர்களை அழைத்து தன்னை விடுவிக்கும்படி அதிகாரத் தோரணையுடன் கட்டளையிடும். அது தன் பிடிவாத குணத்தினால் தான் நினைத்த காரியங்களை எல்லாம் சுலபமாக சாதித்துக் கொள்ளும்.

கையினால் சாப்பாட்டை எடுத்து ஊட்டவேணும். என் ஆளிடம் சென்று அவனை அங்கும், இங்கும் போகவிடாமல், தன் சமையல் ஆகும் வரையில் வேலை வாங்குவதில் சளைக்காது. சமையல் முடிந்ததும் உடனே அவ்விடத்தை விட்டு எனது அறைக்கு வந்து ஒரு சோபாவின் அடியில் புகுந்துகொள்ளும். சம்மந்தியை அழைப்பதைபோல அதை என் ஆள் வந்து சாப்பாட்டிற்கு அழைத்துப் போகவேணும். பிறகுதான் கொஞ்சம் பிகுவுடன் ஆடி அசைக்கிக்கொண்டு போகும். அந்த நடையின் அழகே ஒரு ஜோர். "ஆறெல்லாம் நீராய் ஓடினாலும் நாய் நக்கித் தானே குடிக்க வேண்டும்" என்பது பழமொழி. ஆனால் அது என் வில்லியிடம் பொய்யாகி விட்டது. பாலும், தண்ணீரும் அதற்கு வாயில்தான் வார்க்கவேண்டும். நக்கி குடிக்கவே குடிக்காது.



என் வில்லியை வெறும் சாப்பாட்டு வொழுங்குக்காரியென்று எண்ணிவிடாதீர்கள் நன்றாக விளையாடும். தினம் காலை Walk போகும். பந்து விளையாடும். கண்ணாமூச்சி ஆடும். வீட்டில் இருக்கும் துணி மணி, தட்டு முட்டுசாமான்களை எல்லாம் கவ்விக்கொண்டு வந்து வீடு முழுவதும் இறைத்து அமக்களமாய் குதித்து விளையாடும். நாம் அதை மிரட்டி அதட்டினாலோ உடனே நமக்கு முத்தங்கள் அளித்து (நாக்கினால் முகத்தை நக்கி) நம் கோபத்தை நொடிப்பொழுதில் தணியச் செய்து மிக்க அன்புடன் அதன் சரீரத்தை



நமது உடம்புடன் உராய்ந்துகொண்டு உட்காரும். பிறகு அதுதான் நம்மைப் பாதுகாப்பது போல கண்களிரண்டையும் உருட்டி உருட்டி பார்க்கத் தொடங்கும்.

என் லில்லி எனது ஸ்நேகிதர்களை வரவேற்று அவர்களை நான் வரும் வரையில் விளையாட்டுக்காட்டி சந்தோஷிக்கும்படிச் செய்துகொண்டிருக்கும். இரண்டாம் துணையில்லாமல் இருக்கும் எனக்கு அவசியமாகவும் ஒத்தாசையாகவுமிருக்கிறது. வீட்டிற்கு காவல்காரன், விருந்தினர்களுக்குத் தோழன், எஜமானருக்கு தாஸனாக நடந்து வரும் என் லில்லியைக் குறித்து நான் பெருமை கொள்வதில், என்ன அதிசயம். ஆபத்தில் அபயம் அளிக்கும். களவைத் தேடிப் பிடிக்கும்! துஷ்ட ஜந்துகளை வேட்டையாடிக் கொல்லும். இவ்வித நற்குணங்களெல்லாம் ஒருங்குகூடி விளங்குவது நாயினிடத்தில் தான் போலும்! பிரும்மா, சிவன், விஷ்ணு முதலிய திருமூர்த்திகளும் தங்களின் வாகனங்களாக ஹம்சம், ரிஷபம், கருடன் முதலியவைகளைத் தேர்ந்து வைத்துகொண்டிருப்பதிலிருந்தே ப்ராணிகளுக்கு உயர்ந்தஸ்தானம் உண்டு என்பது நன்கு விளங்குகிறதல்லவா ?

நாயைப்போலஅன்பும், நன்றியுள்ளதுமான ஒரு வியக்தி உலகில் தேடி எடுத்தாலும் எங்கும் கிடைக்காது நற்குணங்களைத் தெரிந்துகொள்வதற்கு விரும்பினால்உடனேஒருநல்லஜாதியானநாயைவளர்ப்பதற்குத்தயங்காதீர்கள்.

எஜமானரிடத்தில் அன்பு செலுத்துதல் மட்டுந்தான் நாயின் குணம் என்று சிலர் நினைக்கலாம் ப்ரேமைகொள்ளும் விஷயத்தில் ஆறறிவுபடைத்த மானிடர்களைவிட ஆச்சரியமாய் இதனிடம் காணும்போது வியக்காமலிருக்கமுடியுமா? என் லில்லியின் மீது உயிரையே வைத்துள்ள ஒரு ஆண் நாய் இதைத் தேடிக்கொண்டு என் வீட்டையே சுற்றி சுற்றி அலையும் எத்தனை விரட்டினாலும் போகாது. என் லில்லிக்கோ இதன்மீது பிரியம் கிடையாது. அதன் காதலன் வேறொரு நாய் இருக்கிறது. அதைத் தேடிக்கொண்டு இது செல்வதும் இதைத் தேடி அது வருவதும் அதன்வரவை வீதியிலேயே உட்கார்ந்து எதிர்பார்ப்பதும் வந்துவிட்டால் கும்மாளமடிப்பதும் இதற்குப் பிடிக்காத நாய் வந்தால் அதைத் துரத்தும்படி என்னிடம் காலைச் சுற்றிச்சுற்றி வட்டமிட்டு சிபார்சு கோருவதும், உள்ளேயே புகுந்துகொண்டு அது போய்விட்டதா என்று எட்டி எட்டி பார்ப்பதும், போன பிறகு குசாலாக எழுந்து வருவதையுங் காண யாரால்தான் வியப்புக் கடலில் மூழ்காமலிருக்க முடியும். காலையில் எழுந்த உடனே எனக்கு தினசரி பத்திரிகையை வாங்குவதற்கு என் பெட்டியைத் திறந்து



பணமெடுத்துக்கொடுக்க என்னை அரித்துவிடும். உடனே வேலைக்காரனைப் பிடித்து இழுத்துக்கொண்டு பேப்பர் விற்குமிடத்திற்கு ஓடும். பத்திரிகையுடன் என் வில்லி வருவதே ஒரு அழகாக எனக்குத் தோன்றும். பத்திரிகையை வாங்கிய பிறகுதான் அது பேசாமலிருக்கும்.

கொஞ்சம் மழை பெய்தால்கூட சேற்றில் நடக்கவே நடக்காது. அப்போதெல்லாம் படியைவிட்டே இறங்காது. என்னிடம் எத்தனை செல்லம் உண்டோ அத்தனையும் என் வேலைக்காரனிடமும் உண்டு. அவனை நக்கிக் கொடுத்துச்சுற்றி வந்து நைச்சியம் செய்துகொண்டு அவன் கையில் ஏறி ஒரு குழந்தையைபோல் உட்கார்ந்து வெளியே போகச் சொல்லும். என் தோட்டத்துக்குள்ளே தூக்கிக்கொண்டுகூட நடப்பான். என் வில்லியிடம் எங்களுக்கு அத்தனை ப்ரீதி.

இத்தனை சிறப்புடைய என் வில்லி இப்போதுதான் ஒரு குழந்தைக்குத் தாயாகிவிட்டது. இருந்தும், தான் குழந்தையைப்போல் எங்களிடம் முன்னிலும் அதிகமாக கொஞ்சுகிறது. அது தாயானாலும் எனக்குக் குழந்தையாகவே தோன்றுகிறது.

அன்பின் வழியது உயிர் நிலை அஃது இல்லார்க்கு உடம்பு என்பு தோல் போர்த்தனவாம் !




மனைவி:—என்னை மனிஷி என்று நினைத்தீர்களா! மாடு என்று நினைத்தீர்களா!

கணவன்:—அது ரெண்டுமாயிருந்தால்தான் உபயோகமாயிற்றே! வெறும் அலங்காரங்கள் நிறைந்த பொம்மை என்றுதாண்டி நினைக்கிறேன்.

* * * * *

எஜமான்:—யாரடா அந்த தடிமரமே! வழியில் இப்படியா சாமானைப் போடுவது. இருட்டில் கால்தடுக்கி விழப்பார்த்தேன். எடுத்து தூரபோடடா!

வேலைக்காரன்:—(பணிவாய் வாய் பொத்தியபடியே) எஜமான். நான் எடுத்து போடமுடியாதுங்க. எஜமானியம்மா தூங்கறாங்க. அவங்களைத்தான் தடுக்கிறீங்க.

* * * * *

சாமு:- என் சார்! நீங்களா சண்டைக்குப் போகப்போகிறீர்கள்?

ராமு:—தினம் சம்சாரத்துடன் போடும் சண்டை போதாதா! சண்டைக்கு வேறு எங்கு போகவேண்டும்?




சங்கீதக் கருவியின் சமயோசித உபயோகம்




# திருப்பதி யாத்திரை

'வை. மு. ஸ்ரீ.'

"நாளைக்கு என்ன நடக்கப்போகிறது? என்பதைப்பற்றி பேச நமக்கு என்ன சக்தி இருக்கிறது? நாம் என்ன த்ரிகால ஞானிகளா? அதது அவன் விட்ட வழியாகிறது. அதைப் பற்றியெல்லாம் பேசுவதில் யாருக்கென்ன பிரயோஜனம்? பகவத் சந்நிதானத்தை நோக்கிச் செல்லும் நாம் நமது சிந்தனையை பகவந்நாம சங்கீர்த்தனத்தில் செலுத்தினாலும் பலனுண்டு. "மோட்டார் ரோட் வந்தால் எப்படி? ஏரோப்ளேன் ஸர்வீஸ் ஏற்பட்டால் எப்படி?" என்றெல்லாம் பேசிக்கொண்டே மலை ஏறுவதைக் காட்டிலும், "கோவிந்தா கோவிந்தா" என்று பஜித்துக் கொண்டே சென்றால் மலை ஏறவும் நமது பாபமும் குறைந்துகொண்டே வரும்" என்றேன்.

இதற்குப் பதில் சொல்லாமல் விடுவாரா ஸ்ரீ வேங்கடம்? "ஆமாம். எல்லோருமே நீர் சொல்லும்மாதிரி பக்தி சிரேஷ்டர்களாய், முழு கவனத்தையும் பகவானிடத்தில்லயித்து பஜிப்பார்களேயானால் இந்த உலகம் ஏன் இப்படி இருக்கிறது? மனித ஸ்வபாவம் அவ்வளவு உன்னத ஸ்திதியை அடைந்துவிட்டதா? கோவிலுக்குள்ளேயே பிராகார பிரதக்ஷணம் செய்யும்போது ஊர் வம்பைப் பேசுவது சகஜமாயிருக்கையில், ஏழு மைல் மலை ஏறும்போது சாதாரண விஷயங்களைப்பற்றிப் பேசாமலிருக்கமுடியுமா? என்றார்.

"உள்ளது உள்ளபடியே இருக்கட்டுமென்று விட்டுவிட்டால் அபிவிருத்தி ஏற்படுவது எப்படி? முயற்சி செய்தால்தானே முன்னேற்றமடையமுடியும். பஜனை செய்ய ஆரம்பித்து அதில் கொஞ்சம் சிரத்தை ஏற்பட்டால், நம்மை அறியாமலேயே பக்தியில் ஈடுபடுவதும், முக்தியடைய யுக்தி என்ன உள்ளதென்ற யோசனை ஏற்படுவதையும் காணலாம் என்பதே என் சிற்றறிவிற்குத் தோன்றும் அபிப்பிராயம்" என்றேன்.

"வாஸ்தவம். வாஸ்தவம். பக்தி இல்லாமலே பகவானின் பெயரைச் சொன்ன அரக்கனும் மோக்ஷம் பெற்றான் என்று சொல்லக் கேட்டிருக்கிறோமே...சரி நீர் ஆரம்பியும், பஜனை செய்வோம்" என்று சொல்லிக் கொண்டே "கோவிந்த கோவிந்த கோவிந்த கிரிதாரி" என்று தானே ஆரம்பித்தார் ஸ்ரீ வேங்கடம். உடனே "சியாம சுந்தர மதனமோகன பிருந்தாவன விஹாரி" என்று நாங்களும் ஆரம்பித்தோம். அப்போது மனத்திலெழுந்த உணர்ச்சி ஒரு அபூர்வ அம்சத்தைப் பெற்றிருந்தது. இவ்வாறாக கோவிந்த நாம கோஷத்தைச் செய்துகொண்டே நடக்கலானோம்.

* * *

"ஆனந்த திவ்ய நிலய விமானம் அதோ தெரிகிறது. கோபுர தரிசனம் பாபவிமோசனம். கோவிந்தா! கோவிந்தா! என்று ஒரே கோஷம். பக்திப் பெருக்கால் ஒவ்வொருவரும் தொண்டை கிழிய உச்சஸ்தாயியில் கோவிந்தா! கோவிந்தா! என்று கோஷிக்கும் சப்தத்தையும் காட்சியையும் விவரிக்கப் பேனாவால் முடி

யாது. அந்த பக்திப் பிரவாகத்தை நேரில் கண்டுதான் அனுபவிக்க வேண்டும். நம்மை யறியாது கண்களிலிருந்து நீர் வழிய, தொண்டை அடைபட "கோவிந்தா! கோவிந்தா! காப்பாற்றுவாய்" என்னும் சொற்களே வெளிப்படும். தூரத்தில் வருகையில் கோபுரத்தைப் பார்க்கும் போதே இத்தகைய உணர்ச்சி ஏற்படுகிறதே, அந்த திவ்ய மூர்த்தியையே நேரில் தரிசிக்கும்போது எப்படித்தானிருக்கும் என்று எண்ணிய வாறு சத்திரத்தை அடைந்தோம்.

* * *

திருமலையிலும், கீழ்த்திருப்பதியிலும் யாத்ரீகர்களின் சௌகரியத்திற்காக தேவஸ்தானத்தார் செய்துள்ள ஏற்பாடுகள் மிகவும்போற்றத் தக்கதாயிருக்கின்றன. திருமலையில் நாங்கள் பெரிய சத்திரத்தில் இறங்காமல், சிறிய விடுதிகளாகக் கட்டப்பட்டுள்ள விடத்தில் இறங்கினேம் மிகவும் சௌகரியமாயிருந்தது. நாங்கள் சென்ற சமயம் திருமலையில் ஜலக்கஷ்டம் தவிர வேறு எந்தவித சிரமமும் கிடையாது. "பிரம்மோத்ஸவத்திற்கு இன்னும் 15 நாள்கூட இல்லை. இந்த வருஷம் இப்படி அடியோடு மழையே யில்லாதுபோய் விட்டதே! உத்ஸவத்திற்கு வரும் லக்ஷக்கணக்கான யாத்ரீகர்களுக்கு எப்படிதான் ஏற்பாடுசெய்யப்போகிறுனே இந்த வெங்கடாசலபதி?" என்றே எங்கு பார்த்தாலும்பேச்சு "அவர் கருணாநிதி! உத்ஸவத்திற்குள் எப்படியாவது வேண்டிய அளவு மழை பொழியச்செய்து விடுவார். தன்னை தரிசிக்கவரும் பக்தகோடிகளைக் கஷ்டத்திற்குள்ளாக்கமாட்டார்" என்ற நம்பிக்கையை மாத்திரம் ஒருவரும் கைவிடவில்லை.

* * *

'ஸ்வாமி புஷ்கரணி' என்றபெயர் வாய்ந்த புண்ணிய தீர்த்தத்திற்குச் சென்றோம். அந்த பெரிய குளம் இருந்த நிலைமையை என்னவென்று சொல்வது! "முழங்கால் தண்ணீர்"! கூட இல்லை. அதுவும் முழுதுமில்லை. நீராழி மண்டபத்திற்கு இருபுறத்திலும் இரு ஆழமான சிறு குளங்கள் அப்பெரிய குளத்துள் அடங்கியுள்ளது அப்போதே தெரிந்தது. மழை காலத்தில் பார்த்தால் இம்மாதிரி இரு குளங்கள் இருப்பதே தெரியாது, ஒரு பெரிய குளமும் அதன் மத்தியில் நீராழி மண்டபமும் இருப்பதாகவே தோன்றும். அன்று இருந்த நிலைமையை இதனடியிலுள்ள



படத்தில் பாருங்கள். நீராழி மண்டபம் தனியாக நிற்பதும், அதைச் சுற்றி நீர் இல்லாதிருப்பதும், பக்கத்திலுள்ள சிறு குளத்திலும் பல படிகள் தெரிவதையும் காணலாம். அடி மட்டத்தில் சிறிதே ஜலம் இருந்தது "ஜலத்தில் உட்கார்ந்து சொம்பில் ஜலம்எடுத்துத்தான் தலையில் கொட்டிக்கொள்ளவேண்டும். மூழ்கி ஸ்நானம் செய்யவேண்டிய ஜலமிப்போதில்லை" என்று எல்லோரும் வாய் விட்டுச்சொல்லிக்கொண்டிருந்தனர்.

* * *

"குழந்தைக்கு முடி இறக்கின பிறகல்லவா நாம் ஸ்நானம் செய்ய வேண்டும். முதலில் அந்த காரியத்தைப் பார்த்து வரலாமே!" என்று கடமையை நினைவுறுத்தினர் ஸ்ரீ வேங்கடம் இதைக் கேட்டுக்கொண்டிருந்த நாவிதன் ஒருவன் "நான் இறக்கிவிடுகிறேன் ஸ்வாமி! எத்த

னையோ குழந்தைகளுக்கு செய்திருக்கிறேன். துளிகூட அழாமல், அடிபடாமல் நன்றாக மழமழவென்று க்ஷவரம் பண்ணிவிடுவேன். இங்கு சம்பிரதாயமாகக் கொடுக்கும் கூலியைக்கொடுங்கள்'' என்றான். அங்கேயே வட்டமிட்டுக்கொண்டிருந்த இன்னொருவன் "சார்! நம்ம ஸலூனுக்கு அழைச்சிண்டு வாருங்க சார்! குழந்தைக்கு விளையாட்டுக் காட்டி பெரிய கண்ணாடிக் கெதிரில் உக்காரவைத்து சுலபமாக செய்துவிடுகிறேன்'' என்றான். "சாமீ! பிரார்த்தனை செலுத்துகிறவங்கெல்லாம் இங்கெல்லாம் முடி இறக்கக்கூடாதுங்க. அதுக்காக தனி இடம் இருக்குதுங்க. முடியிறக்கிற மண்டபம்னு சொல்ற பந்தல் இருக்குதுங்க. அங்கேதான் போவணும். அங்கே போய் பாருங்க. என்ன கூட்டமாயிருக்குதுங்க. நான்கூட அங்கே தான் மொட்டை யடிச்சுண்டேனுங்க'' என்று அங்கு குளித்துக்கொண்டிருந்த ஒருவர் மிகவும் வினயமாக எங்களுக்கு வழிகாட்டினார். "யாரடா இவன் எங்கள் பிழைப்பில் மண்ணை போடுகிறவன்'' என்று அவனை வைதுகொண்டே அந்த நாவிதனும், ஸலூன்காரனும்போனார்கள். முடி இறக்கும் கட்டம் எங்கிருக்கிறதென விசாரித்துக்கொண்டு நாங்கள் நகரலானோம். (தொடரும்)

# இனிமேல்

1. பேபரின் விலை பன்மடங்கு அதிகமானதன் காரணமாக நமது புத்தகங்களின் அடக்க விலை அதிகரித்து விட்டதால், இனிமேல் ஒரு புதிய சந்தா சேர்த்துக்கொடுப்போருக்கு **4** அணா விலையுள்ள புத்தகம்தான் இனாமாக கொடுக்கப்படும். எத்தனை சந்தாநேயர்களைச் சேர்க்கிறீர்களோ அத்தனை **4** அணா விலை (முழு விலை) யுள்ள நாவல் இனாம் தபாற்செலவுக்காக ஒரு ரூபாவுக்கு **3** அணா வீதம் அனுப்பவேண்டும். **6** புதிய சந்தாநேயர்களைச்சேர்ப்போருக்கு ஒருவருஷ சஞ்சிகை இனாம்.

2. ஜனவரி முடிவு வரையில்தான் கலாநிலயம் ரூ. 1. தபாற்செலவு இனாம்.

3. விலாசம் மாறுபவர் உடனுக்குடன் தெரிவிக்காததால் சஞ்சிகை தவறிவிடின் அதற்கு நாம் ஜவாப்தாரியல்ல. அவர்கள் சஞ்சிகையின் விலைக்காக (உள்நாடு) இரண்டணா ஸ்டாம்பு (வெளிநாடு) ஒரு போஸ்டல் கூபன் அனுப்பவேண்டும்.

மானேஜர்.



# வாணியின் பிரசாதம்

ஸாஹித்யகர்த்தா: வை. மு. கோதைநாயகி

63-வது மேளகர்த்தா.

## லதாங்கி

ஜன்ய ராகம்:

## மங்களநாயகி

ஸ்வரப்படுத்தியவர்: ஸ்ரீ. ஏ. பார்த்தசாரதி

### ஆரோஹணம்—ஔடவம்

| ஸ | ரி | ம | ப | நி | ஸ் |
|---|---|---|---|---|---|
| | சதுர் | ப்ரதி | | காகலி | |

### அவரோஹணம்—ஔடவம்

| ஸ் | நி | ப | ம | க | ரி | ஸ |
|---|---|---|---|---|---|---|
| | காகலி | | ப்ரதி | அம்தர | சதுர் | |

இராகம்: மங்களநாயகி. தாளம்: சதுரஸ்ர ஜாதி த்ரிபுட.

### பல்லவி

| | | | |
|---|---|---|---|
| 1 | ; ●ஸரி-, மபா-நீ ; - பநிஸ்ா | ; ஸ் நி -, ப ம ா | கா ; - ரீ ஸா ‖ |
| | மங் கள ரூ பனே | மஹி மை ப்ர | தா பனே |
| 2 | , நி ●ஸரி-, மபா-நீ ;- பநிஸ்நி | ஸ்ா ஸ் நி -, ப மா | ப ம கா - ரீ ஸா |
| | மங் கள ரூ ப னே | மஹிமை ப்ர | தா பனே |
| 3 | , நி ●ஸரி-, மபா-மபநீ-பநிஸ்ரி | ஸ்நி ஸ்நி-, ப மா | பநிபம - கரி ஸா |
| | மங் கள ரூ ப னே | மஹிமை ப்ர | தா ப னே ‖ |

| | | |
|---|---|---|
| 4 ,நி ● ஸரி-,மபா-மபநிப-பநிஸ்ரி | ஸ்நி ஸ்நி-, ப மா | பநிபம - பம கரி |
| மங் கள ரூ ப னே | மஹிமை ப்ர | தா ப னே |
| 1 ஸநி ● பம-,கரீ-ஸரிஸநி-பநிஸா | ; ஸ ரி - , மா ப | நீ ; - ஸ் நி ப ம |
| பங் கய ம லர் தா ளா | ப க் தா நு | கூ ல |
| 2 கரி ● பம-,கரீ-ஸரிஸ்நி-பநிஸரி | ஸநி ஸரி -, மா ப | பநிஸ்நி - பமகரி |
| பங் கய ம லர் தா ளா | பக் தா நு | கூ ல |
| ஸநி ● | | |

## அநுபல்லவி

| | | |
|---|---|---|
| 1 ; ● ம ப-, நிஸ் ா - ரீ; - ரீ ரீ | ; ஸ் ரி - , க்ா ரி | ஸ்ரிஸ்நி - ஸ்நிபா |
| சங் குசக் ரா யுதா | சா ரங் க | ஹ ஸ் த னே |
| 2 ; ● மப-,நிஸ்ா-ரிஸ்நிப- நிஸ்ரீ | ; ஸ் ரி - , க்ா ரி | ஸ்ரிஸ்நி - ஸ்நிபா |
| சங் குசக் ரா யு தா | . சா ரங் க | ஹ ஸ் த னே |
| 3; ● மப-,நிஸ்ா-ரிஸ்நிப-மபநிஸ்ரீ; | ; ஸ் ரி - , க்ா ரி | ஸ்ரிஸ்நி - ஸ்நிபா |
| சங் குசக்ரா யு தா | சா ரங் க | ஹ ஸ் த னே |
| 1 ; ● நிஸ்-,ரிஸ்நி-ஸ்நிபம-பா நீ | ; ஸ் நி - , ப மா | ப ம கா - ரீ ஸா |
| சங் கடம் தவிர்த்தின்பப் | பொங் கிடச் | செய் திடும் |
| 2 ; ● நிஸ்-,ரிஸ்நி-ஸ்நிபம-பநிஸ்ரி | க்ரி ஸ்நி - , பமா | பநிபம - பமகரி |
| சங் கடம் தவிர்த்தின்பப் | பொங் கிடச் | செய் தி டுப் |
| ஸ்நி ● | | |

## சரணம்

| | | |
|---|---|---|
| ; ● பப-,பபா-பநிபம - காரீ | ; ஸ் ரி - , க ரீ | ஸாரிம - பா நீ |
| அலைகடல் தரும் பென | அலைக் கிடும | நெஞ் சுக்கோர் |
| ; ● ஸ்நி-, பமா-பமகா-ரீஸா | ; நி ஸ-, ரி ம ா | பநிஸ்நி - பமபா |
| நிலை யிடம்காட் டிட | நி ம லனே | அ ரி தோ |
| 1 ; ● மப- ,நி ஸ்ா -ரீ ;- ரீ ரீ | ; ஸ் ரி - , க் ரீ | ஸ்ரிஸ்நி-ஸ்நி பா |
| மலர்க்கு ழலாள் கோ தா | மன் னவ | னே உந்தன் |
| 2 ; ● மப-,நிஸ்ா-ரிஸ்நிப-நி ஸ் ரீ | ; ஸ் ரி - , க் ரீ | ஸ்ரிஸ்நி-ஸ்நி பா |
| மலர்க்குழ லாள் கோ தா | மன் னவ | னே உந் தன் |
| 3; ● மப-,நிஸ்ா-ரிஸ்நிப-மபநிஸ்ரீ: | : ஸ் ரி - , க் ரீ | ஸ்ரிஸ்நி-ஸ்நி பா |
| மலர்க்குழ லாள் கோ தா | மன் னவ | னே உந் தன் |
| 1 ; ● நிஸ்-,ரிஸ்நி-ஸ்நிபம - பாநீ | ; ஸ் நி -, ப மா | ப ம கா - ரீ ஸா |
| மல ரடி தங் தெந்தன் | மனக் குறை | தீர் த் தருள் |
| 2 ; ● நிஸ்-,ரிஸ்நி-ஸ்நிபம-பநிஸ்ரி | க்ரிஸ்நி -, ப மா | பநிபம - பமகரி |
| மல ரடி தங் தெந்தன் | பனக் குறை | தீர்த் த ருள் |
| ஸநி ● | | |




மங்களம்: – கல்யாணி! என் தங்கைக்கு சீமந்தம்; அதற்காக நான் ஊருக்குப் போய்வருகிறேன். மங்களகரமாய் நம் எல்லோருடைய வீட்டிலும் பால் பொங்கி சர்வ ஜெயத்தையும் ஆனந்தத்தையும் மங்களத்தையும் கொடுக்கவேண்டுமாய் பகவானை பிரார்த்திக்கின்றேன். என் சினேகிதை, ஸ்ரீமதி சௌந்தரவல்லியம்மாள் பொங்கல் புதுநாளைக்காக புதிய பக்ஷணம் இரண்டு செய்யும்படி எழுதியிருக்கிறாள். அதை உன்னிடம் சொல்லி விட்டுப்போகவே வந்தேன்.

கல்:—அடேயப்பா! என்ன அவசரம்! உட்கார்ந்துதான் சொல்லேன். ரயில் தப்பிவிடாது.

மங்:—உட்கார நேரமில்லை. பக்ஷணத்தைச் சொல்லாவிட்டால் நீ கோபிக்கப்போகிறாயே என்று அவசரமாக ஓடிவந்தேன்.

## உருளைக்கிழங்கு அல்வா!

உருளைக்கிழங்கை, நாலாக நறுக்கி வேக வைத்துத் தோலை உரித்துக் கொள்வது, சேமியா அச்சுக்கண்களைப்போல் ஸன்னமான கண்களையுடைய அகலமான அச்சு இரும்பில் ஒன்றிருக்கிறது. அதில் உரித்த கிழங்கைப் போட்டு தட்டில் பிழிந்தால் சேமியாவைப்போல் விழும். பத்துபலம் கிழங்குக்கு, ஒரு தேங்காய் வீதம் துருவி நன்றாக வதக்கிக்கொள்வது. இதற்கு அரை வீசை சர்க்கரையை நன்றாகப் பாகு வைத்துக்கொண்டு பாகு கெட்டி பதம் வந்ததும், தேங்காயையும், உருளைக்கிழங்கு சேமியாவையும் போட்டு நன்றாகக் கிளறுவது, கெட்டியாய் ஹல்வாப் பதம் வந்ததும், இறக்கி வைத்து வறுத்த முந்திரிபருப்பு, பாதாம்பருப்பு, த்ராக்ஷை, குங்குமப்பூ, ஏலப்பொடி முதலியவைகளை சேர்த்து காய்ந்த நெய்யில் கொஞ்சம்விட்டு நன்றாகக் கிளறி தட்டில் கொட்டி துண்டங்களாகப் போடலாம். அப்படியேயும் வைக்கலாம். இது மிக்க ருசியாயும் மணமாயும் இருக்கும்.

## வாழைக்காய் வடை

வாழைக்காயை வேகவைத்து மேல் சட்டையை உரித்துக்கொள்வது, அதற்குத் தக்க உப்பு, பச்சைமிளகாய், கொத்தமல்லி, இஞ்சி, பெருங்காயம், இவைகளைக் கல்லுரலில் நன்றாக அறைத்துக்கொண்டு வாழைக்காயையும் கடைசியில் போட்டு அறைத்துக்கொள்வது, கொஞ்சம் அரிசிமாவைக் கூடக் கலந்துகொள்வது, முந்திரிபருப்பு துண்டங்களும் சேர்க்கலாம். பக்குவமாகக் கலந்த மாவை வடையைப்போல் தட்டி நெய்யில் அல்லது எண்ணெயில் பொறித்தால் வெகு ருசியாயும் வாஸனையாயும் இருக்கிறது. சூடாகச் சாப்பிட்டால் கரகரப்பாக இருக்கும். ஆறினால் மெத்தென்று போகும். வாய்க்கு வெகு நன்றாயிருக்கிறது.

இந்த இரண்டையும் நீயும் செய்துபார். நான் பொங்கலுக்குள் வந்துவிடுவேன். அப்படி வராவிட்டால் பக்ஷணம் செய்தாயா! எப்படி இருந்தது என்பதை கடிதம் எழுது, நான் வருகிறேன் நேரமாயிற்று, குங்குமம்கொடு.

கல்:—இதோ தயாராய் வைத்திருக்கிறேன். எடுத்துக்கொள்ளு. பொங்கலுக்குள் வந்துவிடு. இன்னொரு சமயம் பிறந்த வீட்டிற்குச் சீராடப் போகலாம்.

## நித்யானந்தரின்

# ரேடியோ டயரி



(வை. மூ. ஸ்ரீநிவாஸன், M.A., B.L. அட்வகேட்.)

லாவண்ய சர்மா :—நமஸ்காரம் மிஸ்டர் ஆனந்தம்! என்ன மெய் மறந்து உட்கார்ந்திருக்கிறீர்? எதைக் கண்டு அப்படி மயங்கிவிட்டீர்?

நித்யானந்தர் :—வரணும். வரணும். நீர் சற்று முன்பு வந்திருக்கக் கூடாதோ! அடாடா! எப்பேர்ப் பட்ட சங்கீதம்!...சரி! எது இவ்வளவு நேரம் கழித்து இந்த பக்கம் வந்தது!

லா:—வைகுண்ட ஏகாதசியாயிற்றே. கோவிலுக்குச் சென்று பரமபத வாசற்படியைத் தாண்டிவிட்டு சுவாமி தரிசனம் செய்துவந்தேன்... கேட்டதற்கு பதிலைக் காணுமே! யார் கச்சேரியைக் கேட்டு அவ்வளவு ஆனந்தப்பட்டீர்?

நி:—“கிழப்புலி”, சங்கீத அரசி ஸ்ரீமதி வயோதிக யௌவன...

லா:—ஸ்ரீமதி பெங்களூர் நாகரத்தினம்மாளா? அடாடா! தெரியாது போயிற்றே! ஒரு மணி முன்னதாக வந்திருப்பேனே! அவ்வளவுதான் பிராப்தம். சர்க்கரை தித்திப்பாயிருந்ததாவென்று கேட்பதுபோல் கேட்கிறேன். எப்படி இருந்தது?

நி:—அபாரமாயிருந்தது. கான மழையென்றால் மிகையாகாது. இந்த தள்ளாத வயதில் என்ன சாரீரம்! கம்பீரம்! வீணைகமகம்! அனாயாசமாக எவ்வளவு பெரிய சங்கதிகளையெல்லாம் இன்றும் பொழிந்து கொட்டுகிறார்! அந்த பழங்காலத்து வழியை விடாமல் துளிகூட சலிக்காமல் வர்ணம் முதல் ஜாவளிவரை “ஜமாய்த்து” விட்டார்!

லா:—இந்த வயதில் இப்படிப் பாடுவது சாதாரண மனித சக்தியில்லை. எல்லாம் அந்தம்மாள் பஜிக்கும் ஸத்குரு ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமியின் அனுக்ரகம்தான்.

நி:—அதில் சந்தேக மென்ன? இருக்கிறது?

லா:—மற்றபடி விசேஷமென்ன?

நி :—மாதர்களின் மாதமாக அமைந்ததுதான் இம் மாதத்திய விசேஷ அம்சம். வஸந்தகோகிலம் (6உ); ராஜம் புஷ்பவனம்(7உ); கே. பி. சுந்தராம்பாள் (13உ); டி. என். மாணிக்கம் (19உ); லலிதா வெங்கட்ராம் (26உ); டி. கே. பட்டம்மாள் (27உ) முதலியவர்களின் கச்சேரிகள் அபூர்வமாய் அமைந்தன. ஒவ்வொன்றும் இசைவிருந்தாயிருந்தது.

லா:—“தேனினுமினிது” என்பார்களே, அப்படியிருந்ததோ?

நி :—ஆம். அதேபோலதான் ஸ்ரீ. பி. ஸ்ரீ. தயாரித்த “கடமையே தர்மம்” எனும் நாடகமும். அழகான நடை, உயிருள்ள உச்சரிப்பு. நிகரிலா ஒலிபரப்பு. அம்மாதிரியான சிறு நாடகம் இதுவரை கேட்டதே இல்லை. அவ்வொலிபரப்பு சென்னை நிலயத்திற்கே ஒரு தனிப் பெருமையை சம்பாதித்துக் கொடுத்து விட்டது.

லா:—“கடமையே தர்மம்”என்ற தலைப்பைப் பார்த்தால் கீதை...

நி:—ஆமாம் ஆமாம்! ஸ்ரீமத் பகவத்கீதையின் ஸாரத்தை கால்மணியில், “எஸ்ஸென்ஸாக” சித்திரித்தார். நாடகம் ரொம்பவும் நன்று

யிருந்தது; ஆனால் சந்திரனையும் மேகம் களங்கப்படுத்துகிறதல்லவா? அதுபோல் அர்ஜுனனாக நடித்தவருக்கு "ள்" என்ற எழுத்தை உச்சரிப்பதற்கு, 'சுட்டுப்போட்டாலும்' வராதுபோலிருக்கிறது. "கிரீடங்கல்" "தாங்கல்" என்றெல்லாம் உச்சரித்தால் எப்படி இருக்கும்? அவ்வளவு நன்றாயமைந்த அந் நாடகத்திற்கு இது திருஷ்டிபரிகாரமாயிருந்ததென்றுதான் சொல்லவேண்டும். இச்சிறு குறையைத்தவிர, அர்ஜுனன் பாவத்தில் சிறிதும் குறைவேயில்லை.

லா:—ஆகையால் இம்மாதத்தில் வேறு எதுவும் அவ்வளவு 'சுச்சிதமாக' அமையவில்லை யென்கிறீர்.

நி:—ஆமாம். "தர்ம தரிசனம்" என்ற 'கௌதமா'வின் தயாரிப்பு அடுத்தபடியாக நன்றாயிருந்தது. மகா பாரதத்திலிருந்து தொகுக்கப்பட்ட இசை நாடகம் அது.

லா:—கிராம நாடகம் ஒன்றுமில்லையா?

நி:—சொல்வதற்குள் அவசரப்படுகிறீரே. மச்சகந்தி, கட்டுகலப்பை, திருமலைப்பிள்ளை விஷயமாக ரேடியோ பஞ்சாயத்து முதலிய நிகழ்ச்சிகள் மிக ரஸமாயிருந்தன.

லா:—ஏகாதசிக்காக விசேஷ நிகழ்ச்சி ஒன்றுமில்லையா?

நி:—கிணற்று நீரை வெள்ளமா அடித்துக்கொண்டு போய்விடும்! இவ்வளவு அவசரப்படுகிறீரே! இன்று தானே ஏகாதசி, நேற்றே ருக்மாங்கதன் சரித்திரத்தை நடித்தார்கள். அதில் கலந்துகொண்ட சிலரின் குரலைப்பற்றியும், சங்கீதமென்று வெளிப்பட்ட சப்தத்தின் அருமையையும், அவர்கள் இசைத்த மெட்டுக்களின் பொருத்தத்தையும் என்னென்று சொல்வது! அவர்களுக்கு இந்த உலகத்தையே தான் தூக்கி கொடுத்துவிடவேண்டும்! காதைப் பொத்திக்கொண்டுவேறு உலகத்திற்குப் போய்விடலாம்போலிருந்தது!

லா:—அவ்வளவு பேஷாயிருந்ததா!

நி:—உமக்கு விளையாட்டாயிருக்கிறதுபோலும், நீர் கேட்டிருந்தீரானால் நேற்று இரவெல்லாம் 'ருக்மாங்கதன்' 'தர்மாங்கதன்' என்று பிதற்றிக்கொண்டே யிருந்திருப்பீர். இன்று சாயங்காலம் அதே ருக்மாங்கதன் சரித்திரத்தை கிராம காலக்ஷேபகர் உபன்னியாசம் செய்தார். அதன் "ஜோரே" ஒரு தனிசான்!

லா:—உபன்னியாசம் என்றதும் ஞாபகம் வருகிறது. இது மார்கழி மாதமாயிற்றே. திருப்பாவை காலக்ஷேபம் நடைபெறுகிறதா?

நி:—அதுதானே இல்லை. இம்மாதத்திய விசேஷ அம்சமாயிருந்தும் அதை கவனிக்கவேயில்லையென்பது ஆச்சரியமாயிருக்கிறது. தினமும் ஒரு பாட்டைப் பாடி அர்த்தம் சொன்னால் ரொம்பவும் நன்றாயிருக்கும். அம்மாதிரி ஒன்றையும் காணோமே!

லா:—இப்போது ஸ்ரீமத் ராமாயணம், ஸ்ரீமத் பகவத்கீதை முதலியவைகளைப்பற்றி சொற்பொழிவுகள் உண்டா?

நி:—அடியோடு நிறுத்திவிட்டார்கள். காரணம் தெரியவில்லை. பொதுஜன அறிவையும், தெய்வபக்தியையும் விருத்தி செய்யக்கூடிய அத்தகைய சொற்பொழிவுகளை சமீபத்தில் இல்லாதிருப்பது வருந்தத்தக்கது.

லா:-ஹாஸ்யநிகழ்ச்சிகளேயில்லையா?

நி:—மறந்தேவிட்டேனே! 'ராமு-சோமு' நிகழ்ச்சியைக்கேட்டு குலுங்கக் குலுங்கச் சிரித்தோம். ரொம்பவும் ரஸித்தோம்.

லா:—ரொம்ப நேரமாய்விட்டது. உத்தரவா?

நி:—நல்லது, சென்று வாரும். அடுத்த திங்கள் முதல் வெள்ளிவரை தினமும் திருவையாறு நிகழ்ச்சிகளை ஒலிபரப்பப் போகிறார்கள். இங்கு வந்து கட்டாயம் கேளும். நேரிலேயே திருவையாற்றிலிருப்பதுபோன்ற ஆனந்தம் ஏற்படும்,

### "கற்றுக்குட்டி"

புதிதாக ஸ்ரீமத் பகவத்கீதையை சிரத்தையுடன் படிப்பவர்கட்கு ஸ்ரீமான் "கற்றுக்குட்டி" தான் கற்றுணர்ந்த கீதாஸாரத்தை "கிருஷ்ணாம்ருதம்"என்ற தலைப்பில் எளிய நடையில் தொடர்ச்சியாக வெளியிடுகிறார். ஸ்ரீமத் பகவத் கீதையை நன்கு படித்துள்ள அறிஞர்களுக்கு இக்கட்டுரையில் புதிதாக ஒன்றுமிருக்காதெனினும், அவர்களும் இதைப் படித்து அபிவிருத்திக்கான அபிப்பிராயத்தைத் தெரிவிக்கும்படி கோருகிறேன்.—வை.மு.கோ.

## ஸ்ரீ கிருஷ்ணாம்ருதம்



உலக மகா இலக்கியங்களில் ஸ்ரீமத் பகவத்கீதை மிகவும் உன்னத ஸ்தானம் பெற்று சிறந்து விளங்குகிறதென நாம் புதிதாய் சொல்லவேண்டியதில்லை. அதனால் ஏற்படும் படிப்பினையும் பிரயோஜனமும் விவரிக்க இயலாதது. அதன் மகத்துவத்தைப்பற்றி ஸ்ரீ வராஹ புராணத்தில் விஷ்ணு—பூமாதேவி சம்பாஷணையில் விவரமாய் விளக்கப்பட்டுள்ளது.

அறிஞர்கள் தம்தம் கொள்கைக்கு அநுகூலமாய் ஸ்ரீமத் பகவத்கீதையை அர்த்தம் செய்துள்ளார்கள். இவ்வாறாக பல வியாக்யானங்கள் ஏற்பட்டுள்ளதால் எது சரியான கருத்தை வெளியிடுகிறதென்பதை எம்போன்ற சிறிய அறிவையுடைய லௌகீகர்களுக்கு அறிந்துகொள்வது எளியதாயில்லை.

ஸ்ரீமத் பகவத்கீதையை எத்தனை தரம் படித்திருந்தபோதிலும், திரும்பத் திரும்பப் படிக்கையில் புதிது புதிதாக ஞானம் உதயமாவது நிச்சயமென்பதே அறிஞர்களின் அநுபவம். எவ்வளவு சிக்கலான நிலைமைக்கும் அதில் நிவர்த்தி மார்க்கமிருப்பதே அதன் மகிமையைக் காட்டுகிறது.

எழுநூறு ச்லோகங்களில் அடங்கியுள்ள இக் கீதோபநிஷத்தின் ஸாராம்சம் கீழ்கண்ட ஏழு ச்லோகங்களில் அடங்கியுள்ளதாக சிலர் கருதுகின்றனர். பகவானால் திருவாய்மலர்ந்தருளப்பட்ட இவ்வேழு ச்லோகங்களில் முதல் மூன்றும் இரண்டாவது அத்தியாயத்திலும், மற்ற நான்கும் பதினெட்டாம் அத்தியாயத்திலும் உள்ளன.

(1) அர்ஜுனா! எவரைக் குறித்து துக்கப்பட நியாயமில்லையோ, அவர்களைப்பற்றி துயரப்படுகின்றாய். ஞானிகளைப்போல் வாதம் செய்கின்றாய். ஆனால் உண்மை ஞானத்தை உணர்ந்ததாக உன் உரைகள் காட்டவில்லை. அறிஞர் உயிரிழந்தவர்களைப்பற்றி துக்கிப்பதில்லை; உயிரிழக்காதவர்களைப்பற்றியும் துயரப்படுவதில்லை. (உயிரிழந்தவர்களைப்பற்றி வருந்திப் பிரயோஜனமில்லை; அவர்கள் மறுபடி பிழைத்துக்கொள்ளப்போவதில்லை; அவர்களைக்குறித்து வருந்துவதும் அவசியமில்லை; ஏனெனில் அவர்களது உடல் அழிந்ததே தவிர, ஆத்மா அழியவில்லை. உயிருள்ளவர்களைப்பற்றி யாரும் துக்கிப்பதற்கு நியாயமே யில்லை.) 2 (11)

(2) இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தில் இவ்வளவு உள்ளச் சோர்வை நீ எப்படி அடைந்தாய்? இதற்கு ஆர்யர்கள் ஒருநாளும் இடங்கொடுக்கவேமாட்டார்கள். இது உனக்கு ஸ்வர்க்கம் கிடைக்காது தடுத்து, அபகீர்த்தியையும் உண்டாக்கும். 2 (2)

(3) இந்த பேதைமைத்தனத்திற்கு இடங்கொடாதே. இது உனக்குத் தகாது. பராக்ரமத்தினால் சத்ருக்களைத் தகிக்கும் நீ இவ் விழிவான மனத் தளர்ச்சியை உதறித் தள்ளிவிட்டு எழுந்து நில்! யுத்தம் செய்! 2 (3)

(4) எனக்கு மிகப் பிரியமானவனே! உனக்கு நல்லதை மறுபடியும் சொல்கிறேன், கேள். இதுதான் எல்லா உபதேசங்களைக் காட்டிலும் மிகவும் ஆழ்ந்த ரகஸியமான எனது பரமவசனம். 18(64)

(5) எல்லா உயிர்களுக்கும் ஈச்வரன் அவைகளின் உள்ளத்தில் அந்தர்யாமியாக வீற்றிருக்கிறான். அவன் எல்லா ஜீவராசிகளையும் மாயையால் சக்கரத்திலேற்றி சுழற்றுகிறான். (எல்லா ஜீவன்களையும் தன்னால் சிருஷ்டிக்கப்பட்டுள்ள தேகங்களில் புகுத்தி சம்சார சாகரத்தில் சுற்றும்படி தனது மாயையால் செய்கிறான்.) 18 (61)

(6) அந்த ஈச்வரனையே எல்லாவிதத்தாலும் சரணடை. அவரது கிருபையைப் பெற்றால் எல்லாவற்றிற்கும் மேலான பரம சாந்தியையும், நித்தியஸ்தானமாகிய பரமபதத்தையும் அடையலாம். 18 (62)

(7) எல்லா தர்மங்களையும் கடமைகளையும் விட்டு, எல்லா பூதங்களிலும் அந்தர்யாமியாய் விளங்கும் என்னையே சரண்புகு. உனது அந்தர்யாமியாயிருந்து உன் பாபங்களையும் உனக்கு நேரும் இடையூறுகளையும் நான் விடுவித்து, உன் அஞ்ஞானத்தைப் போக்கிப் பிரம்மஞானத்தைக் கொடுக்கிறேன். இடையூறுகளை உன் சொந்தப் பிரயத்தனத்தினால் விலக்கமுடியவில்லையே யென்று வருந்தாதே! என்னை நீ சரணமடைவதே அவைகளைப் போக்கிவிடும். 18 (66)

போர்க்களத்தில் நடந்த கீதோபதேசத்தின் ஸாரத்தையும் மகிமையையும் தொடர்ந்து கவனிப்போம்.

—(தொடரும்)

# ஞான தீபம்




58-வது

நாவல்



# ஞானதீபம்

வை.மு.கோ. 58.வது நாவல்

## 1

### அன்பு உள்ளமும் அழகிய வஸந்தமும்

"உலகத்தில் மக்களைப் பரவசமுறச்செய்யும் அனேக விஷயங்களில் — காலங்களில் — வஸந்த ருதுவாகிய வைகாசிமாதம் மிகவும் சிறந்ததல்லவா? இந்த அருமையை அறிந்துதான் நம்முடைய பெரியோர்கள் வஸந்த ருதுவில் விவாகங்கள் செய்யவேண்டுமென்று வைத்திருக்கிறார்கள். மற்ற மாதங்களைவிட இந்த மாதத்தில்தான் புஷ்பங்கள், காய்கரிகள், மற்ற சாமான்கள் எல்லாம் மலிவாகக் கிடைக்கும். மனத்திற்கு ரமணீயமான ஆனந்தமும், உத்ஸாகமும் உண்டாகும். வஸந்தனின் அதிமனோகரமான புஷ்பவாளியினுடைய சக்தியின் சாயை கலந்த காற்று வீசும்போது நீயும் நானும்கூட மயங்கிவிடுவோமல்லவா? — என்றான் சோமநாதன்.





கம:—சரி! சரி! ஏதோ ஆரம்பித்து எப்படியோ வந்து நம்மிடமே முடித்து விடுகிறீர்களே! அதோ! வஸந்தகாலத்தின்குயில்கள் என்ன ஆனந்தமாய்க் கூவுகின்றன. அதைக் கேட்கும் போது எவ்வளவு மகிழ்ச்சி உண்டாகிறது?

சோமு:—வஸந்தகாலத்தின் தென்றலே ஒரு ஜோர் தான். இதே வஸந்தகாலத்தில்தானே நமக்குக்கூட விவாகமாகியது. அந்நாளைய இன்பத்தை என்னிதயம் மறக்கவேஇல்லை. பொம்மை போல் நீ தலைகுனிந்து கொண்டு உட்கார்ந்திருந்தும், உன் திருட்டுக் கண்கள்மட்டும் அடிக்

கடி என்மீது பாணங்களைத்தொடுத்தவாறே இருக்கும். அடேயப்பா! அந்த பாணத்தால் அடிபட்ட நான் எப்படித்தான் தவித்தேன் என்று உனக்குத் தெரியுமா?

கம:—(வெட்கத்துடன்) அடாராமா! இப்போதுதான் நீங்கள் கல்யாணம் செய்துகொண்டதுபோல் பேசுகிறீர்களே! இப்போது நீங்கள் ஒரு குடும்பத்தின் தலைவர். அனேக பகதூர் பட்டங்கள் பெறுவதற்கு எத்தனையோ பேர்கள் எத்தனையோ முயற்சி செய்தும், பணங்களைச் செலவிட்டும், காக்காய்ப் பிடித்தும்கூடப் பட்டங்கள் கிடைப்பது அரிதாயிருக்கிறது. உங்களுக்கோ வெகு சீக்கிரத்திலே தகப்பனார், குடும்பத் தலைவன், என்கிற பட்டங்கள் கிடைத்திருக் கையில் பெரியமனிதர்கள் பாணியில் பேசாமல் இப்போதுதான்...

சோமு:—கமலா! நீ ஏதேதோ பேசி என்னை மடக்கப் பார்த் தாலும் நீயும் நானும் என்றென்றும் மணங் குன்றாத புஷ்பமாகவே எனக்குத் தோன்றுகிறது. அந்த ஓர் இன்ப நிலையிலேயே நம் வாழ் நாள் பூராவும் கழியவேண்டுமென்பதே எனது பிரார்த்தனை. அதற்கு பகவான் அருள் பாலித்தால் போதும். நான் தலைவனோ, தகப்ப னரோ, எதுவாகவிருப்பினும் சரி; நான் என்றும் இளமை குன்றாத வாலிபன். மதுவைக் குடித்து மகிழும் வண்டுபோல் நான் உன் னெழிலைப் பருகிக்களிக்கும் இன்பத்தில் குறையாதிருக்கவேண்டும்.

கமல:—யாரேனும் உங்கள் வார்த்தையை தூரவிருந்து கேட் டால் பரிகஸிக்கப்போகிறார்களே! நம் ஜெயாவுக்குக் குழந்தை பிறந்தபிறகுகூட இதேபோல்தான் பேசுவீர்கள்போலிருக்கிறது.

சோமு:—ஏன் பேசக்கூடாது? அப்போது தாதா என்கிறபட்ட மும்கூட வந்துவிட்டபெருமையில் "தா தை, தா தை" என்றுகுதித்துக் கொண்டேசொல்லுவேன். அப்போதும் நீராஜாத்திதான். என்கமலா! பெண்களே இப்படித்தான் சந்தோஷக் குறைவாய்ப்பேசுவார்களா?

கமல:—சந்தோஷக் குறைவு என்ற பதமே அவர்களிதயத்தில் உதிக்காது. எப்போதும் ஆனந்தம் நிரம்பித் தேங்கும் கேணிபோ லத்தான் ஜ்வலிக்கும். ஆனால் உங்களைப்போல் வெளியில் காட்டிக் கொண்டு பெண்கள் குதிக்கமாட்டார்கள். அவர்களுடைய இதயம் இன்பக்கேணியாயிருப்பதுபோல் எந்த விஷயத்தையும் புதையல் போல் அடக்கிவைத்துக்கொள்ளும் சக்தியும் உண்டு. சமயம் வரும் போது அதற்கு ஏற்றாப்போல் நடக்கமுடியும். இதனால் சந்தோஷக் குறைவோ, பற்றுதலற்ற நிலையோ அவர்களிடம் காணமுடியாது. நீங்கள் நம் கல்யாணத்தில் நலங்கு, ஊஞ்சல் முதலிய சமயங்களில் என் கையைப் பிடித்துக்கொண்டு வரும்போது என் கையை விஷ மத்தனமாகக் கிள்ளிவிட்டதையும், சந்தனம் பூசும்போது கழுத் தில் கிச்சு கிச்சு பண்ணியதையும் என் உள்ளம் மறக்குமா!

பிறகு தீபாவளிக்கு வந்திருந்தபோது வீட்டில் ஒருவருமில் லாத சமயம் பார்த்து ஏதோ கிணற்று நீரை வெள்ளம் கொண்டு

போவதுபோல் நினைத்து என் கையைப் பிடித்து இழுத்தீர்களே! அப்போது எங்கப்பாவே பார்த்துக்கொண்டு வந்துவிட்டாரே! அச் சமயம் உங்கள் முகத்தில் அசடுவழிந்ததே, அதைத்தான் நான் மறப் பேனு! உங்களைப்போல் தப்பட்டையடிக்கமாட்டேன்.

சோமு:—அடேயப்பா! பக்காப் பேர்வழியாயிருக்கிருயே! கமலா! நீ என்னதான் சொல்லு. நான் என் மனத்தில் தோன்றி யதைப் பிதற்றிக்கொண்டுதானிருப்பேன். இந்த வஸந்த ருதுவில் தான் என் சகோதரி தங்கமணிக்கும் கல்யாணமாயிற்று. இதே வஸந்தருதுவில்தான் என் தங்கை காமு பிறந்தாள். வஸந்த ருது வென்றால் எனக்கொரு தனி இன்பந்தான் உண்டாகிறது. வஸந்த ருதுவில்தான் எனக்கு வேலையாயிற்று. இதே வஸந்தருதுவில்தான் நீ என்னிடம் வந்து சேர்ந்தது.

கமல:—அடாடா! இதென்ன வஸந்த ருது பைத்தியம் திடீ ரென்று பிடித்துவிட்டது. இனி உங்கள் பெயரையே மாற்றி வஸந் தன் என்று வைத்துக்கொள்ளுங்கள்.

சோ:—கமலா! பரிகாஸம் செய்யாதே...நாம் பிழைத்துக் கிடந்தால் நம் கண்மணி ஜெயலக்ஷ்மிக்குக்கூட வைகாசிமாதம் வஸந்தருதுவில்தான் கல்யாணம் செய்யவேண்டும். என்ன கமலா! சரிதானே?—என்று சிரித்தான்.

கமலாவும் சிரித்துக்கொண்டே, "சரிதான். நம் ஜெயாவுக்கு இன்னும் ஒரு வயதுகூட ஆகவில்லை. அவளுக்குக் கல்யாணத்தைப் பற்றி இப்போதே யோசனையா!....பகவான் கிருபை பரிபூர்ணமாய் இருந்தால் நடக்கிறது" என்று சற்று வேதாந்தத்துடன் பதில் சொன்னுள்.

அதே சமயம் தபால்காரன் 'தபால்' என்றான். உடனே கமலா ஓடிச்சென்று தபாலை வாங்கி வரும்போதே, 'பார்த்தீர்களா! நீங்கள் கல்யாணத்தைப்பற்றிச் சொல்லும்போதே கல்யாணக் கடிதம் வந்திருக்கிறது. நமது சீமாவுக்கு இம்மாதம் 20-ந் தேதி கல்யாணமாம். பேஷ். ஒரு பிரயாணம் இருக்கிறது...இதோ இன் னெரு கடிதமும் அழைப்புதான். வஸந்தாவின் வளைகாப்புக் கொண்டாட்டத்திற்கு வரவேண்டுமாம்...இன்று மாலையிலேயே நடக்கப்போகிறது. நாம் கட்டாயம் போய் பார்க்கலாம். எனக்கு நிரம்பவும் இஷ்டம்" என்றாள்.

சோமு:—சரி...இன்று ஞாயிற்றுக்கிழமைதான். ஆபீஸும் இல்லை. சாயங்காலம் போய்வருவோம். ராணியம்மாளின் உத்திர வுக்கு மிஞ்சி ஏதாவது உண்டா? அதோ குழந்தை வருகிறது. அதற்குப் பால்போட்டு.நான் கடைக்குப்போய் வந்துவிடுகிறேன்— என்கையில், அவனைப் போகவேண்டாமென்று தடுப்பதுபோல் அவ னுடைய சினேகிதன் தம்பதி சகிதம் அங்குவந்தான்.

வந்தவர்களை இருவரும் ஆனந்தமாக வரவேற்று உபசரித்து காப்பி டிபன் கொடுத்தார்கள். "என்ன சோமு! வெளியில் கிளம்பினுயா என்ன! நாங்கள் தடையாக வந்தோமா!" என்றான் சாமா.

சோமு:—தடையுமில்லே ஒன்றுமில்லை. கமலாவுக்கு ஒரு அழகான புடவை நேற்று பார்த்து வைத்துவிட்டுவந்தேன். அதை அவளுக்குத் தெரியாமல் திடீரென்று வாங்கிக் கொடுக்கவேண்டுமென்று நினைத்தேன்.

சாமா:—ஏண்டா! நாம் இருவரும் இத்தனை சினேகிதர்களாய் இருப்பதன் விசேஷமா, நமக்குள் மன ஒற்றுமையும் அதிகமாகவிருக்கிறதே! நானும், என் மனைவியை இங்கு உன் மனைவியுடன் விட்டுவிட்டு கடைக்குப்போய் புடவை வாங்குவதற்காகவே வந்தேன். அவளுக்குத் தெரிந்தால் தானும் கூட வருவேன் என்று பிடிவாதம் செய்வாள். அழைத்துப்போகாவிட்டால் கோபம்வரும். கோபம் வந்தால்தான் உனக்குத் தெரியுமே. அவள் வயிறு காயும், முகம் சுண்டும், அந்த வேகம் என்னையும் சேர்த்து வாட்டும். அதற்குப் பயந்து அழைத்துச் சென்றுலோ போதும் போதும். கடையில் வாங்கப்போவது ஒரே ஒரு சேலை; அதற்கு அங்குள்ள பீரோ முழுதும் கிளறிவிடுவாள். "அது நன்றாயிருக்கிறது. இது நன்றாயிருக்கிறது. இது வேணும் அது வேணும்" என்று கடைக்காரன் எதிரில் கேட்பாள். அப்போது நான் என்ன செய்வது? தலையைச் சொறிவதா? மாட்டேன் என்றுதான் சொல்வதா! நாம் வாங்க நினைக்கும் விலையைவிட அதிகமாகிவிடும். தர்ம சங்கடத்தில் முடியும். அதற்காகத்தான் இங்கு அழைத்துவந்தேன்.

சோமு:—பேஷ்! உன் மனைவி ஷாப்பிங்கு செய்யும் முறை வேடிக்கையாயிருக்கிறதே. என் கமலா அப்படியில்லையப்பா! என்னுேடு கடைக்குவந்தாலும் சரி. நான் எது நன்றாயிருக்கிறதென்று சொல்கிறேனுே, அதைத்தான் அவள் எடுத்துக்கொள்வாள். அவளுக்காக சிலது நிரம்பவும் பிடித்திருந்தாலும்கூட அதை வெளிப்படுத்திக்கொள்ளவேமாட்டாள். அதை நானுக அறிந்தால் அவளுக்குத் தெரியாமல் வாங்கிக்கொடுத்து மகிழ்வதில் எனக்கொரு தனி இன்பமுண்டு. நல்ல புடவை ஒன்று புதியமாதிரியில் நேற்று பார்த்தேன். அதைவாங்கலாமென்றுதான் புறப்பட்டேன். சரி, வருகிறுயா? இருவரும் போவோம்" என்றான்.

அதற்கு சாமா சம்மதித்ததால் சோமு கமலாவைக் கூப்பிட்டு, "கமலா! நாங்களிருவரும் வெளியே போய்வருகிறோம். கதவைப் போட்டுக்கொள்ளு" என்று கூறிப் பின் இருவரும் வெளியே சென்றார்கள். சோமநாதனின் உள்ளத்தில் ஓர் புதிய சந்தோஷமும் பெருமையும் தாண்டவமாடியது.

# 2

## கண்ணிய மனைவியும்—காளிகாதேவியும்

சோமநாதன் பெரிய குடும்பத்தில் பிறந்தவன். அவனுடைய பிதா சொல்பசம்பளத்தில் வேலையிலிருந்தவர்; எனினும் கௌரவமும் கண்ணியமும் பொருந்தியவர். பெரிய குடும்பத்தைச் சேர்ந்த நாணயஸ்தர் என்று அவரிடம் அவ்வூராருக்கே மிகவும் நன் மதிப்பும் நம்பிக்கையும் உண்டு. அனேகர் அவருடைய யோசனையைக் கேட்டு நடப்பார்கள்.

அவருடன் கூடப்பிறந்த சகோதர சகோதரிகள் ஏராளமானவர்கள். அவர்களுக்கெல்லாம் மூத்தவராகிய இவரே தலை பொருப்பாகக் கவனிக்கவேண்டியவராயிற்று. கடைசீ தம்பிக்குக் கல்யாணம்செய்யும்போது இவருக்கு நான்கு குழந்தைகளாகிவிட்டன. அப்போதும் உடன்பிறந்த சகோதரிகளுக்குச் செய்யவேண்டிய சீரோ சிறப்போ, ஒன்றிலும் குறைவில்லாது செய்து அவர்களை மகிழ்வித்து வந்தார்.

கடைசீ சகோதரியின் 5 வது ப்ரஸவத்திற்குக்கூட தானே அழைத்துவந்து சகலமும் செய்து தாயையும், குழந்தையையும் சீருடன் கொண்டுவிட்டார் என்றால் அவர் யாருக்குத்தான் நல்லவராக இருக்கமாட்டார். அவருடைய தர்மபத்னி அவரது நிழல்போல் சகலவிதத்திலும் ஒரே மனத்துடன் ஒத்துழைத்து இல்லறம் நடத்தி வந்தாள். அந்தம்மாள்மகராஜியாய் மஞ்சளும்,குங்குமமும்,புஷ்பமும், சந்தனமும் கமகமவென்று மணம் வீச, வயிற்றில் பிறந்தவர்கள் எல்லோரும்க்ஷேமமாயிருக்கும்போது ஜாம்ஜாம் என்றுஉயிர் துறந்தாள்.

"தன் பிள்ளைகளை அழைத்து" உங்கள் தந்தையைப்போல் நீங்களும் நடந்து கொள்ளுங்கள். அவருடைய அடிச்சுவட்டை மறக்காது பின்பற்றி புகழும், பெருமையும் அடையுங்கள். பந்துமித்ர பரிபாலனமும், பகவத் பக்தியும் தவறாது செய்யுங்கள்" என்று புத்தி புகட்டிச் சென்றாள்.

அதை அச்சமயம் எல்லோரும் கேட்டு அப்படியே நடப்பதாக கூறித் தலையை அசைத்தார்கள். தன்னுடைய விலையிலா மாணிக்கம் போன்ற மனைவி மறைந்த விசனம் தாங்காமல் வெகு விரைவிலேயே கிழவரும் காலமாகிவிட்டார்.

அவர் இறக்குந் தறுவாயில் அவருடைய கடைசீ பெண்ணாகிய காமாக்ஷிக்குப் பத்து வயதுதான் ஆயிற்று. கடைசீ மகனாகிய சோமநாதனுக்கும், காமாக்ஷிக்குந்தான் விவாகமாகவில்லை. சோமு அப்போது மெட்ரிக்குலேஷன் படித்துக்கொண்டிருந்தான்.

அவர்களுக்கு அதிகம் சொத்துகிடையாது; மூன்று காணி நிலமும் ஒரு பழய வீடுந்தான் இருந்தன. மூத்தமகனுக்கு கல்யாணமாகி குழந்தையும் பிறந்திருந்தது. அவனே இக் குடும்பத்தின் பொறுப்பாளியாகவிருந்தும் அவன் தன் தாயாருக்குக் கொடுத்த வாக்கை

மறந்து தன் உத்யோகத்தையே வட இந்தியாவுக்கு மாற்றிக் கொண்டு "என் பங்குக்கு வந்துள்ள ஒரு காணி நிலமும் எனக்கு வேண்டாம். இந்த சம்சாரத் தொல்லையும் வேண்டாம்" என்று கூறிச் சென்றுவிட்டான். இதைக் கண்டு உலகமே ப்ரமித்தது என்றால் அவன் குணத்தைப்பற்றி அதிகம் கூறுவானேன்.

இரண்டாவது மகனாகிய குருசாமியின் மனைவி தன் மாமியாரின் பழக்க வழக்கங்கள் சகலமும் நன்கறிந்தவளாகையால் அப்படியே தானும் செய்து கீர்த்தியடையவேண்டுமென்று விரும்பினாள். ஆனால் தகப்பனாரைப்போல் குருசாமி இருந்தால்தானே சோபிக்கும்.

சோமநாதன் படிப்புக்கு முதலில் முற்றுப் புள்ளி விழுந்தது. "எனக்கு வரும் 30 ரூபாய் சம்பளத்தில் சாப்பிடுவதா! உன் படிப்புக்குக் கொடுப்பதா! எங்கேனும் வேலை தேடிக் கொள்ளு காமுவின் கல்யாணத்தை முடித்து அனுப்பினால் போதும். அதற்கே நிலத்தை விற்கவேண்டும். என் ஒருவன் சம்பளத்தில் என்னதான் செய்ய முடியும்?" என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டான்.

அதற்குக் கட்டுப்பட்டு சோமுவும் அதோடு நிறுத்திக்கொண்டு வேலைக்காக அலையும் ஜாபிதாவில் சேர்ந்து அலையவாரம்பித்தான். ஏதோ புண்ணியவசமாக ஒரு வேலை கிடைத்துவிட்டதால் மெத்த சந்தோஷமடைந்தான். ஒருகாணி நிலத்தை விற்று காமுவுக்குக் கல்யாணம் செய்வதற்கு அண்ணன் தம்பி இருவரும் தீர்மானித்தார்கள்.

சோமு வெகு அழகாயும் கம்பீரமாயுமிருப்பதாலும், வேலையும் ஆய்விட்டதாலும் சுலபமாகப் பெண்கொடுப்பதற்குப் போட்டி இடவாரம்பித்தார்கள். காமுவின் கல்யாணத்தை முடித்த பிறகுதான், தான் செய்துகொள்வதாகச் சொல்லி மறுத்துவிட்டான்.

காமுவுக்கு நல்ல இடமாகப் பார்த்துக் கல்யாணத்தை நடத்தினார்கள். அந்த கல்யாணத்திற்கு வந்திருந்தபோது கமலாவைக் கண்டு மனதிற்குப் பிடித்தது. அவளேதான் மனைவியாக வருவதற்கு ப்ராப்த மிருந்ததால் கல்யாணம் அடுத்த மாதமே நடந்தேறியது. காமுவையும் புக்ககத்திற்கு அனுப்பிவிட்டுத் தானும் மனைவியை வீட்டிற்கு அழைத்துக்கொண்டான்.

குருசாமியை வேலையின் நிமித்தம் மலையாள தேசத்திற்கு மாற்றிவிட்டதால் அவனும் ஒரு மூலைக்குச் சென்றுவிட்டான். சோமுவின் குடும்பம் தனிப்பட வெகு இன்பமான வாழ்க்கை நடத்தத்தொடங்கியது. சோமுவின் மூத்த சகோதரியாகிய தங்கமணி பெரிய சம்சாரி; 6, 7 குழந்தைகளும் குடும்பத்தில் பலரும் இருப்பதால் ஒரு சமயாசமயத்திற்குக்கூட தம்பி வீட்டிற்கு வரமுடியாத நிலைமையில் இருந்ததால் காமுவின் சகல விஷயங்களையும் கமலாவே வெகு பொறுப்பாகக் கவனித்துச் செய்துவந்தாள்.

காமுவுக்குச் செய்வதென்றால் கமலாவுக்கு அலாதி ப்ரேமையும், இஷ்டமும் உண்டாகும். வருஷாவருஷம் ஒருமாதமாவது

காமுவை அழைத்துவந்து வைத்திருந்து, பிறகு அவளுக்குத் தன் சக்தியானுசாரம் புடவை, ரவிக்கை முதலியன வாங்கிக்கொடுத்து அனுப்புவாள். ப்ரதிவருஷமும் பொங்கல் பண்டிகைக்கும் கார்த்திகைப் பண்டிகைக்கும் பணமும் சீரும் தவருது அனுப்புவாள். தான் ஒரு புதுமாதிரி புடவை வாங்கிக்கொண்டால் உடனே அது போல் காமுவுக்கும் வாங்கி தீபாவளி சாக்குவைத்து அனுப்புவாள். கமலாவின் மாசற்ற அன்பும். தூய இதயத்தின் அழகும், நாத்தனர் என்கிற பொருமையில்லாது செய்யும் முறையும் கண்டு ஊரில் அவளைப் போற்ருதார் கிடையாது.

சில புண்ணியவதிகளைப்போல் குடியில் பிறந்த பெண்கள் வயிறெரியச் செய்வதும், மாமியார் மனத்தை நோகச் செய்வதும், கடவுளுக்கும் பயப்படாது ராக்ஷஸத்தனமாய் குடும்பம் நடத்துவதும் போலில்லாது கடவுளுக்குப் பயந்து, பெரியாருக்கு மதிப்பும், மரியாதையும் வைத்து கண்ணியமாய் தானும் நடந்து, கணவனையும்நடக்கச் செய்யும் அதிசயத்தைப் பார்த்தால், யார்தான் மெச்சமாட்டார்கள்?

எந்த இடத்திலும் ஒரு கூனி தோன்றுவது இயற்கையல்லவா! கமலாவின் தூரத்து பந்து ஒருத்தி அவளுக்கு எத்தனையோ உபதேசம் செய்துப் பார்த்தாள். சில பன்னடைகளைப் போன்று அல்ப குணமும், பொருமையும், வயிற்றெரிச்சலும் நிறைந்த பிசாசு ஜென்மமாக இருந்தால்தானே கமலாவின் மூளையில் இந்த உபதேசம் இடம் பெற்று நிற்கும்? தனக்குக் கலகம் செய்தவர்களை ஒரு பூச்சிபோல் விலக்கித்தள்ளினள். "குடியில் பிறந்த பெண்ணின் மனம் குளிர்ந்தால் தான் நம் குடி என்றும் குளிர்ந்திருக்கும். குடியில் பிறந்த பெண்ணின் வயிறெரிந்தால், நம் கொடியிலுள்ள சேலை நின்றெரியும்" என்கிற பழமொழியைக் கூறி முகத்திலடித்து அனுப்பினள். "என் கணவனின் சம்பாத்தியத்தில் நான் எது செய்தால் உங்களுக்கென்ன? கலகம் செய்து மனத்தைக் கலைப்பதற்காகவா நீங்கள் என்னிடம் உறவாடுகிறீர்கள்? போதும்; போதும். போய் விடுங்கள்" என்று கோபத்துடன் போட்ட கர்ஜனையில் எலும்புருக்கி வியாதியின் புழுக்களைப் போன்ற விஷம மனிதர்கள் விலகியே போய்விட்டார்கள்.

காமுவுக்கும் தன் அண்ணனைவிட அண்ணன் மனைவியின் மீதே அதிக அன்பும், மதிப்பும் இருந்துவந்தது. கமலா கணவனுடன் ஒருவித தொந்தரவுமின்றி அபாரமான சந்தோஷத்துடன் வாழ்க்கை நடத்தினள். இந்த இன்பத்திற்குச் சிகரம் வைத்ததுபோல் அவளுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அன்றைய தினமே சோமுவுக்கு சம்பளத்தில் 10 ரூபாய் உயர்வு ஏற்பட்டதால் குழந்தையின் அதிருஷ்டம் என்று அளப்பரிய சந்தோஷத்துடன் குழந்தைக்கு 'ஜெயலக்ஷ்மி' என்ற பெயரை அருமை அத்தையாகிய காமுவே சூட்டினள்.

முதலில், உயர்ந்த பத்து ரூபாயுடன் 15 ரூபாய் சேர்த்து காமுவுக்கு நல்ல பட்டுப் புடவை வாங்கி சுமங்கலி பிரார்த்தனை செய்து கொடுத்துத் தன் தாயாரை எண்ணி வணங்கினாள். தேனும் பாலும் போன்ற தம்பதிகள் என்றால் வேறு உபமானமே வேண்டாம். மன்மதனும் ரதியும்போலிருந்தார்கள்.

கமலா பிறந்தவுடனேயே தாயார் மறைந்தாள். தகப்பனாரும் தாயாரைப் பின்தொடர்ந்துவிட்டதால் அவளுடைய பெரிய தாயாரால் வளர்க்கப்பட்டு சோமுவிடம் ஒப்படைக்கப்பட்ட பரதேசியாகையால் பிறந்தகத்தின் சுகம் இன்னதென்று அறியாத கஷ்டத்தையெல்லாம் கணவனுடன் இன்பவாழ்க்கை நடத்தும் ஆனந்தத்தில் மறந்தாள். தன்னை வளர்த்த பெரிய தாயாரையே தனக்குத் துணையாக சிலகாலம் வைத்திருந்தாள். வயதாகிய கிழவியாதலால் அவள் கண்ணை மூடிவிட்டபிறகே கமலாவுக்குக் குழந்தை பிறந்தது. கமலாவுக்கு உதவி புரியும் சமயம் வரும்போதெல்லாம் காமுதான் வந்து உதவி செய்வாள்.

இத்தகைய நிலைமையில், அதிமனோகரமான வாழ்க்கைச் சக்கரம் சுழன்றுகொண்டிருந்த சமயந்தான் நம் கதை ஆரம்பமாகியது. கடைக்குச் சென்றிருந்த சோமு புடவை வாங்கிக்கொண்டு சந்தோஷமே வடிவமாக வந்தான். சாமாவும் அதேமாதிரிப் புடவை வாங்கி வந்தான்.

கமலாவுக்குத் தன் கணவன் எங்கு, எதற்குச் சென்றிருக்கிறான் என்பது தெரியாதாகையால் வந்தவளுடன் பேசிக்கொண்டே தன் வேலையையும் கவனித்து வந்தாள்.

சோமு நகைத்துக்கொண்டேவந்து "கமலா! இதோபார். உனக்கென்னமோ வஸ்து வந்திருக்கிறது......"ஜெயலக்ஷ்மீ! கண்ணுட்டி! இதோபாரு பொம்மை" என்று கூறியவாறு பொம்மையைக் குழந்தையின் கையில் கொடுத்து அதை வாரியணைத்து முத்த மிட்டான்.

கமலா ஆச்சரியத்துடன் பொட்டளத்தைப் பிரித்துப்பார்த்தாள். அவள் இதயம் பூரித்த பூரிப்பை அவளுடைய முகமும் கண்களும் தெட்டெனெ எடுத்துக் காட்டின. அதே சமயம் சாமாவும் தான் வாங்கிவந்ததைத் தன் மனைவியிடம் கொடுத்தான்.

அவளும் அவனுடன் பிரித்துப்பார்த்துவிட்டு உதட்டை ஒரு முழநீளம் பிதுக்கியவாறு முகத்தைச் சுளித்துக்கொண்டு கழுத்து ஒடிந்து விடும்போல் ஒரு திருப்பு திருப்பினாள். இந்த சேவையை தூரவிருந்து பார்த்த சோமுவின் வியப்பு கரைகடந்தது. "ஐயோ பாவம்!" என்று தன சினேகிதனுக்காக அனுதாபப்பட்டான்.

சாமாவின் மனைவி ஜாடையாக அவனை தனியிடத்திற்கு அழைத்து "இதென்ன சேலையா! படுக்கை விரிப்பா! என்னைக் கூப்பிடாமல் போய் டங்களை யார் வாங்கச்சொல்லியது! பெண்களு

டைய விருப்பமும் நாகரீகமும் ஆண்பிள்ளைகளுக்கு என்னதெரியும்? இந்த புலிவேஷம் எனக்குவேண்டாம். இப்போதே கொண்டு கொடுத்துவிட்டு எனக்கு ப்ரியமானதாக வாங்கிவரலாம் வாருங்கள். இந்தமாதிரி பூனைபோல் காரியம் செய்யவேண்டாமென்று எத்தனை தரம் சொல்வது?" என்று அந்த புண்ணியவதி அசல் வீடு என்பதையும் மறந்து தனது பரிபூர்ண த்வனியுடன் கூறினாள்.

ஐயோ பாவம்! சாமாவின் நிலைமை எப்படியிருக்கும்? பல்லைக் கடிக்கிறான்; விழித்துப் பார்க்கிறான். அவமானம் தாங்கமுடியாது குன்றுகிறான். "சீச்சீ பிசாசே! இதுதான் இப்போது புதிதாகவந்த லேடஸ்ட் பேஷன் என்று கடைக்காரன் அடித்துக்கொள்கிறான். நாங்கள் வாங்குவதற்குள் இதே சேலை ஒரு டஜனுக்குமேல் செல வாகிவிட்டது. உனக்குமட்டும் பேஷன் வேறுவிதமாக வந்து விட்டதா! இந்தப் புடவைக்கு என்னகேடு? எத்தனை அழகாயிருக் கிறது. வெள்ளை உடலும், நல்பச்சை இரட்டை மெல்லியகோடு களால் கட்டங்களும், கருப்புகரையும் அதில் மூன்றுகீத்து சரிகைக் கோடும், ஒரு சரிகைக் சலங்கைக் கோர்வையும், அரக்குத்தலப்பும் அதில் புனு சரிகையும், எப்படித்தான் பளபளவென்று மின்னு கிறது. இந்தமாதிரி உனக்குப் பிடிக்கவில்லை யென்றால் நீ மனுஷியா! அதோ கமலாவைப்பாரு, எத்தனை ஆசையுடன் வாங்கிக்கொண்டு சந்தோஷப்படுகிறாள்?...

என்று முடிப்பதற்குள் அந்த ராக்ஷஸி பின்னும் கோபமும் அழுகையும் கலந்த தொனியில்"எப்ப பார்த்தாலும் என்னை இப்படித் தான் மட்டந்தட்டிப் பேசுகுறது. ஊர் பெண்கள்தான் உங்களுக்கு உயர்வாகத் தோன்றும். கமலாவைப்போல் பெண்ணை ஏன் தேடி மணந்திருக்கக்கூடாது? என் தலையெழுத்து, என்பாவம், எனக்குப் புடவையும்வேண்டாம்; ரவிக்கையும்வேண்டாம். வீட்டுக்குப் போக லாம் வாருங்கள்' என்று மூக்கைச் சிந்தினாள்.

இதைக் கேட்டுக்கொண்டு அடுத்த அறையிலிருக்கும் சோம நாதனும் கமலாவும் ப்ரமித்து நடுங்கிவிட்டார்கள். கமலா மகா புத்தி சாலியும் சமயோசிதமாகப் பேசும் சாமர்த்தியமும் பொருந்திய வனிதையாகையால் அவள் சற்று உரத்த குரலில் "புடவை வெகு அழகாயிருக்கிறது. இத்தனை அழகான புடவையை நான்மட்டும் உடுத்திக்கொண்டால்போதுமா! காமுவுக்கும் ஒன்று வாங்கவேண் டாமா! நான் இதை அப்படியே வைத்துவிடுகிறேன். அடுத்த மாதம் நம் ஜெயலக்ஷ்மிக்கு பிறந்தநாள் வருகிறதே, அதற்கு இதை நம் காமுவுக்குக் கொடுத்துவிடலாம். என்ன! இதேபோல் இன் னொன்று அகப்பட்டால் நான் உடுத்திக்கொள்கிறேன். இல்லா விட்டால் வேறுமாதிரியில் வாங்கலாம்" என்று அன்பும் சாந்தமும் கலந்த த்வனியில் கூறினாள்.

இதைக் கேட்ட சோமநாதன் "கமலா! என் தங்கை மீது உனக்கு இருக்கும் அன்புகூட எனக்கில்லை. அவள் வந்தபிறகு வாங்கலாம் என்று வந்துவிட்டேன். இதேமாதிரி சேலை இன்னும் இரண்டு மூன்று இருந்தது, அதில் ஒன்று வாங்கி வருகிறேன், இதை நீயே உடுத்திக்கொள்ளு" என்றான்.

இதைக் கேட்ட சாமாவின் மனைவி, "கமலா! இந்த சேலை எனக்குவேண்டாம். நீ எடுத்துக்கொண்டு, பணத்தைக் கொடுத்துவிடு. நான் வேறு புடவை வாங்கிக்கொள்கிறேன். நீ எப்படியோ இதைக் கட்டிக்கொள்ளச் சம்மதித்ததுமன்றி நாத்தனாருக்கும் சிபார்சு செய்கிறாயே! அவளுக்குப் பிடிக்காவிட்டால் என்னசெய்வாய்? பெண்களை கூட அழைத்துச்சென்று இஷ்டமான புடவை வாங்கினால் என்ன! தலையா வெடித்துவிடும்!"

என்று பேசவாரம்பித்தது கமலாவுக்குச் சற்றும் பிடிக்கவேயில்லை. இடை மறுத்து, "சுந்தரி! ஒவ்வொருவருடைய அபிப்ராயமும் விருப்பமும், பழக்க வழக்கங்களும் ஒவ்வொரு விதமாக விருக்கலாம். உலகம் பலவிதம், சிலர் தனக்காகவே அலங்காரம் செய்து கொள்வார்கள். சிலர் பிறர் பார்த்து சந்தோஷிக்கவும், பேஷ் பேஷ் என்று தலையாட்டவும் புகழுக்காக அலங்காரம் செய்துகொள்வார்கள். சிலர் தன் கணவனுடைய சந்தோஷத்திற்காகவும் அவன் விருப்பத்திற்கு மாறாமலும் அலங்காரம் செய்துகொள்வார்கள்.

இதில் கடைசியில் கூறியபடியே நான் நடந்துவருவதால் எனக்கு நானே எடுத்துக்கொள்வதில் ஒருவிதமான உயர்வு மிருப்பதாகத் தோன்றவில்லை. ஆதலால் அவர் எதை வாங்கி வந்தாலும் அதுவே எனக்கும் பரமப்ரீதியாயிருக்கிறது. அதனால் நான் இதை மிகவும் விரும்புகிறேன். என் நாத்தனார் புருஷனும் இதை விரும்பியே மனைவியைக் கட்டிக்கொள்ளச் செய்வாராதலால் வாங்கிவைக்கிறேன்; கொடுத்துவிடுங்கள்" என்றாள்.

சுந்:—இதென்ன புதுமை வார்த்தையோம்மா! எனக்குப் புரியவில்லை. நீதான் கணவன் விருப்பப்படி நடக்கும் உத்தமி, மற்றவர்கள் அப்படியில்லையோ! போதும்; போதும். இங்குவந்ததற்கு எனக்குப் பட்டமும் பதவியும். நான்போகிறேன்—என்று முடுக்காகக் கிளம்பி திரும்பிகூடப் பார்க்காமல் போய்விட்டாள்.

கமலா எத்தனைக் கூப்பிட்டும் ப்ரயோஜனமற்றதால் அவள் வியப்பும் திகைப்பும் தோன்ற உள்ளேவந்தாள். சாமாவின் ஆத்திரம் கரை புரண்டது, "சோமநாத்! என் இல்லறவாழ்க்கையின் இன்பத்தைப் பார்த்தாயா! என்விதி இது. என்னைக் கண்டு பரிகாஸம் செய்யாதே. விடிந்தால் அஸ்தமித்தால் இதே உபத்திரவந்தான். கடவுள் ஒரு குழந்தையாவது கொடுத்திருந்தால் அதன் முகத்தின் சந்தோஷத்தில் இதை மறக்கலாம். அதுவும் சூனியம். எல்லாம்

நான்செய்த கர்மம் நான் வருகிறேன்" என்று கூறியவாறு வெறுப்புடன் சென்றான். சோமுவும் கமலாவும் அவனுடையநிலைமையைக் கண்டு உண்மையில் மனமுருகினார்கள். "இப்படியும் ஒரு ராக்ஷஸி இருப்பாளா?" என்று எண்ணிக் கமலாவின் மனம் வியந்தது.

## 3

## உல்லாஸ உத்ஸவமும், உள்ளத் துடிப்பும்

வஸந்த உத்ஸவத்தின் வைபவத்தைச் சொல்லிமுடியாது. ஸ்வாமியும் அம்மனும் சேர்ந்து வெகு ஆனந்தமாய் ஜகஜ்ஜோதியான அலங்காரத்துடன் தீவட்டி மத்தாப்பின் ப்ரகாசந்திகழ, வஸந்த உத்ஸவ பங்களாவில் ஸ்வாமி புறப்பாடு வெகு அழகாக நடக்கிறது. பக்த கோஷ்டிகள் பலர் மெய்மறந்து ஸேவிக்கும் ஆனந்தப்பரவசத்தைப் பார்க்கும்போதே பக்தியற்றவர்களின் மனத்தில் கூட பக்தி உண்டாகும்.

உயர்தர நாகஸ்வரக்காரர் வெகு மனோகரமாக ஷண்முகப்ரியா ராகத்தை வாசிக்கும் ஆனந்தமும் ஸ்வாமி தரிசனத்தின் திவ்ய தேஜஸ்ஸும் ஒன்றுகூடி கமலாவை மயங்கவே செய்துவிட்டன. சோமநாதன் குழந்தையை வைத்துக்கொண்டு மேளக் கச்சேரி கேட்டுக்கொண்டிருந்தான்.

அங்கு மின்ஸார விளக்குகளால் செய்துள்ள அலங்காரமும் மத்தியில் ஜலத்தை ஆனந்தமாக வாரி இறைக்கும் அற்புதமும், மற்றொருபுறம் பெரிய பொம்மைகளை விதவிதமாக அலங்காரம் செய்து வைத்திருப்பதும் காண்போர் மனத்தைக் காந்தம்போல் இழுத்தது. சோமநாதன் ஸ்வாமி பிரஸாதத்தை விலைக்கு வாங்கி வந்து, ஒருபுறமாக மரத்தடியில் உட்கார்ந்து மனைவிக்கும் கொடுத்துத் தானும் ஆனந்தமாகச் சாப்பிட்டுக்கொண்டிருக்கையில் பெரிய வியாதியால் தேகம் முற்றும் நாசமடைந்த ஒரு பிச்சைக்காரி,

அரும்பொனே! மணியே! என் அன்பே!
என் அன்பான அறிவே! என் அறிவில் ஊறும்
ஆனந்தவெள்ளமே! என்றென்று பாடினேன்
ஆடினேன், ஆடி நாடி
விரும்பியே கூவினேன், உலறினேன், அலறினேன்
மெய்சிலிர்த் திருகை கூப்பி
விண்மாரியென என் இரு கண்மாரி பெய்யவே
வேசற்று அயர்ந்தேனியான்

இரும்புநேர் நெஞ்சகக் கள்வனுனைனும் உனை
இடையிட்டு நின்ற துண்டோ?
என்று நீ அன்று நான் உன்னடிமை யல்லவோ!
யாதேனும் அறியா வெறும்
துரும்பனேன் என்னினுங் கைவிடுதல் நீதியோ!
தொண்டரொடு கூட்டு கண்டாய்!
சுத்த நிர்க்குணமான பரதெய்வமே! பரஞ்
சோதியே! சுகவாரியே! —தாயுமானவர்.

பாடியபடியே, "அம்மா! பசிக்கிறதே. ஒரு காலணு கொடேன்...ஒருவாய் சோறு கொடேன்"...என்று கேட்டாள்.

இந்த கண்ருவியைக் கண்டு சோமநாதன் மனது உருகியது. கமலாவும் அனுதாபப்பட்டாளெனினும் பார்க்கவே சகிக்காது வெறுப்பும், ஒருவிதமான பயமும் அவளைக்குலுக்கின. "ஐயையோ! என்ன கோராமை...தூரப்போடியம்மா!......தூரப்போ...கிட்ட வராதே. காலணுவை விசி எறியுங்கள்" என்று கூறிப் பின்புறம் திரும்பிக்கொண்டாள்.

அந்தப் பிச்சைக்காரி குளித்து எத்தனை யுகமாயிற்ருே! அவள் உடையைக் கசக்கி எத்தனை ஜென்மாந்திரங்கள் ஆயிற்ருே! அந்த நாற்றமும் அவள் கர்ம வியாதியின் நாற்றமும் ஒன்ருகூடி கமலாவின் குடலைக் குமட்டிவிட்டதால் தின்ற கொஞ்ச ஆகாரமும் அப்படியே வாந்தி எடுத்துவிட்டாள். எத்தனை அடக்கினுலும் அடங்காது போனதால் அதற்குமேல் அவளால் பிரஸாதத்தைச் சாப்பிட முடியவில்லை. அதையப்படியே அந்த பிச்சைக்காரியிடமே கொடுத்து அனுப்பிப் பின் அங்குள்ள குழாயில் கை சுத்தம் செய்துகொண்டு வேருெருபுறம் போய் நின்ருள்.

சோமுவுக்குக் கமலாவின் வெறுப்பைப் பார்த்ததும் சற்று வியப்பாகவே இருந்தது. 'கமலாவுக்கு இத்தனை அசங்கியமிருப்பதால் தான் வீட்டில் ஒவ்வொரு அம்சமும் வெகு சுத்தமாயும், முறமுறப்பாயும் வைத்திருக்கிருள். அசுசியான மனுஷியாயிருந்தால் வீடும் அப்படித்தானே இருக்கும். என்னுடைய உடையைத் துவைத்து மடித்துக்கொடுக்கும் அழகு ஒன்றே போதுமே. வண்ணுனைப்போல் செய்கிருள் என்று ஆபீஸிலும் கொண்டாடுகிருர்களே!' என்று தனக்குள் எண்ணி சந்தோஷமே அடைந்தான்.

அந்தப் பிச்சைக்காரிக்கு காசைக் கொடுத்துவிட்டு அவளுடைய பரிதாபத்தை உற்றுக் கவனித்தான். மனது குழம்பித் துடித்தது. "உம்"....என்று ஒரு பெருமூச்சுவிட்டபடியே கமலா இருக்கும் இடத்திற்கு வந்தான். "ஐயோ! பரிதாபம். கண்டு சகிக்கவேமுடியவில்லை. இப்படியும் ஒரு ஆத்மாவை சிருஷ்டித்து பகவான் சோதனை செய்யலாமா! இத்தனை ஜனங்கள் நாற்றுக்கணக்காக நடமாடும்போது இம்மாதிரி கொடிய துர்வியாதிக்காரி உலா

விஞல் எத்தனை கெடுதல்? இது ஒட்டுவாரொட்டிதானே! எவ்வளவு பேருக்கு இது ஒட்டிக்கொள்ளுமோ! இப்படி இவர்களை வருவதற்கு இடங்கொடுக்கலாமா! நான் என்ன பாவம் செய்தேனே! எனக்கு அந்த பரிதாபகரமான பிம்பத்தைக்கண்டு சகிப்புத்தன்மை உண்டாகாதுபோயிற்றே!" என்று கமலா வருந்தியவாறு கூறினுள்.

சோம:—நீ சொல்வது வாஸ்தவம். இத்தகைய மனிதர்களைக் கண்டு யாரும் வெறுப்பது சகஜந்தான். இருப்பினும் அவர்கள் பிழைக்கும் வழிதான் எது? பத்து ஜனங்கள் நடமாடும் இடத்தில் தானே அவர்கள் பிச்சை வாங்கிப் பிழைக்கவேண்டியிருக்கிறது. வேறு கதி எது? பஸ் ஸ்டாண்டிலும், டிராம்கார் அருகிலும் நடு வீதிகளிலும் இம்மாதிரி அபாக்ய மனிதர்கள் கணக்கிடவேமுடியாது. நம் நாட்டில் கோடிக்கணக்கான மக்கள் இருக்கிறேம் என்கிற பெருமையொருபுறம் இருக்கிறது வாஸ்தவந்தான். அந்த கோடிக்கணக்கில் எத்தனை பெயர்கள் உடுக்க உடையும், குடிக்கக் கூழும், படுக்கப்பாயும், இருக்க இடமும் இல்லாது தவிக்கிறுர்கள் தெரியுமா! அதுவுந்தவிர எத்தனை பெயர்கள் இம்மாதிரி கொடிய நோயினல் துன்புற்றலைகிறுர்கள்? எத்தனை பேர் வேலை செய்வதற்கு உதவாமல் மொண்டிமுடம், குருடுமுதலிய அங்கஹீனர்களாகவிருக்கிறுர்கள். இத்தனை கோராமைக்கு மத்தியிலுள்ள ஒரு சில பணக்காரர்களும், அதிகார வர்க்கத்தினரும், திமிர்படைத்தவர்களும் நடத்தும் கொடுமையோ துன்பமோ கூறத்திறமில்லை. தடபுடல் பேர்வழிகளாகிய மைனர்கள் தம்முடைய இந்த படாடோப வாழ்க்கைதான் சாச்வதம், உலகம் பூராவும் இப்படித்தானிருக்கும் என்று நினைக்கிறுர்கள்.

தௌர்ப்பாக்யம் நிறைந்த ஏழைகளும், அங்கஹீனர்களும், வியாதியஸ்தர்களும் நாயி, கழுதை முதலிய ஜந்துக்களுக்கு ஒப்பாக மேல்குறித்த வர்க்கத்தினரின் தலைத் திமிரால் நினைக்கப்படுகிறுர்கள். ஆழமானதும் அபாயம் நிறைந்ததுமான கடலில் நல்முத்து கிடைப்பதுபோல் இந்த ஆடம்பரமும், அக்ரமமும் நிறைந்த உலகத்திலும் தர்ம சிந்தையும் சகிப்புத்தன்மையும் உள்ள ஒரு சிலர் வாழுகிறுர்கள். உலகத்தை ஆராயப் போனுல் கஷ்டப்படுகிறவர்களின் எண்ணிக்கைதான் அதிகமாகும். என்ன கமலா! ஏதோபோல் நிற்கிறுயே! என்ன யோசனை?

கம:—ஒன்றுமில்லை. எனக்கு இத்தனை பொறுமையில்லாது அந்த நிர்ப்பாக்ய மனுஷியின்முன்பு வாந்தி எடுத்துவிட்டேனே! அவளுடைய மனது புண்ணுகி என்னைப்பற்றி என்ன நினைத்திருப்பாளோ! என்று எண்ணினேன். என்னை ஏதோ செய்கிறது. சரி. வீட்டிற்குப்போகலாம்வாருங்கள்—என்று கூறியவாறுகிளம்பினுள்.

அதே பிச்சைக்காரி மற்றெரு பக்கத்தில்,

உண்டதே உண்டும் உடுத்ததே உடுத்தும் அடுத்தடுத்துரைத்
[ததே உரைத்தும்,
கண்டதே கண்டும் கேட்டதே கேட்டும் கழிந்தன கடவ
[நாள் எல்லாம்
விண்டதாமரைமேல் அன்னம் வீற்றிருக்கும் விழவுறு வீதி
[வெண்காடா
அண்டரே போற்ற அம்பலத்தாடும் ஐயனே உய்யுமாறருளே.

—பட்டினத்துப்பிள்ளையார்.

பாடி முன்போல் யாசகம் கேட்டுக்கொண்டிருந்தாள். அவளுக்குப் பின்னால் இன்னொரு ஆத்மாவும் அவளைப்போன்ற கோரமையுடன் பிச்சை வாங்குவதையும், கூட்டத்திலுள்ளவர்கள் அவர்களைத் திட்டி வெறுத்துப்பேசி விலகுவதையும் பார்த்துக்கொண்டே நடந்தார்கள். தம்பதிகளின் கண்முன்பு அந்தப் பிச்சைக்காரியின் பிம்பமே தாண்டவமாடியது.

## 4

## கமலாவின் மகிமையும், கல்யாணப் பேச்சும்

குருசாமி, கையில் ஒரு கல்யாண கடிதத்துடன் மனைவியைப் பார்த்து, "இந்தாடீ! கடிதம் வந்திருக்கிறது. நம்ம சோமுவின் குழந்தைக்கு அடுத்த வெள்ளிக்கிழமை பிறந்த நாளாம். இதற்கு கட்டாயம் வரவேண்டுமென்றும், நம்மைப் பார்த்து எத்தனையோ வருஷங்களாகிவிட்டதால், பார்க்கவேண்டுமென்று அதிக ஆவலாயிருக்கிறதால் வரமுடியாதென்று சாக்கு சொல்லக்கூடாதென்றும், ப்ரத்யேகமாக எழுதியிருக்கிறான். என்னசெய்வது?" என்றான்.

பாலம்:—என்ன செய்வதாவது? கமலா வெகு நல்ல பெண்ணு. அவளைக் கல்யாணம் செய்த கடனேயொழிய அவளுடன் நாம் ஒரு மாதங்கூட சேர்ந்திருக்கவே இல்லை. நேற்றுகூட காமு கடிதத்தில் கமலாவைப்பற்றிப் புகழ்ந்து எழுதியிருக்கிறாள். அவளையும் பார்க்க வேண்டும்போலிருக்கிறது. ஆதலால் நாம் கட்டாயம் போகத்தான் வேண்டும். இன்றே லீவுக்கு எழுதிப்போட்டுவிடுங்கள். எனக்கும் அந்தப் பக்கம் போக ஆசையாயிருக்கிறது.

குரு:—வாஸ்தவந்தான். நாம் இப்போது இத்தனை பேரும் போய் வருவதென்றால் நூறு ரூபாய் செலவு ஆகுமே, அதை யோசிக்கவேண்டாமா! அந்தமாதிரி செலவு செய்துகொண்டு போனாலும் லீவு 10 நாட்கள் கிடைப்பதே அரிது; போகவரவே சரியாகிவிடும். அப்படி போய்வருவதில் லாபமென்ன! அதைவிட ஒரு நகை செய்து குழந்தைக்கு அனுப்பினால் நம் அடையாளமாயிருக்கும்.

பாலம்:—ஆமாம்! இதில்தான் சிக்கனம் வந்துவிடும். நீங்கள் வேண்டுமானல் லீவு முடிந்ததும் வந்துவிடுங்கள். நாங்கள் ஒரு மாதம் இருந்து வருகிறோம். குழந்தையைப் பார்க்கவேண்டாமா! காமுவையும் பார்த்து எத்தனை வருஷமாகிவிட்டது. ஆகையால் போகத்தான் வேண்டும். நீங்கள் லீவுக்கு ஏற்பாடு செய்யுங்கள்.

குரு:—என்னமோ பார்க்கிறேன். முடிந்தாலும் முடியாவிட்டாலும் குழந்தைக்கு மூன்று சவரனில் ஒரு சங்கிலி செய்து போட வேண்டுமென்று தோன்றுகிறது. என்ன சொல்லுகிறாய்?

பால:—சொல்வதற்கு என்ன இருக்கிறது? கட்டாயம் செய்ய வேண்டியதுதான்...மூத்த மருமகள் முகமே காட்டாது குடும்பத்தோடு வடக்கே போய்விட்டாள் நாம்தான் இங்கு வந்துவிட்டோம். கடைசியில் வந்த கமலாதான் எல்லாவற்றையும் முன்நின்று கண்ணியமாகச் செய்கிறாள். பெண் என்றாலும் பெண்ணு கமலா! என்ன பெருமை! என்ன அன்பு! அவளைப்பற்றி காமு எழுதுவதைப் படிக்கும்போதே அவளுடன்கூட இருக்கவேண்டுமென்கிற ஆசை தூண்டுகிறது. இந்த சந்தர்ப்பத்தைக்கூடவா விட்டுவிடுவது?

குரு:—விடவேண்டுமென்று யாரடீ சொன்னது? லீவுகிடைக்க வேண்டும். செலவுக்குப் பணம் வேண்டும். நான்கூடத்தான் சோமுவைப் பார்க்கவேண்டுமென்றுஆசையாயிருக்கிறேன். என்ன செய்வது? நான்தான் அடிமையிலும் அடிமையாயிற்றே! ஒன்று செய்யலாமா? சோமுவையே இங்குவந்து இருந்து, பிறந்தநாளைச் செய்துகொண்டு போகும்படிக்கு எழுதலாமா!

பால:—எழுதலாம்; ஆனல் அவர்கள்வீட்டில் நம்மை வரவேற்று உபசரித்துக் கல்யாணத்தைச் செய்யவேண்டுமென்று இருக்கும்போது இங்கு வரச்சொல்வது உசிதமில்லை. நாம் வராததற்குச் சாக்கு சொல்லியதுபோலாகும். அதோடு கமலா எழுதியிருப்பதைப் பாருங்கள். அங்கு ஒருபையன் இருக்கிறானம், நிரம்ப கெட்டிக்காரனம். பி. ஏ. படிக்கிறானம். நல்ல அழகாயிருக்கிறானம். உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவனம். வ்யாதி வக்கையில்லாத ஆரோக்யமான குடும்பமாம். நாலுபிள்ளை, நாலு பெண்ணும். இவன்தான் கடைசி பயலாம். கையில் ஆயிரம் ரூபாய் கொடுத்து ஆயிரம் ரூபாயிக்கு சீர் செய்தால் போதுமாம். அந்த இடம் அவர்களுக்கு மிகவும் பிடித்திருப்பதால் நம் செல்லத்துக்கு நிச்சயம் செய்து கல்யாணத்தையும் முடித்துக்கொண்டுபோகலாம் என்று எழுதியிருக்கிறாள். செல்லத்திற்கு வயதாகிறது. நாம் இந்த மூலையில் உட்கார்ந்திருந்தால் மாப்பிள்ளை எங்கு கிடைப்பான்!

குரு:—ஓகோ! நீ ஒரு கல்லால் இரண்டு பக்ஷிகளை அடிக்க யோசனை செய்துவிட்டாயா! கமலா என்னவிருந்தாலும் உன்னைவிட புத்திசாலிதான். வெறும் பிறந்த நாள் என்றால் நீ எங்கே வரமாட்டேனென்பாயோ! என்கிற முன்யோசனையினல் கல்யாணத்தையும்

நிச்சயம் செய்யலாம் என்று வரனையும் தேடி எழுதியிருக்கிறுள். கல்யாணம் செய்வதானல் பணத்திற்கு என்ன செய்வது?

பா:—பேஷ்! இது நல்ல கேள்விதான். பணத்திற்கு என்ன செய்வதென்று இத்தனை நாளாக நினைத்துக்கொண்டிருக்கிறீர்கள்? பெண் குழந்தை பிறந்தவுடனே அதன் கல்யாணத்திற்குப் பணம் சேர்க்கவேண்டாமா! இப்போதில்லையென்றால் அடுத்த வருஷம் மாத்திரம் பணம் கிடைக்குமா!

குரு:—ஆபீஸில் பிராவிடென்ட் பண்டில் கடன் வாங்கித்தானக வேண்டும். இன்னும் மூன்று வருஷம் சென்றால் சீட்டு கட்டிய பணம் வரும்; அடைத்துவிடலாம். அதற்கு முதலில் ஏற்பாடு செய்ய வேண்டும். குறைந்தது ஒருமாத லீவாவது கிடைத்தால்தானே முடியும், எதற்கும் எழுதிப்போடுகிறேன். நீயும் கமலாவுக்கு கடிதம் எழுது. அந்த பிள்ளையாண்டானின் புகைப்படத்தையும் ஜாதகத்தையும் வாங்கியனுப்பச்சொல்லு. அது வந்ததும் இங்கேயே ஜாதகத்தைப் பார்த்துக்கொண்டு ஏற்பாட்டுடன் போகலாம்—என்றான்.

அப்படியே பாலம் எழுதினுள். நான்கு தினங்களில் புகைப்படமும் ஜாதகமும் வந்தது கண்டு இருவரும் பரம சந்தோஷப்பட்டார்கள். ஜாதகம் வெகு அழகாயிருந்ததோடு பையனும் பிடித்துவிட்டதால், குருசாமியும் நேரில்போய் பார்க்கலாமென்கிற ஆசையால் லீவுக்கு எழுதினன். 2 தினங்களுக்குள் லீவும் கிடைத்துவிட்டதால் தாங்கள் புறப்பட்டு வருவதாய் தம்பிக்குக்கடிதம் எழுதிவிட்டான். பாலம் ஊருக்குப் போகும் சந்தோஷத்தில் வெகு தெம்பாக, பக்ஷணங்கள் செய்துகொண்டு போகவேண்டுமென்று முனைந்தாள். பழங் காலத்து பக்ஷணங்களுக்குள்ள ருசியே ஒரு அலாதி. எத்தனை புதிய தினுசு பக்ஷணங்கள் கண்டுபிடித்தாலும் அவையும் ருசியாகவும், மணமாகவும் இருக்கின்றன; இதனல் பழய பக்ஷணங்களுக்கு மதிப்பு ஒருபோதும் குறையாது என்கிற திட நம்பிக்கையுடன் ஒரு கூடை முறுக்கு, சீடை, திரட்டுப்பால், பொறி விளாங்காய் உருண்டை, அதிரசம், பொறியரிசி முதலிய பக்ஷணங்களை மும்முரமாக உழைத்துத் தயார் செய்துகொண்டு ஊருக்குப் பிரயாணமானுள். எல்லோருடைய இதயமும்சந்தோஷத்தினுல்பூரித்தது.

## 5

## குடும்ப ஒற்றுமையும் கோடாலிச் சாமியாரும்

தன் தமையன் வரப்போகிற விஷயத்தைக் கடிதத்தினலறிந்த சோமநாதனும், கமலாவும் உள்ளம் பூரித்து அவர்கள் வரும் தேதியை அதிக ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவர்களை எதிர்கொண்டழைப்பதற்காக ரயிலடிக்கு தம்பதி சகிதம்சென்று வரவேற்றுர்கள். கமலா ஒரு சிறிய குழந்தையைப்போல்

துள்ளி மகிழ்ந்தாள். அன்று வீட்டில் பெரிய விருந்து, தானே தயார் செய்து தடபுடலாக நடத்தினாள். ஓர்ப்படியுடன் பேசிப் பேசி மாளவில்லை. கமலாவின் கபடமற்ற சுபாவத்தைக் கண்டு பாலம் வெகுவாய் மகிழ்ந்தாள்.

காமுவும் கூட இருக்கவேண்டுமென்கிற ஆசையால் சோம நாதனே காமுவைப் போய் அழைத்து வந்தான். "பழய காலத்தில் நம்முடையமுன்னோர்கள் இருக்கும்போது இருந்த ஒரு ஆனந்தமும், ஒற்றுமையும் இன்று இந்த குடும்பத்தில் தாண்டவமாடுகிறது" என்று குருசாமியே நினைத்துப் பூரித்தான்.

பெரிய சகோதரனுக்கு எழுதிய கடிதத்திற்கு சில நாட்கள் சென்று பதில் வந்தது. "குழந்தை தீர்க்காயுஸாயிருக்கணும். எனக்கு வரமுடியவில்லை. இந்த ரூபாயில் குழந்தைக்கு ஒரு பாவாடை தைக்கவும்" என்று எழுதியிருந்தது கண்டு எல்லோரும் சிரித்தார்கள்.

ஆண்டுநிறைவை வெகு நன்றாகவும், அவனுடைய சக்திக்கு அதிகமாகவுமே சோமு செய்து மகிழ்ந்தான். கல்யாணமும் முடிந்தது. ஒருமாத காலம் எல்லோரும் பரம சந்தோஷத்துடன் இருந்த பின்னர் அவரவர் ஊருக்குப் பிரிந்தார்கள். கமலா, நாத்தனாருக்கும், ஓர்ப்படிக்கும் குழந்தைகளுக்கும் புடவை, பாவாடை முதலியன வாங்கிக் கொடுத்து மரியாதை செய்து அனுப்பினாள்.

அவர்களெல்லோரும் ஊருக்குப்போனதில் கமலாவுக்கு மிகவும் வருத்தமாகிவிட்டது. குழந்தையைப்போல் தேம்பித் தேம்பி யழுதாள். தன்னையும் வரும்படிக் கூப்பிட்டார்களே போகாமல் போனேமே என்றுகூட எண்ணினாள். கணவனும் மனைவியும் எத்தனை அன்யோன்யபாவத்துடன் சிக்கனமாயும் சிறப்பாயும் குடித்தனம் செய்கிறார்களென்று அவளுடைய ஓர்ப்படி புகழாத நாள் இல்லை.

பின்னும் ஒரு வருஷம் ஓடி மறைந்தது. கமலாவுக்கு ஏழு மாதங்கள் ஆய்விட்டதால் ஒத்தாசைக்கு முதல் தடவைப்போல் காமுவை அழைத்து வரவேண்டுமென்று எண்ணினாள். இந்த முறை கமலாவுக்கு பலஹீனமும் ச்ரமமும் அதிகமாயிருப்பதையும், நடக்கக் கூட முடியாது தவிப்பதையுங் கண்ட சோமு மிகவும் பயந்துவிட்டான். "என்னவிருந்தாலும் இங்கு காமு மட்டும் தனியாயிருப்பது போதுமா! பெரியவர்களின் துணைவேண்டாமா! கமலாவின் நிலைமையைப் பார்த்தால் பயமாயிருக்கிறதே! ஒரு வேளை கமலா என்னை ஏமாற்றி...என்று அவனையறியாது விபரீத யோசனைகள் எக்காரணம்பற்றியோ தோன்றி திடும்திடும் என்று வதைத்தன. அதை வெளியில் சொல்லவும் அஞ்சினான். "எப்படியாவது கமலா பிழைத்துக்கொண்டால் போதும்" என்கிற ஏக்கத்துடன் தினம் இருவேளைகளும் கோயிலுக்குச் சென்று சுவாமியைவேண்டி பிரதக்ஷணம் செய்து வந்தான். அவனது முகக்குறிப்பை அறிந்த கமலா விசனத்

துடன்"என் உங்கள் முகம்வாடியிருக்கிறது? உடம்பு சரியில்லையா?" என்று கேட்டாள்.

சோமு:—ஒன்றும் இல்லை கமலா! உன்னைப் பார்த்தால்தான் எனக்கு பயமாயிருக்கிறது. சென்ற முறை நீ கர்ப்பவதியாயிருந்த போது இருந்த ஒரு உணர்ச்சியும் சந்தோஷமும் இம்முறை இல்லையே! அதற்குப் பதில் மனத்தில் ஒருவிதமான திகிலும், பீதியும் அவநம்பிக்கையும்தானிருக்கிறது. இதற்குக் காரணம் எனக்கேபுரியவில்லை. மனத்தை எத்தனை தேற்றினாலும் அது என் வசமாகவில்லை. பகவான் உனக்கும் குழந்தைக்கும் ஒரு குறைவும் வைக்காதிருக்க,

கம:—(இடைமறுத்த) அடேயப்பா! இதற்காகவா இத்தனை கவலை. நம்முடைய கனிந்த ப்ரேமையைக் கடவுள் சிதைத்து பங்கப் படுத்தவே மாட்டார். என் இந்த வீண் கவலை? ஏதோ பலஹீனத்தினால் உலகத்தில் எல்லோருக்கும் இச்சமயம் இப்படியிருப்பது சகஜந்தானே. இதற்காகவா இப்படி உருகுவது?

சோ:—கமலா! நீ ஏதோ சாமான்யமாய்ச் சொல்லிவிடுகிறாய். என் மனது என்னவோ கட்டுக்கடங்கவில்லை. சாமாவின் மனைவி சென்றவாரம் பிரஸவித்து இறந்துவிட்டாளாம். அதைக்கேட்டது முதல் என் குடல் நடுங்குகிறது. உன்னை இந்த முறை அண்ணு வீட்டிற்கு அனுப்பி மாதாமாதம் பணமனுப்பி வரலாமா என்று யோசிக்கிறேன். மன்னியும் அண்ணுவும் உன்னிடமுள்ள பிரியத்திற்கு உன்னை வெகு நன்றாகக் கவனித்துக்கொள்வார்கள். அந்த சமயம் லீவு கிடைத்தால் வந்துவிடுகிறேன். என்ன சொல்லுகிறாய்?

கம:—செய்யலாம், அவர்களுக்கு நாம் சிரமம் கொடுப்பது சரியா! அவர்களும் பெரிய சம்சாரி. காமு வந்தால்போதும். வீண் பயம்வேண்டாம். நாம் என்ன பட்டிக்காட்டிலிருக்கிறோமா? ஆஸ்பத்திரிகளும் டாக்டர்களும் இருக்கும்போது பயமேவேண்டாம். இப்போதுமுதல் 5, 6 மாதங்களுக்கு உங்களைப் பிரிந்திருக்க என்னால் முடியவேமுடியாது. கடவுள் விட்ட வழியாகட்டும். ஜயலக்ஷ்மி உங்களைப் பிரிந்தால் ஒரு விநாடிகூட இருக்கமாட்டாள். கிட்டமாதட்டமா! குழந்தையைக் கொண்டுவிடத்தான்முடியுமா! அது 'அப்பா! அப்பா!' என்று ஏங்கினால் குழந்தை அநியாயமாய்ப் போய்விடும். காமுவின் புருஷனுக்குக் கடிதம் போட்டு அவளை அழைத்துவாருங்கள்" என்றாள்.

அச்சமயம் தபால்காரன் ஒரு கவரைக்கொண்டு கொடுத்தான். அதன் கையெழுத்தைப் பார்க்கும்போதே காமுவின் எழுத்தென்று தெரிந்ததும் ஆவலுடன் பிரித்து சோமுவே உரக்கப் படித்தான்.

"அன்புமிக்க அண்ணுவுக்கும், மன்னிக்கும் அனேக நமஸ்காரம்.

என்னிடமிருந்து உபய க்ஷேமங்கள், இம்மாதிரி ஒரு கடிதம் வரும் என்று நீ கனவில்கூட நினைத்திருக்கமாட்டாய். என்னுடைய வாழ்நாளிலும் இப்படி ஒரு சம்பவம் நேரும்

என்று நானும் கனவில்கூட நினைத்ததில்லே. எல்லாம் வேளையின் கூத்து. என் தலைவிதியின் கொடுமை. எங்கள் வீட்டிற்கு சில காலமாக ஒரு சாமியார் வந்து சத் விஷயங்கள் உபன்யாஸம் செய்துவந்தார். வீட்டில் மற்றெல்லோரையும்விட என் கணவரின் மனத்தை அச் சாமியார் கொள்ளைகொண்டுவிட்டார். சாமியார் நல்ல மகானுய் விவேகியாய் இருக்கலாம். என் வரையில் அவன் எனக்கு எமனுகவே அமைந்தான் என்பதை வயிற்றெரிச்சலுடன் சொல்கிறேன்.

என் புருஷர் சிலகாலமாகவே என்னுடன் பழயபடி இல்லாமல் ஏதோ வேதாந்தியாய், வைராக்யமாய் இருந்துவந்தார். அவருடைய வாழ்க்கையே தனிப்பட்டதாக ஆய்விட்டதற்கு முதல் அடையாளம் அவர் என்னுடன் பேசாததும் சாப்பிடும் நேரம்தவிர மற்ற நேரங்களில் வீட்டிற்கே வராததும் நன்கு காட்டிவிட்டது.

அதோடும் நிற்காமல் அவர் ஆபீஸில் வேலையையும் விட்டுவிட்டாராம். அந்த ரகஸியமும் சமீபத்தில்தான் எனக்குத் தெரிந்தது. இந்த விபரீதங்களை அறிந்த என் மாமனர் அந்தச் சாமியாரை வீட்டிற்கு வரவேண்டாமென்று தடுத்துவிட்டார். சாமியார் நின்றநாள்முதல் என்புருஷனும்வீட்டிற்கேவரவில்லே. அவர் இருக்கும் இடங்கூட சில தினங்கள் தெரியாமலிருந்தது. பிறகு எங்கேயோ கிராமத்தில் சாமியாருடன் சாமியாராக இவரும் உட்கார்ந்திருக்கிருராம். காஷாயம் ஒன்றுதான் கட்டவில்லையாம். அந்த சாமியார் ஏதோ ரஸவாதமாம், மண்ணுங் கட்டியாம். அந்த எழவு எடுத்த வாதத்தில் தங்கம், வெள்ளி முதலியன செய்யும் சக்தியுள்ளவராம். அதை இவரும் கற்றுக் கொண்டு ஏராளமான தங்கம் வெள்ளி எடுக்கப்போகிருராம். சாமியாராகவே ஆய்விடப்போகிருராம். மக்கள் மனைவியைப் பற்றி அவருக்குக் கவலேயில்லையாம். தான் பற்றுவிட்டப் பரதேசியாம். ஏதேதோ பிதற்றுகிருராம்.

என் மாமனர் இதே கவலையால் படுக்கையுடன் படுக்கையாகப் படுத்துவிட்டார். என் மைத்துனரும் ஓர்ப்படியும் அவரைப்பற்றி கவலேயேயின்றி நம் மூத்த அண்ணனைப்போல் இருக்கிருர்கள். தம்பியின் துறவறத்தால் தங்களுக்கு அதிக லாபந்தான் என்று எண்ணுகிருர்கள்போல் தோன்றுகிறது. எனக்கு ஒன்றுமே தோன்றவில்லே. நான் எப்படித்தான் நடமாடுகிறேனென்றும் எனக்கே தெரியவில்லே. சில காலத்திற்கு முன்பு எத்தனை சந்தோஷமாயிருந்தேனே அத்தனைக்கத்தனை என் சாவை எதிர்பார்க்கிறேன். கணவனைப் பிரிந்துகூட வாழலாமா?

அண்ணு! என்னுல் உனக்கு என்றென்றும் துன்பமேயன்றி வேறில்லே. சாமியாரின் போஷணைக்காகவென்று கூறிக்

கொண்டே என்னுடைய நகைகளையும், குழந்தையின் நகைகளையுங்கூட அவர் எடுத்துப் பாழ்செய்துவிட்டார். எதுபோனாலும் போகட்டும். அவராவது சரியாயிருந்தால்போதுமென்று எண்ணினேன். அதுவும் போயிற்று. எப்படியாவது நீ ஒரு வாரம் லீவு எடுத்துக்கொண்டு வந்தால் நாம் இருவரும் அவரிருப்பிடம் சென்று அவரை கெஞ்சிக் கூத்தாடி வீட்டிற்கு அழைத்துவர முயற்சிக்கலாம். எனக்காக உடனே புறப்பட்டு வா! மன்னியும் குழந்தையும் க்ஷேமமா! கர்ப்பவதியாயிருப்பது கேட்க மிக்க சந்தோஷம். ஜாக்ரதையாகப் பார்த்துக்கொள்ளு.

உன் ப்ரியமுள்ள.

காமு"

என்கிற கடிதத்தைப் படித்ததும் சோமநாதனின் உள்ளம் எப்படித்தான் துடித்திருக்கும்? காமு அவனுடைய பரிபூர்ண அன்புக்குப் பாத்திரமானவளாகையால் அவளுடைய கஷ்டம் அவனுடைய துன்பமாகவே தோன்றியது. கமலாவும் அப்படியே இடிந்துபோய் "என்ன அனியாயம்! மாப்பிள்ளையின் புத்தியா இப்படி கெட்டுப்போய் விட்டது? அட க்ரகசாரமே....நீங்கள் இன்றே லீவுக்கு ஏற்பாடு செய்துகொண்டு புறப்படுங்கள். பாவம்! அக்காவின் மனது எப்படி துடிக்கிறதோ?" என்று சிபார்சு செய்தாள்.

ஏற்கெனவேயுள்ள வேதனையுடன் இதுவும் புதிதாகச் சேர்ந்ததால் சோமநாதனின் இதயம் குழம்பித் தவித்தது. பல்வேறு யோசனைகளும் எண்ணங்களும் பயங்கரமும் அவன் மனத்தைச் சூழ்ந்துகொண்டன. அவன் அப்படியே குழம்பிப்போய் பித்துப் பிடித்தவன்போலானான். மூளை குழம்பியது. பெருமூச்சு தூர்த்தியது.

## 6

### இணையிலா அன்பும் - அணையும் விளக்கும்

"சாமியாராம் சாமியார்! உலகத்தில் சாமியார்கள், யோகிகள், சன்னியாசிகள். என்று சொல்லிக்கொள்பவர்களில் பெரும்பாலோர் முழுப்புரட்டுமனிதர்கள். மோசக்காரர்கள். அயோக்யர்கள். இத்தகைய பாவிகளை நம்பிப் பேதை மனிதர்கள் பாழாகிச் சாகிறார்கள். அயோக்யச் சாமியார்களை அண்டமான் தீவுக்கு அனுப்பியும் தக்கபடி தண்டித்து வதைக்கவும் ஒரு சட்டமும் கிடையாதா! இதைக் கேட்பாரில்லையா?" என்று காமு தனக்குள் எண்ணிக் கதறினாள். தன் அண்ணன் வரும் காலை எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள்.

காமுவின் வீட்டில் அவளிடம் அவளுடைய மாமனார்தான் மிக்க ப்ரியமாக இருந்துவந்தார். அவரும் இப்போது படுக்கையாகி விட்டதால் அவரது மனத் துடிப்பு அதிகரித்தது. அவர் எத்தனை சொல்லியும் காமுவின் புருஷன் கேட்காததால் அவன்மீது அவருக்கு மிகுந்த கோபமும் வெறுப்பும் உண்டாயின.

மருமகளைக் கூப்பிட்டு "அம்மா! காமாக்ஷி! உன்னோடுகூட விருந்து வாழக் கொடுத்துவைக்காத பாவியாகிவிட்டான். அவன் எப்படியோ முன்னுக்கு வரப்போகிறான் என்று நான் கட்டியிருந்த மனக் கோட்டைகளெல்லாம் இடிந்துவிட்டன. அவனுடைய சகவாஸமே இனி வேண்டாம். பலவிதமான போக பாக்யங்கள் இருந்தும் அவன் ஆண்டிப்பயலாக அவதிப்படும்படி அவன் தலையெழுத்து இருக்கிறதுபோலும். என் காலமும் நெருங்கிவிட்டதாகவே நினைக்கிறேன். நீ உன் அண்ணன் சோமநாதனுக்கு விவரங்கள் முற்றும் எழுதி உடனே வரச்சொல்லி ஒரு கடிதம் எழுது. என்னுடைய ஜீவன் இருக்கும்போதே நான் என் கையிலுள்ள பணத்தை உன் மீது எழுதிவைத்துவிட்டுப் போகிறேன்" என்று கண்ணீர்விட்டவாறு கூறினார்.

இதற்குப் பிறகுதான் நாம் முன்பு தெரிவித்த கடிதம் வந்தது. கிழவரும் சோமநாதனின் வரவை வெகு ஆவலுடன் எதிர்பார்த்திருந்தார். சற்று நேரத்திற் கொருதரம் "சோமு வந்தானா காமாக்ஷி! சோமு வந்தானா!" என்று பரிதாபமாகக் கேட்டார்.

காமு:—இன்னும் இல்லை மாமா! வண்டி வரும் சமயம் ஆயிற்றே என்றுதான் நானும் வழி பார்த்துக்கொண்டிருக்கிறேன். வண்டி ஒருகால் தாமதமோ என்னவோ மாமா! தெரியவில்லையே!

கிழவர்:—அம்மா! காமாக்ஷி! உன்னுடைய கவலைதான் எனக்குப் பெரிதாக பாதிக்கின்றது. எனது ஆஸ்தி பூராவும் சுயார்ஜிதமாக நான் கையை உழைத்துச் சம்பாதித்ததால், சென்றதுபோக மிச்சமிருப்பதை விநியோகப்படுத்த என்னிஷ்டப்படி எனக்கு உரிமை உண்டு. ஆதலால் நான் உன் குழந்தைகளுக்காகவும் உனக்காகவும் என்னிடமுள்ள ரொக்க 5000 ரூபாயை உன்னிடம் கொடுக்கிறேன். எனக்கேதோ மாரடைக்கிறதுபோலிருக்கிறது. என்னினைவு இருக்கையில் உன் அண்ணன் வருவான், அவனிடம் ஒப்புவித்துவிட்டுப் போகலாம் என்று நினைத்தால் என் துரதிருஷ்டம் அதுகூட நடக்காது போல் தோன்றுகிறதே!...காமூ!...உன் மன்னிஎன்னசெய்கிறாள்?

காமு:—அவர் வீட்டிலில்லை மாமா! அவர் சித்தி வீட்டிற்குப் போயிருக்கிறார். ஏன்? கூப்பிடட்டுமா?

கிழ:—உம்...வேண்டாம்! வேண்டாம். வீட்டிலில்லையா என்றுதான் கேட்டேன். என்னுடைய சிறிய கைப்பெட்டி யிருக்கிறதே அதை இப்படி எடுத்துக்கொண்டு வா!—என்றார்.

உடனே காமு பெட்டியை எடுத்துக்கொண்டு வந்து வைத்தாள். அவள் கண்களில் நீர் தாரை தாரையாகப் பெருகுகிறது. "கிழவராவது எனக்கு ஆதரவாயிருக்கக்கூடாதா! அவருமா போக வேண்டும்?...ஏனோ இன்னும் அண்ணு வரவில்லையே!" என்று எண்ணி விசனிக்கிருள். பாவம்!...

கிழவ:—காமு! ஏனம்மா அழுகிருய்? இதோ பாரு உலகத்தில் எத்தனையோ விதமான கஷ்டங்கள் கிடக்கின்றன. அவைகளை அனுபவிக்கத் தானே மனிதர்களைப் பிறப்பிக்கின்ருன். இதோ, இந்த சாவியால் பெட்டியைத் திற. அதன் அடிப் பாகத்தில் சாதாரண பலகைபோலிருக்கிறதே அதை சற்று அழுத்தமாக உள்ளுக்குள் தள்ளு—என்ருர்.

கள்ளறையைத்திறந்ததும் அதில் 5000 ரூபாயிக்கு கத்தைகளாக வைத்திருந்த நோட்டுக்களை எடுத்து காமுவினிடம் கொடுத்து "அம்மா! இதைக் கொண்டு உன் குழந்தையைக் காப்பாற்றி நீயும் காலக்ஷேபம் செய். இந்த 5 ஆயிரத்திற்கு அப்படியே ஒரு சிறிய வீடு வாங்கிக்கொண்டு அதில் நீ ஒருபுறம் சிறிய இடம் வைத்துக் கொண்டு மற்றதை தகுந்த மனிதர்களுக்கு வாடகைக்கு விடு. மாதா மாதம் தவருது பணங்கொடுக்கக்கூடிய உத்யோகஸ்தர்களாகப் பார்த்து இடத்தைவிடு. குடிக்கூலியைவாங்கி சிக்கனமாகப் பிழைத்து வா. நான் இது கொடுத்ததே ஒருவருக்கும் தெரியவேண்டாம். உன் அண்ணன் வந்ததும் அவனிடம் கொடுத்து அனுப்பி விடு. ஜாக்ரதை. கண்ட மனிதர்களையும், குடிக்கூலிக்கு ஆசைப்பட்டுக்கொண்டு வைக்காதே. குழந்தைகளை நல்ல முறையில் நன்ருக வளர்த்து வேண்டிய அளவு கல்வி கற்றுக்கொடு. துளஸிக்கு தவருது பூஜை செய்து வா!....ஏதோ சத்தம் கேட்கிறது பாரு" என்ருர்.

காமு ஓட்டமாக ஓடிப் பார்த்தாள். ஜன்னல் புறத்திலிருந்து ஒரு உருவம் நகர்ந்து சென்ற நிழல் தெரிந்ததேயன்றி வேறு ஒன்றுமே தெரியவில்லை. சிறிது தூரம் பார்த்தாள். வீடு பூராவும் பார்த்தாள். யாரையுங்காணுததால் காமுவுக்குப் பயம் பிடித்துக்கொண்டது. ஓடி வந்து, "மாமா! யாரோ ஜன்னல் வழியாய் எட்டிப் பார்த்துவிட்டுச் சென்ற நிழல் மட்டும் தெரிந்தது. வேறு ஒன்றும் தெரியவில்லை. யாராகவிருக்கும்? பயமாயிருக்கிறதே!" என்ருள்.

கிழ:—எதுவானுலும் தைரியமாக நீந்தி எழுந்திருக்கும் சக்தியைப் பெறு; பயப்படாதே. பகவானை நம்பியிரு; அவன் கைவிடமாட்டான். பணம் ஜாக்ரதை. நீ உன் அண்ணனின் மேற்பார்வையிலேயே தனியாயிரு. இதற்குமேல் நான் என்ன சொல்லப்போகிறேன்?...ஏதோ வண்டி வரும் ஓசை கேட்கிறதே சோமுவா! பாரு".

காமு போய் பார்ப்பதற்குள் சாமியார் ஒய்யார நடையுடன் அங்கு வருவதைப் பார்த்ததும், அவளால் சகிக்கமுடியாத கோபமும் எரிச்சலும் உண்டாயின. கடுகடுத்த முகத்துடன் கிழவரிடம்

வந்து, "மாமா! அந்தப் பாவி சாமியார் வருகிறுன்" என்று சற்று உரத்த குரலிலேயே சொன்னுள்.

கிழவருக்கும் அசாத்யமான கோபம்பீறிக்கொண்டுவந்ததால், "சாமியாரா வந்திருக்கிறுன். என் குடி கெடுத்த பாதகனு வந்திருக்கிறுன்? கதவைச் சாத்தித் தாழ்ப்பாள்போடு. அவனை வெளியில் துரத்து" என்றுர். காமுவும் கதவைப் பட்டார் என்று அறைந்தாள்.

சாமியார் கடகடவென்று சிரித்தபடியே, "இந்த வீட்டுக் கதவை வேண்டுமானுல் போடலாம். ஆனுல் உங்கள் மகனுக்காக ஜெயிலின் பிரம்மாண்டமான கதவு திறந்திருக்கிறதே, அதை உங்களால் இப்படி சாமான்யமாகப் போடமுடியாது. உங்கள் மகன்மீது கடன் வாரண்டு ரெடியாய் வந்து காத்திருக்கிறது. அதைத் தெரிவித்துவிட்டு வரும்படி உங்கள் மகன் அவசரமாயும் ரகஸியமாயும் அனுப்பினுன். அதைத் தெரிவித்தாயிற்று; இதோ போகிறேன்" என்று போய்விட்டான்.

இதைக்கேட்ட காமு அலறிப்போய்..."வாரண்டா! கடன் வாரண்டா!...ஐயோ! மாமா! மாமா! என்ன செய்வது? ஐயோ! வாரண்டென்றுல் பயமாயிருக்கிறதே! அவருக்கொரு இழிவு வந்தென்றுல் அது நமக்கு அவமானமல்லவா! இப்போது என்ன செய்யப்போகிறீர்கள்?" என்று கண்ணீர்விட்டவாறு கேட்டாள்.

கிழவர் வாய்திறந்து பதிலே பேசவில்லை. "மாமா! மாமா!" என்று காமு எத்தனைக் கூப்பிட்டும் அவர் மவுனம் சாதித்ததன் அர்த்தமே அவளுக்கு விளங்கவில்லை. 'மாமா! மாமா! இச்சமயமா நாம் அவரை சோதிப்பது? அவருடைய குணம் உங்களுக்குத் தெரியாதா! இந்த அவமானத்தினுல் அவர் ஒருகால் தற்கொலை செய்துகொண்டால் என் கதி என்னவாவது...மாமா!....பதில் சொல்லுங்களேன்" என்று கத்தினுள்.

கிழவர் அப்போதும் மவுனமே சாதித்ததைக் கண்ட காமுவுக்குக் கிழவர்மீது கோபமும் ஆத்திரமும் உண்டாயின. கணவன் தனக்கு அனுகூலமாயில்லாதிருப்பினும் அவனுக்கொரு துன்பம் நேரிட்டது என்பதைக் கேட்டதும் அவள் உடலே பதறியது. மனது குழம்பித் தவித்தது. இன்னது செய்வதென்று தெரியாமல் திகைத்தாள். இதய ஓட்டத்தின் வேகம் அதிகரித்தது.


# ஜகன்மோகினி

19-வது ஆண்டு ஆரம்பம் ஜனவரி 1942

| | | | | |
|---|---|---|---|---|
| வருஷ சந்தா | உள்நாடு. ரூ. | 1-8-0 | வெளிநாடு | 2-0-0 |
| ஜீவிய சந்தா | ,, | 25-0-0 | ,, | 30-0-0 |
| தனிப்பிரதி | ,, | 0-2-0 | ,, | 12 காசு |

# 7

## பயங்கர விபத்தும் பத்னியின் தவிப்பும்

கமலா தன் வீட்டு வேலைகள் முற்றும் முடிந்தபிறகு தவருமல் தமிழ் பத்திரிகை படித்து வருவாள். உலக விஷயமும் அறிந்ததுபோலாகும்; பொழுதுபோக்கிற்கும் நல்ல சாதனமாகும் என்பது அவளது நோக்கம். காலையில் வந்த பத்திரிகையை வீட்டுக்காரி படித்ததும் கமலாவிடம் அனுப்புவது வழக்கம். அதுபோலவே அன்று வீட்டுக்காரி பத்திரிகை படிக்கும்போது அதில் கண்ட திடுக்கிடும் சம்பவத்தைப் பார்த்து நடுங்கியவாறு, 'கமலா! கமலா!' என்று கூப்பிட்டவாறு ஓடிவந்தாள்.

கமலா குழந்தைக்குத் தலைபின்னிக்கொண்டிருந்தாள். இத்தனை வேகமாக வீட்டுக்காரி கூப்பிட்டதும் மருண்டுபோய் "என்ன மாமீ!" என்ருள்.

வீட்டு:—கமலா! நேற்று உன் புருஷன் எப்போது ஊருக்குப் போனுர்?

கமல:—நேற்று பகல் வண்டிக்குப்போனுர். என்ன சமாச்சாரம் மாமீ!

வீட்டு:—"நேற்று பகல் 11 மணிக்கு இவ்வூரிலிருந்து புறப்பட்ட வண்டியின் எஞ்சின் மாலை மூன்று மணிக்கு ஏதோ ஒரு காட்டு வழியில் லயனை விட்டு விலகியதால் சேர்ந்தார்போல் ஐந்தாறு தொடர்கள் விழுந்துவிட்டதாம். ஓயாது பெய்த மழையினுல் லயன் கெட்டிருந்ததே காரணமாம். அதிக சேதமிருப்பதாகத் தெரிகிறது. பலருக்கு பலத்த காயம். சிலர் மாண்டார்கள். உடனே போலீஸார் விசாரணை செய்தும், உதவியளித்தும் வருகிருர்கள்" என்று பத்திரிகையில் வந்திருக்கிறதே. அவர் சென்ற வண்டி எது தெரியுமா!

இந்த பேரிடி போன்ற வார்த்தையைக் கேட்டதும் கமலத்தை அப்படியே நெருப்பில் வாரிப்போட்டதுபோல் இருந்தது. "என்ன மாமீ! ரயில் விழுந்துவிட்டதா! நேற்றுப் பகல் 11 மணி வண்டிக்குத்தானே அவர் போயிருக்கிருர். ஐயையோ! என்னை ஏதோ செய்கிறதே! மாமீ! மாமாவை விட்டு சற்று ரயில்வே ஸ்டேஷனில் விசாரிக்கச் சொல்லுங்களேன். ஐயோ! எனக்கும் மயக்கம் வரும்போலிருக்கிறதே! அவருக்கொருவிதமான விபத்தும் நேராதிருக்கவேண்டுமே! என்ன செய்வேன்!" என்று அலறியவாறு, வீட்டு எஜமானரிடம் ஒருநாளும் பேசியறியாதவள் தானே ஓடி அவர் காலில் விழுந்து வணங்கி, "மாமா! ஸ்டேஷனுக்கு டெலிபோன் செய்து சற்று விசாரியுங்களேன். உங்களுக்குப் புண்ணியமுண்டு. நேற்று அதே ரயிலில்தானே அவர் போயிருக்கிருர். என் வயிற்றில் ஏதோ சங்கடம் செய்கிறதே" என்று கண்ணீர் பெருகக் கெஞ்சினுள்.

வீட்டுக்காரர்:—அம்மா! நீ கவலைப்படாதே. நான் விடியற் காலையிலேயே இவ்விஷயத்தைப் படித்துத் திடுக்கிட்டேன். கர்ப்பிணியாகிய உன்னிடம் சொல்லிக் கலக்கக்கூடாதென்று நான் சொல்லவில்லை. புத்திகெட்ட அவள் சமயாசமயம் தெரியாமல் சொல்லிவிட்டாள். நான் நேரில் விவரமறிய ஆளையே அனுப்பியிருக்கிறேன். பகவான் உனக்கு ஒரு குறைவும் செய்யமாட்டார். உன் நல்ல மனத்திற்கு என்றும் நன்மையே உண்டாகும். நான் அதே ஸ்டேஷனுக்கு தந்தி வேறு அடித்திருக்கிறேன். அனேகமாக இன்னும் சற்றுநேரத்தில் பதில் வரும். போய் பகவானைப் பஜியம்மா" என்று வெகு வினயமாகவும், அன்புடனும் கூறித் தேற்றினர்.

இதுகேட்ட கமலா பதைத்தவாறு உள்ளே வந்தாள். அவளுக்கு இருக்கை கொள்ளவே இல்லை. "கவலைப்படாதே என்று வாய் ஒழுங்காய்ச் சொல்லிவிட்டாரே! நான் எப்படிக் கவலைப்படாமலிருக்கமுடியும்? சொல்லுகிறவர்களுக்கென்ன வெகு சுலபமாகச் சொல்லிவிடுகிறார்கள். அவஸ்தைப்படுகிறவர்களுக்குத்தானே தெரியும்? இறகு ஒடிந்த பக்ஷியைப்போல் நான் இப்போது என்ன செய்வேன்? என் மனத்தில் ஏதேதோ பயங்கரங்களெல்லாம் தோன்றுகிறதே! நான் எத்தனை மாற்றிக்கொள்ள முயன்றாலும் முடியவில்லையே! ஒரு வேளை காமுவுக்கு தந்தியடித்துக் கேட்டுப் பார்க்கலாமா" என்று தோன்றியதால், மீண்டும் வீட்டுக்காரரிடம் ஓடி, "மாமா! என்னுடைய நாத்தனார் வீட்டிற்குத்தான் அவர் போயிருக்கிறார். அங்கு வந்து சேர்ந்துவிட்டாரா என்று அறிவதற்கு அவர்களுக்கொரு தந்தி கொடுக்கலாமா! பதிலுக்கும் பணத்தைக் கட்டி கொடுக்கிறீர்களா! நான் உங்களை என் தகப்பனார்போல எண்ணித் தொந்தரவு செய்கிறேன் மன்னிக்கவேண்டும். என்னால் சகிக்கமுடியாத வேதனை செய்கிறது. கடவுள் எனக்கு என்ன சோதனையை விதிக்கப்போகிறாரோ தெரியவில்லை. பயங்கரமாகவிருக்கிறது...இதோ...இதுதான் விலாஸம்" என்றாள்.

"அம்மணீ! நானும் என் மகள் சாந்தாவைப்போலவே உன்னை நினைத்துத்தான் பேசுகிறேன். நீ சொல்லுகிற யோசனையும் வெகு சரியானதுதான். இதோ இப்போதே தந்தி யடிக்கிறேன். நீ கவலைப்படாதே! இச்சமயம் நீ உன் உடம்பையும் ஜாக்ரதையாகப் பார்த்துக்கொள்ளவேண்டும். உனக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. அடேய்! முருகேசா! இந்தா! இந்த தந்தியைத் தபாலாபீஸுக்குச் சென்று கொடுத்துவிட்டு வா! உடனே போ" என்று அனுப்பினர்.

மீண்டும் கமலாவைப் பார்த்து, "அம்மா! நீ போய் படுத்துக் கொள்ளு. பதில் தந்தி இப்போதே நல்ல சமாச்சாரமாக வந்துவிடும். பயப்படாதே! அனேகமாய் சோமுவே அடித்தாலும் அடிக்கலாம். அவனும் உனக்குமேல் அங்கு உன்னைப்பற்றிக் கவலைப்பட்டுக்கொண்டுதானிருப்பான். இவ் விபரீத விஷயத்தைக் கண்டு

நீ என்ன தவிப்பாயோ யென்று அவன் துடித்துக்கொண்டு, தானே தந்தியடித்தாலும் அடிப்பான். நீ தைரியமா யிரும்மா! போ... உன் பலஹீன நிலைமையில் நிற்காதே" என்று தகப்பனைவிட அதிகமான உருக்கத்துடன் கூறினர். கமலாவும் கவிழ்ந்த முகத்துடன் சென்றாள்.

"மூளைகெட்டத்தனமாய் பூர்ண கர்ப்பிணியிடத்தில் இம்மாதிரியான சமாச்சாரத்தை அசம்பாவிதமாய் மூட்டை கட்டிக்கொண்டு போய் சொல்லலாமா! இதுகூடவா உனக்குத் தெரியாது? அவளும் அவள் புருஷனும் உள்ள ப்ரேமையின் ஆழமென்ன! அவள் தற்போதுள்ள பலவீன நிலைமை என்ன? இப்படியும் அசட்டுத்தனம் செய்யலாமா! இந்த அதிர்ச்சி தாளாமல் ப்ரஸவ வேதனை எடுத்துவிட்டால் அன்னியராகிய நாம் என்ன செய்வது? முன் யோசனை வேண்டாமா! உன் காரியமெல்லாம் இப்படித்தான் அசம்பாவிதமாகவிருக்கிறது. ஐயோ! ரயிலில் போயிருக்கும்போது, ரயில் விழுந்துவிட்டதென்றால் யாருக்குத்தான் வயிற்றில் சங்கடம் செய்யாது? அவள் இதயம் எப்படித்தான் துடிக்கும் பாவம்! அவன் ஆபீஸிலிருந்து வருவதற்கு நேரமாகிவிட்டாலே வாசலிலேயே நின்று வழி பார்க்கும் மனுஷியாயிற்றே! இது தெரியவேண்டாமா உனக்கு? அவளைப் பார்க்கும்போது எனக்கு பயமாகவிருக்கிறது. ரயில் விபத்தென்றால் சாமான்யமானதா? யாருக்கு என்ன ஆபத்தோ, என்ன நேர்ந்திருக்கிறதோ! ஒன்றும் புரியவில்லை. நினைக்கும்போதே நடுங்குகிறது. முதலில் நீ அவளைவிட்டுப் பிரியாமல் கவனித்துக்கொள்ளு. உம்... போ! எத்தனை வயதானால் என்ன! எத்தனை குழந்தைகளைப் பெற்றும், குடும்பத்தில் அனுபவப்பட்டும் என்ன! உன் புத்தி என்னவோ மட்டந்தான். என்ன விழிக்கிறாய்?" என்று மனைவியை ஒரு அதட்டுப்போட்டார்.

அந்தம்மாள் அப்படியே நடுநடுங்கிப் போய்விட்டாள். "ஏதோ மன அதிர்ச்சியில் தெரியாது சொல்லிவிட்டேன். நீங்கள் அந்த இடத்திற்கு ஆளையாவது அனுப்புங்களேன்" என்றாள்.

"ஆமாம்! ரயில் போகும் லயன் சரியாகும் வரையில், போகும் ரயிலும் சரி, வரும் ரயிலும் சரி நேரத்திற்குச் சரியாகப் போகாது. தந்தி வந்ததும் பார்க்கலாம். நீ முதலில் கமலாவிடம் போ!" என்றார். உடனே அந்தம்மாள் கமலாவின் அறைக்கு வந்தாள். அங்கு குழந்தை மட்டும் மண்ணெண்ணெய் புட்டியைக் கொட்டி எண்ணெயில் நினைந்தபடி புட்டியை உடைத்துக் கண்ணாடித் துண்டை எடுத்து வைத்துக்கொண்டு விளையாடுவதைப் பார்த்து திடுக்கிட்டு, "கமலா! கமலா!" என்று கூப்பிட்டாள். அவளில்லை. உடனே குழந்தையை எடுத்து அதன் உடம்பை அலம்பி கண்ணாடித் துண்டுகளை எடுத்து சுத்தம் செய்தபிறகு குழந்தையுடன் வீதியில் வந்தாள். வீடு பூராவும் தேடியும் கமலாவைக் காணாததால் அவளுக்கு ஏற்

கெனவே உள்ள பயமும் திகிலும் அதிகரித்துவிட்டன. வீட்டில் எல்லோரையும் 'கமலா எங்கே! எங்கே!' என்று கேட்டாள். 'எனக்குத் தெரியாது; எனக்குத் தெரியாது' என்கிற பதிலே கிடைத்தது.

இச் செய்தி வீட்டுக்காரருக்கு எட்டியதும் அவர் மனைவியை முன்னிலும்பதின்மடங்கு அதிகமாக அர்ச்சனைசெய்யவாரம்பித்தார். 'புருஷனுக்கு ஏதோ விபத்து நடந்துவிட்டதாக எண்ணி அவளும் தற்கொலைசெய்துகொள்ளப் போய்விட்டாளோ! கால்களிலுள்ள சூல் வீக்கத்தால் நடக்கக்கூட முடியாதிருந்த மனுஷி எங்கு சென்றிருப்பாள்?' என்கிறபயம் எல்லோருக்கும் பிடித்துக்கொண்டதால்நடுங்குகிறார்கள். "பதில் தந்தியும் வந்து சேரவில்லையே! என்ன செய்வது!" என்று வீட்டுக்காரரின் தவிப்பு ஆயிரம்மடங்காக அதிகரித்தது.

கமலா எப்போதும் அனுவசியமாக வீட்டைவிட்டுப் போனதே கிடையாது. சில பெண்களைப்போல் எங்கும் வம்புக்கு அலையும் சுபாவமும் இல்லை. சாப்பாடு முடிந்தால் வம்பளக்க யாரேனும் கிடைக்கமாட்டார்களா என்கிற கோஷ்டியில் கமலாவின் கால் தூசி கூடச் சேராது. அப்படிப்பட்டவள் வீட்டில் காணவில்லை என்றால் என்னவென்று நினைப்பது?

"போதாக் குறைக்குப் பொன்னியம்மன் குறை" என்பதுபோல் மழை யொன்று ப்ரம்மாண்டமாகப் பெய்துகொண்டிருக்கிறது. என்ன செய்வார்கள் பாவம்! வீட்டுக்காரிக்கு "நாம் ஏன் சொன்னோம். ஏதோ மனத்தவிப்பின் வேகத்தில் சொல்லிவிட்டதானது பெருத்த விபரீதமாகிவிட்டதே" என்று மனத்தை அறுக்கிறது.

குழந்தை சிறிதுநேரம் ஏதோ பலாக்காகவிருந்துப்பின் "அம்மா! அம்மா!" வென்று கத்தவாரம்பித்தது. அம்மாவை எண்ணி அழும் குழந்தையை யார் சமாதானம் செய்துதான் ஓயும்? பிஸ்கேட்டும் பப்ரமெண்டும், கொடுத்தால் வீசி எறிகிறது. பொம்மையைக் கொடுத்தால் உடைத் தெறிகிறது. சொப்புக்களையோ தொட்டும் பார்க்காது. "அம்மா! அம்மா! அம்மா எங்கே போனு?" என்று பிடிவாதம் செய்து கத்துவதை வீட்டுக்காரம்மாளால் சமாதானமே செய்ய முடியவில்லை. வெளியில் பலாக்குக் காட்டலாம் என்றாலோ பாழாய்ப்போன மழை விடவில்லை. என்ன செய்வாள் பாவம்! குழந்தையை வைத்துக்கொண்டு தவிக்கிறாள். "தந்தி வரவில்லையே!" என்று வீட்டுக்காரர் ஆவலே வடிவாய் உள்ளுக்கும் வாசலுக்குமாக உலாவுகிறார். மனைவிக்கு விழும் வசவு கணக்கு வழக்கில்லை. மனதோ பதைக்கிறது.

வீட்டுக்காரரிடமிருந்துவந்த கமலா உள்ளேவந்தாள். பகவானை வேண்டிக்கொண்டாள். மனது நிலை இடங்கொள்ளவில்லை. தாமரை நீர்போல் தவிக்கும் வேகத்தில் குழந்தையை அடியோடு மறந்தாள். அப்போது கோயிலில் பூஜை மணியடிக்கும் இன்ப ஒலி, "ஓம்... ஓம்"...என்று ப்ரணவ மந்திரத்தை உபதேசிக்கும் ஞானகுருவின்

அபாரமான வாக்கின் சப்தம்போல் கமலாவின் காதில் கேட்டதும் பைத்தியக்காரியைப்போல் ஒரே ஓட்டமாக மழையில் கோவிலுக்கு ஓடினாள். சொட்டச் சொட்ட நனைந்துவிட்டதும் அவளுக்குத் தெரியவில்லை. அவள் உள்ளமும் உடம்பும் பற்றி எரியும் வேகத்தில் ஒன்றுமே தோன்றாது, எந்திரப் பதுமைபோல் கோபுரவாசலையடைந்ததும், அன்றொரு நாள் வஸந்த உத்ஸவ தோட்டத்தில் பார்த்த அதே பெருவியாதிப் பிச்சைக்காரி'அம்மா! பசி உயிர் போறதே ஒரு காலணா கொடேன்'' என்று கூவிக்கொண்டே பின்னால் ஓடிவந்தாள்.

அன்று தோட்டத்தில் கமலாவுக்கு ஏற்பட்ட வெறுப்பும், அசங்கியமும், குமட்டலும் இன்று ஒன்றுமே தெரியவில்லை. அவள் நினைவு அவளுக்கிருந்தால்தானே! பிச்சைக்காரியின் குரலைக் கேட்டு திரும்பிப் பார்த்தாள்....பதில் பேசாமல் மடியிலிருந்த ஒரு அணாவை அவள்கையில்கொடுத்துவிட்டு அவளை விரைக்க விரைக்கப்பார்த்தாள்.

"என்னம்மா பாக்கிறீங்க? துர்வியாதிக்காரின்னு பாக்கறீங்களா!" என்றாள். கமலா ஒரு க்ஷண நேரம் ஏதோ நினைத்தவள் தம்பித்து நின்றாள். "பகவான் எங்குமிருப்பவனாயிற்றே! உன்னுடைய வியாதி நிறைந்த இதயத்திலும் பரிபூர்ணமாக இருப்பானல்லவா?.... ஆம்...இருப்பான்...என் கணவனுக்கு ஒருவிதமான விபத்தும் நேராமல் காக்கும்படி வேண்டிக்கொள்ளு. என்ன! தெரியுமா!''.... என்றுபைத்தியம்போல் கூறிக்கொண்டே கோயிலுக்குள்சென்றாள்.

பகவத் ஸன்னிதானத்தில் ஆனந்தமான தரிசனம் கிடைத்துக்கொண்டிருந்தது. கமலா உடம்பு தெரியாமல், தோத்திரம் செய்கிறாள். பாடுகிறாள். கண்ணீர்விட்டுக் கதறுகிறாள். "எனக்குப் பதிபிக்ஷைகொடுத்துக் காப்பாற்று, என் மங்கல்யம் மலைபோல் வளர வேண்டிய அனுக்கிரகம் செய்துக் காப்பாற்று. என் கணவருக்கு ஒரு விபத்துமின்றிக் காப்பாற்று. தாயே! ஜகத்ஜனனீ!...கருணாசாகரீ! ஞானம்பிகே! உன் இனத்தவளாகிய என்னைக் கைவிடாதே'' என்று வேண்டியபடியே,

உன்னை யன்றி யின்ப முண்டோ
    உலகமிசை வேறே?
பொன்னை வடிவென்று டையாய்!
    புத்தமுதே! திருவே!
மின்னொளி தரு நன்மணிகள்
    மேடையுயர்ந்த மாளிகைகள்
வன்னமுடைய தாமரைப்பூ
    மணிக்குள முள்ள சோலைகளும்
அன்னம் நறுநெய் பாலும்
    அதிசய மாத்தருவாய்!
நின்னருளை வாழ்த்தி என்றும்
    நிலைத்திருப்பேன் திருவே!

—பாரதியார்.

என்கிற பாடலைப்பாடி உள்ளங்குழையத் துதிப்பதைக் கண்ட அங்கு இருந்த சில சேவார்த்திகள் கமலாவை 'ஒரு ஞானப் பயித்தியம்!' என்று எண்ணினார்கள். கமலாவின் தவிப்பு யாருக்குத் தெரியும்? இவள் சன்னதியை விட்டுப்போகும் வழியே இல்லாததால் அர்ச்சகர், "அம்மா! நேரமாயிற்று. நீங்கள் வெளியேபோங்கள் கதவைப் பூட்டவேண்டும்" என்றார்.

அதன்பிறகே தன் உணர்வு பெற்ற கமலா "கதவைப் பூட்ட வேண்டுமா....இதற்குள்ளாகவா! ஸ்வாமீ! உங்களை நமஸ்கரிக்கின்றேன். "தீர்க்கசுமங்கலீபவ" என்று வாழ்த்துங்கள்; ஆசீர்வதியுங்கள்" என்று கூறி அர்ச்சகரின் பாதத்தில் விழுந்து வணங்கினாள்.

அர்ச்சகர் அவளைப் பயித்தியம் என்று நினைப்பதில் வியப்பென்ன இருக்கிறது? இருப்பினும் அவர் வாயார, "தீர்க்கசுமங்கலீபவ, தீர்க்கசுமங்கலீபவ!" என்று மூன்று நான்கு முறைகள் சொன்னார். அப்போதும் கமலா எழுந்திருக்கவில்லை. "அம்மா! எழுந்திரு. தீர்க்கசுமங்கலீபவ...எழுந்திரு" என்றார்.

தன்னைப் பார்த்துப் பரிகஸிக்கின்றார்கள் என்பதை அவள் உள்ளம் அறிந்தும் அதை உணரவில்லை. எழுந்து கைகூப்பிய வண்ணம், 'ஸ்வாமீ! நீங்கள் நினைக்கிறபடி நான் பயித்தியக்காரியல்ல. என் புருஷர் நேற்று 11 மணி வண்டியில் ஊருக்குச் சென்றார். அந்த ரயில் வழியில் தண்டவாளத்தைவிட்டுப் பிசகி விழுந்துவிட்டதென்கிற பயங்கரத்தை இன்று பத்திரிகையில்பார்த்து என்னுள்ளம் பதைக்கிறது. என்னிலைமை தத்தளிக்கின்றது. அவருக்கு ஒரு விபத்தும் நேராமல் சுகமாக வந்து சேரவேண்டும். இதுதான் என் கோரிக்கை. அம்பிகை அருள்பாலிக்க வேண்டி அவளிடம் முறையிடவே நான் வந்தேன். சிரிக்காதீர்கள்" என்றாள்.

அர்ச்சகரின் காதில் ரயில் விழுந்துவிட்டதென்ற சப்தம் காதில் பட்டதுதான் தாமதம் மிச்ச வார்த்தைகள் அவர் காதிலேயே விழவில்லை. "ஐயையோ! நேற்று அதே வண்டியில்தானே என் மனைவியும் மகளும் ஊருக்கு போனார்கள். அந்த வண்டியா விழுந்துவிட்டது. அடாராமா!...அம்பிகே...தாயே!....அவர்களைக் காப்பாற்று என்னை சோதிக்காதே...அடேய்!....கோயில் கதவே பூட்டிக் கோடா!" என்று இன்னொருவருக்கு உத்திரவிட்டுவிட்டு ஒரே ஓட்டமாகத் தலைதெறிக்கப் புலம்பிக்கொண்டே ஓடினார்;

"அடாடா! என்னைப்போல் தவிக்கும் ஆத்மா இங்கும் இருக்கிறதா?" என்று எண்ணியபடியே மற்ற சன்னிதிகளிலும் சேவித்து பிரார்த்தனை செய்துகொண்டு வெளியே வந்தாள். மழை நின்றபாடே இல்லை. வீட்டுக்குப் போக மனம் வரவில்லை. தபாலாபீஸுக்குப்போய் வீட்டுக்காரருக்கு தந்தி வந்ததா என்று அறியும் பொருட்டு ஒருவிதமான புதிய தைரியமும் சக்தியும் அவளைத்தள்ளிச் கொண்டு சென்றது.

வீட்டில் அவளைக் காணாது தவிப்பவர்களுக்கு இவளுடைய அலங்கோலம் எப்படித்தெரியும்? தந்திப்யூன் "சார்! தந்தி" என்றான். அதற்கே காத்துக்கொண்டிருந்த வீட்டுக்காரர் தந்தியை வாங்கியதும், "இதென்ன உடைத்திருக்கிறதே" என்று கேட்டார்.

தந்திப்யூன்:—சார்! இந்தவீட்டிலிருக்கும் கமலம்மாள் சொட்டச் சொட்ட மழையில் நனைந்து வந்து உங்கள் பேருக்கு தந்தி வந்ததா? என்று கேட்டார்கள். அப்போது வரவில்லையாதலால் இல்லை என்றோம். பிறகு அரை மணிக்கெல்லாம் வந்துவிட்டது. அவர்கள் அதை வாங்கித் தானே உடைத்துப் பார்த்ததும் அப்படியே மூர்ச்சையாகி தபாலாபீஸிலேயே விழுந்துவிட்டார்கள். உங்களை அர்ஜண்டாக போஸ்ட்மாஸ்டர் கூப்பிடுகிறார்"—என்றான்.

இதைக்கேட்ட யாருடைய இதயந்தான் துடிக்காது? தந்தியை அவசரமாகப் படித்தார்.

"ஐயா!

எத்தனையோ பேயர்கள் காயமடைந்திருக்கிறார்கள். சிலர் போய்விட்டார்கள். சவுக்யமாக உள்ளவர்களிடம் உமது தந்தியைக் காட்டினேன். ஒருவரும் தங்களுக்கில்லை என்கிறார்கள். காயம்பட்ட சிலரை அருகிலுள்ள ஆஸ்பத்திரிக்கு அனுப்பியிருக்கிறோம். மற்ற விவரம் ஏதாவது தெரிந்தால் உடனே தந்தி யடிக்கிறேன்.

ஸ்டேஷன் மாஸ்டர்"

படித்தவுடனே வீட்டுக்காரர் அப்படியே ஆடி உட்கார்ந்துவிட்டார். அவர் உடம்பே கிடுகிடென்று ஆடுகிறது. அவருடைய மனைவியின் உள்ளம் துடிதுடிக்கிறது. "அம்மா! அம்மா!" என்று கத்தும் குழந்தையின் சப்தமும், மழையின் பேரிரைச்சலும் போட்டியிடுகின்றன. என்ன செய்வது?


# கலா நிலயம்

## 57-வது மோகினி பிரசுரம்

11 அழகிய படங்களுடன் கூடிய

இனிய துப்பறியும் நாவல்

ரூ. 1—4—0.

# திருவையாறு
# பஞ்சநதீச்வரர் கோவில்

"ஸ்ரீவத்ஸன்"



குளமும், நீராழிமண்டபமும்.



மேற்கு கோபுரவாசல்.



அம்பிகை சந்நிதி.



கிழக்கு கோபுரவாசல்.



மதில் மீதுள்ள சிற்பங்கள்.

PRINTED & PUBLISHED BY V. M. PARTHASARATHY
AT "JAGANMOHINI" PRESS, 26, CAR STREET, TRIPLICANE, MADRAS.

Regd. No. M. 2210




முதல்தர ஆரோக்யத்தை தவறாமல் தருவதோடு, வியக்கத்தக்க வீர்யத்தையும், வலிமையையும் அதிகரிக்கும்.

ஓரேமுறை உபயோகத்தில் உங்களுக்கு பூரண திருப்தியளிக்கும்.

பாட்டில் விலை

ரூபா. 5.

நம் நாட்டிலேயே

செய்யப்பட்ட

உயர்தர

கற் பலகைகள்.

உங்கள் குழந்தைகள்

கண்டால்

கூத்தாடுவார்கள்

இன்றே வாங்குங்கள்.

நாங்கள் ஷை ஸ்தாபனத்திந்து கடப்பை, பெல்லாரி, சேலம், கோயமுத்தூர், வட ஆற்காடு, தென்ஆற்காடு ஜில்லாக்களுக்கு பிரதான ஏஜண்டுகள்:

- முற்றிலும் இந்தியஸ்தாபனம்
- உறுதியான தன நிலைமை.
- பாலிஸிதார்கள் உரிமைகளை உடனே தீர்ப்பது.

செல்வாக்குள்ள விநியோகஸ்தர்களும் ஏஜண்டுகளும் தேவை.

THE PREMIER TRADERS,

PHONE: 4611.

11-12, 1st Line BEACH, MADRAS.